# அல்ஹஸனாத்

الحسنات إسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السيلانية .

● மலர்: 17 இதழ்: 12 ● ஹிஜ்ரி 1410 ஷஃபான் ●

முக்கியமானது
கட்டாயக் கடமை
ள்.
பேசுவதும் வேறு
வேறு
த்பாவுக்கு
முக்கியத்
யத்தை

## மியூஸியத்தை நோக்கி விரைந்து செல்லும்

# கம்யூனிஸம்

நானும் ஷஹீதாகி
என் தந்தையைக்
காண வேண்டும்!

● ஆப்கான் சிறுவனின் அவா

விலை
7.50

இஸ்லாமிய இலட்சியக்குரல் **AL HASANATH Islamic MonthlY**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

# அல்ஹஸனாத்

இஸ்லாமிய இலட்சிய ஏடு

வெளியீடு

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி
Sri Lanka Jama'ath-e-Islami
137, Devanampiyatissa Mawatha
(Forbes Road)
Colombo-10. (Sri Lanka)
Phone: 686030-692760

அச்சுப் பதிவு

ஏ. பீ. எம். அச்சகம்
320, தெமட்டகொட வீதி,
கொழும்பு-9. (இலங்கை)
தொலைபேசி: 698771

விலை விபரம்

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ரூ | 7.50 |
| வருட சந்தா | ரூ | 100.00 |
| (உள்நாடு) | | |
| இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, சிங்கப்பூர், மலேசியா | | 300.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் | | 350.00 |
| ஏனைய நாடுகள் | | 400.00 |
| (வெளிநாடு) | | |


உள்ளே.....


| | பக்கம் |
|---|---|
| அணையாத தீபம் | 2 |
| அல்குர்ஆன் விளக்கம் | 3 |
| போலி நபிகளை ஏற்று..... | 7 |
| இப்படியானதொரு முடிவு ..... | 9 |
| வளர்க்கும் நீங்களே அழித்து விடாதீர்கள் | 11 |
| சத்தியப் பிரச்சாரத்தில் இஸ்லாமியப் பெண்கள் | 13 |
| தௌஹீதின் முழு உருவம் இஸ்லாத்தில் மட்டுமே உண்டு | 19 |
| லார்க்கன் ஜெமீலா முஸ்லிமானார் | 25 |
| இஸ்லாமிய அரசியல் | 27 |
| போட்டி | 30 |
| இன்னும் பல | |




ஆசிரியர் கருத்து

## குத்பாவைக் குழப்பவேண்டாம்!

இஸ்லாமிய சமூக அமைப்பை உருவாக்கி அதை நிறுவிடுவதற்காக இஸ்லாம் செய்துள்ள ஏற்பாடுகளில் ஜும்ஆத் தொழுகையும் ஒன்று. ஐவேளைத் தொழுகைகளில் ஜும்ஆத் தொழுகை மிகவும் பிரதானமானது.

வாரம் ஒருமுறை வெள்ளிக்கிழமை ளுஹர் நேரத்தில் அது பேருரையுடன் ஆரம்பமாகும் இரண்டு ரக்அத் வணக்கத்தில் தொழுகையைப் போலவே குத்பாவும் மிகமுக்கியமானது. இதனாலேயே குத்பாவுக்குச் சமுகமளிப்பதும் கட்டாயக் கடமையாகும் என்று புகஹாக்கள் கருதுகிறார்கள்.

ஜும்ஆ குத்பாவை நிகழ்த்தும்போது பேசுவதும் வேறு வேலைகளில் ஈடுபடுவதும் கூடாது. அந்த நேரத்தில் வேறு இபாதத்துகளில் ஈடுபடாது மௌனமாயிருந்து குத்பாவுக்கு செவிமடுப்பதும் வாஜிபாகும் என்பது குத்பாவின் முக்கியத்துவத்தை மேலும் உணர்த்துகிறது.

முஸ்லிம்களுக்கு அவர்களின் வாழ்க்கையின் இலட்சியத்தையும் அதனை அடையும் துணைபுரியும் வழிமுறைகளையும் உணர்த்தும் பயனுள்ள ஓர் இபாதத்தாக நபி (ஸல்) அவர்களின் காலம் முதல் குத்பா விளங்கிவருகிறது. அதில் தௌஹீத், தக்வா, ஆகிரா பற்றிய போதனைகள் இடம்பெறுவதோடு உம்மத்தாரின் இவ்வுலக பிரச்சினைகளுக்கும், அவர்களின் பிரச்சினைகளுக்கும் விளக்கமும் தரப்பட்டு வந்துள்ளது.

இந்த வகையில் வரலாறு நெடுகிலும் முஸ்லிம்களிடையே இஸ்லாமிய அறிவையும் இறையச்சத்தையும் வளர்ப்பதோடு சகோதரத்துவத்தையும், சமூக நலன் பாதுகாப்பையும் பேண உதவும் ஒரு சிறந்த ஏற்பாடாகவும் குத்பா விளங்கி வந்துள்ளது.

இஸ்லாம் கூறும் ஏனைய அமைப்புக்களைப் போல குத்பாவும் இஸ்லாமிய வரம்பிற்குள் அமைந்தால் மாத்திரமே அதிலிருந்து இத்தகு பயன்களை எதிர்பார்க்க முடியும். எனவே இஸ்லாமிய மரபு பேணப்படாவிட்டால் அதன் இஸ்லாமிய பயன்கள் கிடைக்காது. அண்மைக் காலத்தில் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் சில குத்பாக்கள் இதற்கு நல்ல உதாரணங்களாகவுள்ளன.

குத்பாப் பேருரையின்போது சில கதீப்மார்கள் தௌஹீதுக்கு முரணான கொள்கைகளையும் இஸ்லாமிய சாயம் பூசப்பட்ட பிழையான கருத்துக்களையும் நடைமுறைகளையும் வலியுறுத்தியதாக அறிகிறோம். வேறு சிலரின் குத்பாவைக் கேட்ட மக்கள் மத்தியில் அடிதடி ஏற்படக் காரணமாகினர். இன்னும் சிலர் தனிப்பட்ட சிலரைப் பெயர் கூறியும் பெயரைச் சொல்லியும் சொல்லாமலும் தாக்கிப் பேசினார்களாம்! மற்றும் சிலர் ஆட்சியாளரின் அல்லது தங்களது கட்சியின் அல்லது குறுகிய நோக்கத்துக்காக தனிப்பட்ட சிலரின் புகழைப்பாட குத்பாவைப் பயன்படுத்துகிறார்களாம். இவை அனைத்தும் கண்டிக்கப்பட வேண்டியவை. இப்படிச் செய்வதால் குத்பாவின் பயன் இல்லாமற்போக இடமுண்டு.

அதேவேளை குத்பாவில் உலகளாவிய இஸ்லாமியப் போதனைகளைச் சொன்னால், சமூகப் பிரச்சினைகளை இஸ்லாமிய நோக்கில் விளக்கினால் ஆத்திரப்படுபவர்களுமிருக்கின்றார்கள். இத்தகையவர்கள் குத்பாக்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று இவர்கள் கருத்துத் தெரிவிப்பதையும் கேட்க முடிகிறது.

இஸ்லாமிய குத்பாவின் இலட்சியத்தைப் புரியாது இவ்வாறு மண்டைக் குரல் எழுப்புவதும் பிழையானதே. இவர்கள் நினைப்பதுபோல குத்பாவில் சமூகப் பிரச்சினைகளைப் பேசக் கூடாது என்றால் அதுவும் குத்பாவின் பயன்களை இல்லாதாக்கிவிடும்.

ஆகவே கதீப்மார்களும் குத்பாவைக் கேட்போரும் குத்பாவின் இஸ்லாமிய மரபுகளை அறிந்து அவற்றைப் பேண வேண்டும். அப்படிச் செய்யாது குத்பாவைக் குழப்புவது மிகப் பெரிய கொடுமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோடிகள் — 3

# அணையாத தீபம்

# அப்துல்லாஹ் அஸாம்

'அஜ்வா'

பெரியார் ஹஸனுல் பஸரி (ரஹ்) யின் குரலும், அபூ ஹனீபா, ஸுப்யான் அத்தவ்ரீ (ரஹ்) ஆகியோரின் பேச்சும் நாவும், அப்துல்லாஹ் பின் முபாரக் (ரஹ்) அவர்களின் ஜிஹாதும், இப்னு தைமியா (ரஹ்) அவர்களின் வீரமும் துணிவும் என்பவற்றோடு இந்த நூற்றாண்டு கண்ட இஸ்லாமிய எழுச்சி இயக்க முன்னோடிகளான இப்னு பாதீஸ், ஹஸனுல் பன்னா, செய்யித் குதுப், மௌதூதி (ரஹ்) ஆகியோரின் நுண்பண்புகளின் கூட்டுமொத்தமான உருவமாகவும் அமைந்தவர் அஷ்ஷஹீத் ஆப்கான் டாக்டர் அப்துல்லாஹ் அஸாம் (ரஹ்) அவர்கள்.

பலஸ்தீனில் பிறந்த இவர், ஆரம்பக் கல்வியை முடித்துக் கொண்டபின் அல் அஸ்ஹரில் இஸ்லாமியவியலில் கலாநிதிப் பட்டம் பெற்றார். வாலிபப் பருவத்திலேயே இஸ்லாமிய இயக்க உணர்வு கொண்ட இவர் இஸ்லாமின் தொடர்பாகப் பூரண அறிவான இஸ்லாமிய நாயகமாக மாறினார். பிறகுதான் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக விரிவுரையாற்றிய காலத்திலும் ஜும்ஆப் பள்ளிகளில் மேடைகளில் உரை நிகழ்த்தியபோதும், இஸ்லாம் பற்றிய இவரது ஆழமான கருத்துக்களை மக்கள் கேட்டிருந்தனர். மனிதர்களின் விமோசனத்துக்குரிய ஒரே வாழ்க்கை முறை இஸ்லாம் ஒன்று மட்டுமே என்று மக்களுக்கு அழுத்தி விளக்கியவர் டாக்டர் அவர்கள். அந்த இஸ்லாத்தைச் செயல்படுத்த பல முறையான முயற்சிகள் வேண்டும்; அதே வேளை அல்லாஹ்வின் தீனை நாட்டுவதற்கு இஸ்லாமிய ஜிஹாதில் ஈடுபடுவதும் தவிர்க்க முடியாத ஒரு தேவை என்று வலியுறுத்து கூறியவர்கள்.

ஜாஹிலிய்யத்துக்கு எதிராக ஜிஹாத் செய்து இரத்தம் சிந்தி, சோதனைகளுக்கு ஆளாகாமல், இஸ்லாத்தைத் தாபிக்கலாம் என்று கருதுவோர் பகற்கனவு காண்கின்றார்கள்! இவர்களுக்கு இஸ்லாம் என்றால் என்ன என்பது தெரியவே தெரியாது! உலக சீர்திருத்தத்துக்கும், சமய, கலாசார பாதுகாப்புக்கும் துணைபுரியும் ஒரே வழி ஜிஹாத் ஆகும். ஆகவே ஷஹீதாக உயிரைவிட விரும்பி இஸ்லாத்துக்காக அனைத்து வழிகளிலும் பாடுபடுங்கள். அதில் தான் உங்களுக்கு வாழ்விருக்கிறது. ஜிஹாதின் வழியில் தொல்லைகளையும் துயரங்களையும் பொறுப்புக்கள் அனைத்தையும் பொறுமையுடன் தாங்கிக் கொள்ளத் துணிவோரின் வாழ்க்கை அற்ப சுகபோகங்களில் மூழ்கிடும் வாழ்பவரின் வாழ்க்கையைவிட இன்பம் நிறைந்தது" என்று அவர் எப்போதும் மக்களுக்கு உணர்த்தியுள்ளார்.

பாலஸ்தீனத்தில் 'யூத ஸியோனிஸ்டுகளுக்கு எதிரான ஜிஹாதில் முன்னணியில் நின்ற அப்துல்லாஹ் அஸாம் அவர்கள் ஆப்கானில் ரஷ்யச் செம்படையினை எதிர்த்து, முஜாஹிதீன் அதிகம் அர்ப்பணிப்புடன் போராடுவதை நேரில் கண்டபோது தனது பட்டம் பதவிகள் அனைத்தையும் உதறித் தள்ளிவிட்டு மனைவி மக்களோடு அதற்காகப் புறப்பட்டார். யுத்தத்தின் காரணமாக அநியாயமாகத் தம் சொந்த நாட்டை விட்டு விரட்டப்பட்டு அகதிகளாக வாழ்ந்துகொண்டிருந்த ஆப்கான் மக்களும் தஞ்சம் புகுந்திருந்த பெஷாவர் வந்துசேர்ந்த அவர்,

''நான் ஷஹீதின் பெஷாவரில் கொலை செய்யப்பட வேண்டும் அல்லது ஆப்கானில் எனது உயிர் பிரியவேண்டும்; அப்படியில்லாவிட்டால் எதிரிகள் என்னை விரட்டிவிட்டுக் கைதியாக இங்கிருந்து வெளியேற்ற வேண்டும். இந்த மூன்றில் ஒன்றுதான் என்னை இந்த இடைவிடாப் பயணத்திலிருந்து நிறுத்த முடியும்'' என்று பிரகடனமாகக் கூறினார்.

இவ்வாறு நடந்துகொண்ட அவர் எப்போதும் இஸ்லாமிய அமைப்புகளையும் ஜிஹாதையும் பற்றியே பேசுவார். அவரது 'அல்ஜிஹாத்' பத்திரிகை இப்போதும் இருக்கிறது. இரவு பகலாக அவர் சிந்தித்து எழுதிக்கொண்டிருந்தார். குடும்பத்தவர்களுடன் பேசும்போதும் அவர்களுடன் அவர் கூட வாழ்வது சில நிமிடங்கள் மட்டும்தான். அந்த நேரங்களில் கூட இஸ்லாத்தைச் செயல்படுத்தி மனிதன் அல்லாஹ்வின் கலீபாவாக வாழும் ஆற்றல் அவனுக்கு ஏற்படுவது ஒவ்வொரு மனிதனின் பிரச்சினைகளுக்கான தீர்வாகும். இருந்தும் நடைமுறை நிற்கும் எதிரிகளுடன் எல்லா நாளிலும் பொருதி அவர்களை முறியடிக்கும் வெற்றி சொல்லப்போனது ஒன்றே இதற்கான வழியாகும். அதற்கே நீங்கள் அல்லாஹ்வின் போராளிகளைப் பின்பற்றி வாழ்ந்து இந்த மகத்தான பணிக்கு அர்ப்பணியுங்கள்' என்றே அவர் தன் மனைவி மக்களுக்கு உபதேசம் புரிவார்.

'மார்க்கத்தில் ஜிஹாதின் நிலை சரிகாண அவன் செய்யும் தியாகங்களின் அளவைப் பொறுத்தது' என்று அழுத்தமாகக் சொன்னார்.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல் குர்ஆன் விளக்கம்

# இஸ்ராவும் மிஃராஜும்

-ஷஹீத் ஸெய்யித் குதுப் (ரஹ்)

தனது அடியாரை, அவருக்கு நமது அற்புதங்களைக் காட்டுவதற்காக, ஓர் இரவு மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து, அதன் சுற்றுப்புறங்களை நாம் ஆசிர்வதித்துள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு அழைத்துச் சென்றவன் மிகவும் தூயவன். நிச்சயமாக அவன் நன்கு கேட்பவனாகவும் நன்கு உற்று நோக்குவோனாகவும் இருக்கிறான் (17:1)

இஸ்ராவும் மிஃராஜும் ஒரே இரவில் நிகழ்ந்தவை. மக்காவிலுள்ள மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து பைதுல் முகத்தஸில் உள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு நபி (ஸல்) அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டது இஸ்ரா எனப்படுகிறது. அங்கிருந்து வானுலகுக்கும், அதற்கப்பால் 'ஸித்ரதுல் முன்தஹா' என்ற இடத்துக்கும் அண்ணார் அழைத்துச் செல்லப்பட்டது மிஃராஜ் என அழைக்கப்படுகிறது.

இஸ்ரா எங்கிருந்து ஆரம்பமானது என்பது பற்றிக் கருத்து வேறுபாடுண்டு. மஸ்ஜிதுல் ஹராமிலிருந்தே ஆரம்பமானது என்ற கூற்றுக்கு ரிவாயத்துகளும் உண்டு. அபூதாலிபின் மகள் உம்முஹானி (ரழி) அவர்களின் வீட்டிலிருந்தே நபி (ஸல்) அவர்களின் இஸ்ரா ஆரம்பமானது என்றும் சில ரிவாயத்துகள் உணர்த்துகின்றன.

இஸ்ரா மிஃராஜ் என்ற நிகழ்ச்சிகள் நடந்த போது நபி (ஸல்) விழிப்புடனிருந்தார்களா அல்லது இவை அண்ணாரின் கனவில் நிகழ்ந்தவையா என்பதிலும் சர்ச்சையுண்டு.

### நிகழ்வு

நபி (ஸல்) அவர்கள் உம்முஹானி (ரழி) அவர்களின் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்து விட்டு மஸ்ஜிதுல் ஹராமுக்குச் சென்றார்கள். அங்கு ஹிஜ்ர் என்ற இடத்தில் அண்ணார் உறக்கத்துக்கும் விழிப்புக்கும் இடைப்பட்ட நிலையில் இருந்த போது ஜிப்ரீல் (அலை) அவர்கள் முஹம்மத் (ஸல்) அவர்களை, இஸ்ராவுக்கும் மிஃராஜுக்கும் அழைத்துச் சென்றார்கள் என்பதே ஹதீஸ்களிலிருந்து தொகுக்கமுடிந்த மிகவும் பொருத்தமான முடிவாகும்.

நபி (ஸல்) அவர்களுக்கு இஸ்ராவும் மிஃராஜும் நிகழ்ந்தது நிச்சயம் என்று தெரிந்த பின்னரும் அவை நிகழ்ந்த முறையைப்பற்றிக் கருத்து வேறுபாட்டினை வளர்த்துக் கொண்டு செல்வதில் பொருளில்லை. இவை அண்ணாரின் விழிப்பு நிலையில் நிகழ்ந்தவை என்றோ கனவின் போது நிகழ்ந்தவை என்றோ நம்புவதால் எவ்வித பாதகமும் ஏற்படப் போவதுமில்லை.

### சாத்தியமானது

அல்லாஹ்வின் மகத்தான ஆற்றல்களையும் நுட்பத்திறன் சிறப்பியல்புகளையும் அறிந்தவர்களுக்கு இத்தகைய சம்பவங்களை நம்புவதில் எவ்வித சங்கடமும் இராது. மனிதனின் அறிவையும், ஆற்றல்களையும், அவனது அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு அல்லாஹ்வின் அறிவையும், ஆற்றலையும் மதிப்பீடு செய்வது எந்தவகையிலும் பொருந்தாது. ஏனெனில் மனிதனின் அறிவையும், ஆற்றல்களையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது அசாத்தியமானவை என்று கருதத்தக்கவை அனைத்துமே அல்லாஹ்வின் அறிவோடும், ஆற்றல்களோடும் ஒப்பிடும்போது மிகவும் சாத்தியமானவைகளாகவே விளங்கும்.

நுபுவ்வத் என்பது மலஉல் அஃலா என்ற அறியப்படாத இடத்துடன் அமையும் நேரடித்தொடர்பாகும். இது சாதாரண மனிதர்களின் அறிவுக்கும், அனுபவத்துக்கும் அப்பாற்பட்ட முறையிலேயே நிகழ்கிறது. எனவே, இவ்விதமான ஒரு தொடர்புக்குத் தெரிவு செய்யப்பட்ட நபி (ஸல்) அவர்கள், மக்களுக்குத் தெரிந்த அல்லது அவர்களால் புரிந்துகொள்ள முடியாத ஒரு முறையில் இஸ்ரா-மிஃராஜின் போது தொலை தூரத்தில் உள்ள இடங்களுக்குச் சென்றதும், மற்றோர்களுடன் தொடர்பு கொண்டதும் நம்ப முடியாத விஷயங்களல்ல.

### ஆதாரம் வேண்டாம்

அன்று இவற்றைப்பற்றிக் கேள்விப்பட்டவர் நம்பமுடியாது என்று குதர்க்கம் புரிந்தார்கள், ஆனால் நபி (ஸல்) அவர்கள் இஸ்ராவுக்கும், மிஃராஜுக்கும் சென்றுவந்ததாகச் சொல்கிறார்கள் என்று அண்ணாரின் எதிரிகள் சொல்லக்கேட்ட அபூபக்கர் ஸித்தீக் (ரழி) அவர்கள், கேட்ட மாத்திரத்திலேயே அதை முழுமையாக நம்பினார்கள்.

''இதைவிட அற்புதமான விஷயங்களில் அவரை நான் நம்புகிறேன். இந்த விஷயங்களில் மட்டும் அவரை நம்பாமலிருக்க முடியுமா'' என்று அடித்துக்கூறியதுடன் மட்டும் நபி (ஸல்) அவர்களுக்கு இவ்வித அனுபவங்கள் நிகழ்வது முற்றிலும் சாத்தி

மானது என்று உறுதியாக எடுத்துரைத்தார்கள்.

'இந்தச் சம்பவங்களை எல்லா மக்களும் நம்பமாட்டார்கள். ஆகவே நீங்கள் இவற்றைப் பற்றி மக்களிடம் கூறவேண்டாம்' என்று உம்முஹானி (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு ஆலோசனை கூறினார்கள். ஆனாலும் நபி (ஸல்) அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட அற்புதமான அந்த அனுபவங்களைப்பற்றி, மிகவும் துணிவோடு மக்களிடம் கூறினார்கள். அன்னாருக்கு அருளப்பட்ட போதனைகளைப்பற்றியும், ஏற்பட்ட அற்புதமான இவ்வனுபவங்களைப் பற்றியும் நபி (ஸல்) அவர்களுக்கிருந்த உறுதி இவ்வாறு துணிந்து கூற அவர்களைத் தூண்டியது. இதைக் கேட்ட சிலர் நம்ப மறுத்தார்கள். ஏற்கனவே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்த ஓரிருவர், இந்தச் செய்தியைப்பற்றி சந்தேகம் கொண்டு இஸ்லாத்தைவிட்டு மதம் மாறினர். வேறு சிலருக்கு, நபி (ஸல்) அவர்களைக் கிண்டல் செய்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இந்தச் செய்தி அமைந்தது. ஆயினும் நபி (ஸல்) அவர்கள் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது தங்களது சத்தியப் பிரசாரத்தைத் துணிவோடு செய்துவந்தார்கள்.

முன்மாதிரி

தஃவாப் பணியில் ஈடுபடுவோர்களுக்கு நபி (ஸல்) அவர்களின் இந்தத் துணிவு நல்ல படிப்பினைகளைத் தருகின்றது. மக்களின் விருப்பு வெறுப்புக்களைப் பொருட்படுத்தாமலும், அவர்களைத் திருப்திப் படுத்தவேண்டும் என்ற எண்ணமில்லாமலும் தாஇகள் சத்தியத்தை எப்போதும் துணிவாக எடுத்துக் கூறவேண்டும்.

'நீங்கள் நபி என்பது உண்மையானால் மற்றவர்களால் செய்ய முடியாத அற்புதங்களைச் செய்து காட்டுங்கள்' என்று முஷ்ரிக்குகள் சவால்விட்ட நெருக்கடியான சந்தர்ப்பத்திலேயே இஸ்ரா-மிஃராஜ் என்ற அற்புதமான நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. ஒரு சிலர் இவற்றை நம்பமறுத்தாலும் முஸ்லிம்களும், நல்ல உள்ளம் படைத்த பலரும் இவற்றை உண்மை என்று ஏற்றுக் கொண்டார்கள். இதனால் மக்கள் மத்தியில் நபி (ஸல்) அவர்களின் மதிப்பு உயர்ந்தது. ஆனால் இதை ஆதாரமாக வைத்து மக்கள் தன்னை நபி யென்று ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்கவில்லை. அன்னாரின் இந்தச் செயல் இஸ்லாத்தின் சிறப்புக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

இஸ்லாத்தின் சிறப்பு

இஸ்லாம் அற்புதங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட ஒரு கொள்கை அல்ல. இஸ்லாம் முன்வைக்கும் அறிவுபூர்வமான நம்பிக்கைகளும், அது கூறும் சீரிய திட்டங்களும் அவற்றைச் செயல்படுத்த எடுக்கப்பட்டுள்ள மிகவும் சாத்தியமான வழிமுறைகளுமே இஸ்லாத்தின் உண்மைக்கும் அதன் சிறப்புக்கும் நல்ல ஆதாரங்களாகும். ஆகவே மற்றவர்களின் மருட்டலையோ அச்சுறுத்தலையோ கருத்திற் கொள்ளாது எல்லா நிலைகளிலும் அறிவுபூர்வமான முறையில் இஸ்லாத்தை உள்ளபடி எடுத்துக் கூறுவது தாஇகளின் கடமையாகும். இஸ்ரா-மிஃராஜ் பற்றி நபி (ஸல்) அவர்கள் மக்கள் மத்தியில் கூறிய முறையிலிருந்து இந்த உண்மையை நாம் புரிந்து கொள்கிறோம்.

நிறுவும் உண்மைகள்

இப்ராஹீம் (அலை) இஸ்மாயீல் (அலை)போன்ற நபிமார்களிலிருந்து நபி (ஸல்) அவர்கள் வரையுள்ள நபிமார்கள் யாவரும் போதித்த கொள்கையின் தொடர்ச்சியாகவும் அவர்கள் எல்லோரும் மதிக்கும் புனிதமான இடங்களை அறிமுகப்படுத்துவதாகவும் இஸ்ரா-மிஃராஜ் நிகழ்ச்சிகள் அமைந்தன. நபி (ஸல்) அவர்கள், முன்னைய நபிமார்களில் பலரைச் சந்தித்து இருக்கிறார்கள். அன்னாரின் போதனைகளும் ஏனைய நபிமார்களின் போதனைகளின் தொடராகவே அமைந்திருப்பதோடு, அதன் முழு உருவமாகவும் விளங்குகிறது என்பதையும் இவை உணர்த்துகின்றன. மேலும் நபி (ஸல்) அவர்களின் இந்த அனுபவங்கள், முழு உலகுக்கும் இஸ்லாமிய வாழ்க்கை முறையை அறிமுகஞ்செய்ய அனுப்பப்பட்ட அவர்களுக்கு அந்தப்பணியைச் செவ்வனே நிறைவேற்றத் துணை புரியும் ஒரு பயிற்சியாகவும் அமைந்தன.

- பீ ஜிலானின் தர்ஜுமானில் உள்ள ஸூரா இஸ்ராவின் முன்னுரையின் ஒரு பகுதியின் சுருக்கம்.

---

தயாரிப்பு : ஷிஹாம்

---

## காஷ்மீர் பெண்களின் பர்தா இயக்கம்

காஷ்மீரில் நடைபெற்று வரும் போராட்டத்தில் சில முஸ்லிம் பெண்களும் பங்கு வகிக்கின்றனர். பெண்கள், எல்லை ஆயுதங்கள், தபால்களைத்து மத்தியிலும் அவர்கள் துணிந்து செயல்பட்டு வருகின்றனர். அதற்கோர் எடுத்துக்காட்டு: காஷ்மீரில் வாழும் முஸ்லிம்களிடம் காணப்படும் இஸ்லாமிய கலாசாரத்தை அழித்தொழிக்க அரசாங்கத்தால் பல திட்டங்கள் தீட்டப்பட்டன. அவற்றில் முக்கியமானவை ஆபாச திரைப்பட கசெட்டுகள் மட்டரமான வீடியோ மற்றும் இசை நாடாக்கள் பரவலாக கிடைக்கச் செய்வது, ஒழுக்கங்கெட்ட ஆடைகளைப் பெண்களுக்கு அணிவித்து பவனி வர வைப்பது, ஆகியவையாகும். சுற்றுலாத்துறை இந்த கலாசார ஆக்கிரமிப்புப் பணியை செவ்வனே நடத்தி வந்தது. மாதர்களின் கண்ணியத்தை களங்க வைக்கும் இந்த அவலத்தை மாய நடவடிக்கைகளுக்கெதிராக பொங்கி எழுந்தனர் காஷ்மீர் பெண்கள்! 'பர்தா இயக்கம்' என்ற பெயரில் பெண்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எதிராக வலுவான போராட்டம் ஒன்றை அவர்கள் துவக்கினர். இதற்கு முஸ்லிமல்லாதார் உட்பட எல்லா தரப்பு மக்களும் பலத்த ஆதரவு தெரிவித்தனர். நிலைமையைக் கண்டு கலக்கமடைந்த பாரூக் அப்துல்லா அரசு, பர்தா இயக்கத்தை நடத்தி வந்த மாதர்களைப் பிடித்துச் சென்று பல கொடுமைகளைப் புரிந்தது.

ஆனாலும் அந்தப் பெண்கள் துணிவோடு தமது போராட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மியூஸியம்' நோக்கி விரைந்தோடும் கம்யூனிஸம்!

'எல்லோருக்கும் எல்லாம்' என்ற கோஷத்தை எழுப்பிக் கொண்டு வந்தது கம்யூனிஸம். இக்கோஷத்தின்பால் ரஷ்ய மக்களுக்கு ஏற்பட்ட கவர்ச்சி, அவர்களை புரட்சி செய்யும்படி தூண்டியது. அதன் விளைவே 1917 அக்டோபர் புரட்சி. இப்புரட்சி கம்யூனிஸத்தை பரிபூரண அதிகாரம் பொருந்திய கொள்கையாக அரசிடம் ஏற்றியது.

சில வருடங்கள் செல்லுமுன்னரே, மாபெரும் சீனா கம்யூனிஸத்தைத் தனது கொள்கையாக ஏற்றுக்கொண்டது. பின்னர் படிப்படியாக பல நாடுகள் கம்யூனிஸத்தில் தம்மைப் பறிகொடுத்து அதனைத் தழுவிக் கொண்டன. ரஷ்யாவுக்கு அண்மையிலிருந்த சிறிய நாடுகள் அதன் ஆக்கிரமிப்புக்கு இரையாகி கம்யூனிஸத்தை ஏற்றுக் கொண்டன.

## கம்யூனிஸ மாயை

கடந்த 75 ஆண்டுகளாக கம்யூனிஸம் பெற்றுவிட்ட ஆதிக்கம் சாமானியமானதல்ல. அது முன்வைத்த கருத்துக்கள், அதன் கம்பீரமான எழுச்சி, அது எழுப்பிய விடுதலைக் குரல், அதற்கு பொதுமக்களிடையே உருவான செல்வாக்கு என்பன கம்யூனிஸத்தின் எதிரிகளைக்கூட வாய் மூடச் செய்துவிட்டன; அவர்களைப் பயந்து பயந்து பதுங்கி வாழும் நிலையில் வைத்துவிட்டன.

கம்யூனிஸத்தை எதிர்த்து எதிர் திசையில் நடந்த நாடுகள்கூட அதன் கருத்துத் தாக்கத்திலிருந்து விடுபட முடியவில்லை. அவை கம்யூனிஸத்தை முழுமையாக ஏற்காவிட்டாலும், அதன் முதற்படியான சோஷலிஸத்தை முழுமையாகவோ அன்றி அரைகுறையாகவோ ஏற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டன.

## கருத்துத் தாக்கம்

கம்யூனிஸத்தின் பிடியிலிருந்து தம்மைக் காத்துக்கொண்ட நாடுகளும்கூட 'சோஷலிஸம்' என்ற சொல்லைத் தமது பல விடயங்களில் பயன்படுத்தி வந்தன. இலங்கை ஒரு ஜனநாயக அரச முறை கொண்ட நாடு. என்றாலும் 'சோஷலிஸம்' என்ற சொல்லைக்கொண்டு பெருமைப்படுவதுபோல் அதை இணைத்து 'இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு' என்று அது தன்னை அழைத்துக் கொள்கிறது.

சோஷலிஸத்தையோ அல்லது கம்யூனிஸத்தையோ முழுமையாக விளங்காதவர்களுக்குக் கணக்கில்லை; கதைகள், கட்டுரைகள் எழுதியவர்கள் எண்ணிலடங்கார், யாராவது கவிதை நீட்டினால் அதிலும் கம்யூனிஸ சாயல் படிந்திருக்கும்; சிலர் சேர்ந்து ஏதாவது இயக்கம் அமைத்தால்கூட அதிலும் கம்யூனிஸத்தின் வாடை அடிக்கும்.

கம்யூனிஸமோ அதன் ஆரம்பப் படியான சோஷலிஸமோ மத சார்பான கொள்கைகள் அல்ல. அவை மதங்களை நிராகரிப்பவை; மதங்களுக்கு எதிரானவை. அவை ஆதிக்கம் பெற்ற நாடுகளில் மதக் கிரியைகள், மத வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்பட்ட வரலாறு தனியானது. இருந்தும் இவற்றின் கருத்துக்களில் மயங்கி கொண்டு செயற்பட்ட மத நம்பிக்கையுடையோர் ஏராளம்.

## இஸ்லாமிய சோஷலிஸம்

கம்யூனிஸத்திற்கோ சோஷலிஸத்திற்கோ தம்மைப் பறிகொடுத்த முஸ்லிம்களும் இதற்கு விதிவிலக்கல்ல; அவர்கள் இஸ்லாத்திற்கு 'இஸ்லாமிய சோஷலிஸம்' எனப் பெயர் சூட்டி அழகு பார்த்தனர். 'இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி' என இயக்கம் அமைத்து அகமகிழ்ந்தனர்.

சிலருக்கு 'நான் ஒரு கம்யூனிஸ்ட்!' எனக் கூறிக் கொள்வதில் பெருமை; வேறு சிலருக்கோ 'நான் ஒரு சோஷலிஸ்ட்!' என சொல்லிக் கொள்வதில் ஒருவகையான திருப்தி!

சோஷலிஸத்தையோ கம்யூனிஸத்தையோ ஏற்காதோர் 'பிற்போக்குவாதிகள்' என இழித்துக் கூறப்பட்டனர்; அவற்றை ஏற்றோர் 'புத்தி ஜீவிகள்' என பெருமிதத்தோடு அழைக்கப் பட்டனர்.

இவ்வாறுதான் கம்யூனிஸ மாயை உலகை ஆக்கிரமித்தது. இனி என்றுமே அசைக்க முடியாத ஆலவிருட்சம்தான் கம்யூனிஸம் என மக்கள் நம்பும்படி செய்தது. அதன் பாதத்தடியில்தான் அனைத்து சொர்க்க போகங்களும் குவிந்துள்ளன என எல்லோரும் கருதும்படி செய்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தோ பரிதாபம்!

ஆனால், நடப்பது என்ன?

கனவா அல்லது நினைவா? அதிசயமாயிருக்கிறது! என உலகமே வியக்கும்படி கம்யூனிஸம் சரிய ஆரம்பித்துவிட்டது.

இது உண்மையில் கனவு அல்ல; மூக்கில் விரலை வைத்துச் சிந்திக்கவேண்டிய அதிசயமுமல்ல!

எது நடக்க வேண்டுமோ அது நடக்கிறது. ஆனால், அந்த நடப்பு - கம்யூனிஸத்தின் அழிவு - இவ்வளவு சீக்கிரமாக வந்துவிட்டதே; 'வேண்டும்' எனக் கூறி அதைத் தம் வாழ்வோடு வரித்துக் கொண்டவர்களே இப்போது 'வேண்டாம்' என்று அதை உதைத்துத் தள்ளுகிறார்களே. அதுதான் அதிசயம்!

எவரும் எண்ணிப் பார்க்காத அளவு அவ்வளவு சீக்கிரமாக கம்யூனிஸத்தின் மவுசு மங்கிச் செல்ல ஆரம்பித்து விட்டது என்னவோ உண்மைதான். முதலில் சீனாவும் அதன்பின் ரஷ்யாவும் கம்யூனிஸத்தின் சரிவை ஏதோ ஒருவகையான சீர்திருத்தம் என உலகுக்குக் காட்ட பெருமுயற்சி எடுத்தன.

## வார்த்தை ஜாலங்கள்

ரஷ்யா, 'பெரிஸ்ட்ரொய்கா' (சீர்திருத்தம்) என்றும், 'கிளாஸ் நொஸ்ட்' (ஒளிவு மறைவின்மை) என்றும், 'டெமொக்ரட்டிஸ்யா' (ஜனநாயக மயப் படுத்தல்) என்றும் வார்த்தை ஜாலங்களைப் போட்டு ஏதேதோ செய்யப் பார்த்தது. அனைத்துமே தோல்விதான். இப்போது அந்நாடுகளில் இரும்புத் திரை அகற்றப்படுகிறது. மக்கள் உலகைக் கண்ட விடுதலை உணர்வுடன் கிளர்ச்சிசெய்ய ஆரம்பித்து விட்டனர்.

இவ்வேளையில் கிழக்கைரோப்பிய கம்யூனிஸ நாடுகள் வெளிப்படையாகவே கம்யூனிஸத்திற்கு மரண அடி கொடுக்க ஆரம்பித்துவிட்டன. போலந்தில் கொந்தளிப்பு; பல்கேரியாவில் கிளர்ச்சி; யூகொஸ்லேவியாவில் மறுசீரமைப்புப் போராட்டம்; செக்கோஸ்லோவேக்கியாவில் விடுதலை எழுச்சி - இப்படிப் பல நாடுகள் கம்யூனிஸத்துக்குக் கறுப்புக் கொடி காட்டத் துவங்கி விட்டன.

## ஜெர்மனியும் ருமேனியாவும்

கம்யூனிஸ ஜெர்மனியின் பாதுகாப்பு அரணாக விளங்கிய பேர்லின் தடுப்புச் சுவரை இடித்துத் தள்ளிவிட்டு வெளியேறும் கம்யூனிஸ்ட்டுகள் எண்ணிக்கை அற்ப சொற்பமல்ல. இதனால் கிழக்கு ஜெர்மனியில் அரசே ஆட்டம்காண ஆரம்பித்து விட்டது.

ருமேனியா கம்யூனிஸத்தை முற்றாகத் துடைத்தெறியும் போர் ஒன்றில் ஈடுபட்டுள்ளது. கம்யூனிஸ்டுகள் பயத்தால் எங்கெங்கோ தலைமறைவாகி ஓடுகின்றனர். அந்நாட்டு அரச பீடத்தை அலங்கரித்த கம்யூனிஸம் இப்போது சட்டப்படி தடை செய்யப்பட்டு விட்டது.

லிபியாவின் ஜனாதிபதி கடாபி கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, 'எமது நாடு கம்யூனிஸ பிடிப்பை விட்டு விலகிச் செல்லாது' எனக் கூறியுள்ளார். இது அவரது உள்ளத்தில் தோன்றிய 'எமது நாட்டிலும் எதுவும் நடந்து விடுமோ' என்ற அச்சத்தால் எழுந்த முனகலாகக் கூட இருக்கலாம் அல்லவா!

## மியூஸியத்தில்!

இப்போது ரஷ்யா தனது ஆதிக்கத்தின் கீழ் அடிமைப்படுத்தி வைத்துள்ள 15 குடியரசுகளும் 'பிரிந்துபோக விரும்பினால் சில நிபந்தனைகளுடன் அதுபற்றி ஆலோசிக்கலாம்' எனக்கூறி தனது கம்யூனிஸ வீழ்ச்சியின் யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டு விட்டது.

கம்யூனிஸம் அடைந்துவரும் பரிதாபகரமான நிலையை நோக்கும்போது, விரல் விட்டெண்ணக் கூடிய இன்னும் சில ஆண்டுகளில் அது மக்களிடம் இருந்து விடைபெற்று மியூஸியத்தில் (பொருட்காட்சிச் சாலையில்) அடைக்கலம் பெற்றுவிடும் என்பது தெளிவாகி விட்டது.

## ஆப்கானிஸ்தான்!

கம்யூனிஸத்தின் இந்தப் பாரிய சரிவுகள் யாவும் ரஷ்யா ஆப்கானில் அடைந்த படுதோல்வியிலிருந்து தான் ஆரம்பமானது எனக் கூறலாம்.

ரஷ்யா உலகின் செல்வாக்குமிக்க ஒரு வல்லரசு. நவீனகரமான யுத்தத் தளபாடங்கள், வாகனங்கள், ஆயுதக் கிடங்குகள் அதற்குச் சொந்தம். விமானப்படை, தரைப் படை, கடற்படை பலத்திலும் எந்தக் குறையும் இல்லை. விஞ்ஞானம், தொழில் நுட்ப அறிவிலும் ரஷ்யாவை எவருமே குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. அதன் நாமத்திற்கு பக்க வாத்தியம் பாடுவோருக்குப் பஞ்சமேயில்லை.

மறு பக்கத்தில், ஆப்கானிஸ்தான் இந்த எல்லா வகையான வசதி முன்னேற்றத்திலும் எடுபடாத, வளர்ச்சி குன்றிய நாடாகவே காட்சியளித்தது. பெரிய யுத்தப் பயிற்சியோ, யுத்தக் கருவிகளோ, வாகனங்களோ அவர்களிடமில்லை. 8% வீதத்தினர் தான் கல்வி கற்றுள்ளனர்.

(தொடர்ச்சி 26ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி ஹதீஸ்களை ஏற்றுக்கொண்டு 'தீனு'ல் இஸ்லாத்தை களங்கப்படுத்தாதீர்கள்!

அல்லாமா டாக்டர் யூசுப் அல் கர்ழாவி - கத்தர்
தமிழில் : 'ஷிஹாரா'

மௌழூஆன - போலி ஹதீஸ்களை ஏற்றுக்கொள்வதும் அவற்றை நபி (ஸல்) அவர்கள் கூறியதாக நம்புவதும் பிழையானதும் ஆபத்தானதுமாகும். அதேபோல ஆசை, அகங்காரம், அவ்வாறுமல்லாது நபி (ஸல்) அவர்களையும் பதிவாளர இஸ்லாமிய வரலாற்றில் பொற்காலங்களில் வாழ்ந்த இமாம்கள், உலமாக்கள் ஆகியோரையும் பொதுவாக முஸ்லிம் உம்மத்தையும் பற்றிக் குறைவாக மதிப்பீடு செய்தல் என்பன போன்ற காரணங்களுக்காக ஸஹீஹான ஹதீஸ்களை ஏற்றுக்கொள்ள மறுப்பதும் தவறான செயலாகும்.

பொய்யான ஹதீஸ்களை ஏற்பது, தீனில் அடங்காத விஷயங்களை அதில் புகுத்துவதாக அமைகிறது. அதேவேளை ஸஹீஹான ஹதீஸ்களை ஒப்புக் கொள்ள மறுப்பது தீனில் உள்ள அம்சங்களை அதிலிருந்து நீக்கி விடுவதாகிறது. இவ்விரு செயல்களுமே முறைகேடானவைகளாகும். பொய்மை ஏற்பதா உண்மையை மறுப்பதுமாகும்.

### மறுப்பு

பிழையான இந்த நடைமுறையைக் கையாள்வோர் எப்பொழுதுமே தங்களின் செயலை நியாயப்படுத்த சில சந்தேகங்களையும் வாதங்களையும் முன் வைத்து வந்திருக்கிறார்கள். அவற்றில் பட்டாளமானவை உலமாக்களால் ஆதாரபூர்வமாகவும், மிகவும் ஆழமாகவும் விளக்கப்பட்டுள்ளது. இத்தகையவர்களின் சில கருத்துக்களை மறுத்து, இமாம் ஷாபிஈ அவர்கள் தரும் விளக்கத்தைச் சுருக்கமாகக் கவனிப்போம்:

ஹதீஸ்கள் அனைத்துமே நபி (ஸல்) அவர்களிடமிருந்து பெறப்பட்டன என்பதற்குப் போதிய ஆதாரமில்லை, பெரும்பாலானவை ஊகங்களின் அடிப்படையிலேயே நிறுவப்பட்டிருக்கின்றன. ''அவர்கள் தங்களின் ஊகங்களையும் மனோ இச்சைகளையுமே பின்பற்றுகிறார்கள்'' (53:23) '',அவர்கள் ஊகங்களையே பின்பற்றுகிறார்கள்; நிச்சயமாக ஊகங்கள் உண்மைக்கு முரணாக எதையும் உறுதிப்படுத்தாது.'' (53:28) என்று கூறும் அல்குர்ஆன் ஆதாரமில்லாதவற்றை ஏற்பதைக் கண்டிக்கிறது. எனவே ஊகங்களின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ள ஹதீஸ்களை ஏற்பது குர்ஆனின் பார்வையில் கண்டிக்கப்பட வேண்டும். இதிலிருந்து ஹதீஸ்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது பொருந்தாது. இவ்வாறு பிரகஅத் மாதிரியான சிலர் கூறுவர்.

இவ்வாறு கூறும் இவர்கள் குர்ஆனில் கூறப்படாத ஆனால் ஸஹீஹான ஹதீஸ்கள் மூலம் விளக்கப்பட்ட பல விஷயங்களை அவை விளக்கப்பட்டவையல்ல என்று சாதிப்பர். தங்களைப் போன்ற தோழுள்ளம் கொண்டவர்களையும் சேர்த்துக்கொண்டு இவர்கள் விரும்பும் சில ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதே இத்தகையவர்களின் நோக்கமாகும்.

### சரியான விளக்கம்

இவர்களின் இந்த கூற்றும் பட்டாசமானது, ஏனெனில் குர்ஆனிலும் ஹதீஸிலும் வரும் ஊகம் என்பது திட்டமாக நிறுவப்படாத கருத்து என்பதன் பொருள் இவர்கள் நினைப்பதல்ல. அதற்கு மூன்று விதமான பொருள் கொள்ளலாம்.

1. தீனின் அடிப்படைகளைத் திட்டவட்டமான ஆதாரங்களின் துணையோடு அறியாதிருப்பதே ஊகம் என்று குறிப்பிடப்படும். இப்படி ஆதாரமின்றி நம்புவதை எல்லா உலமாக்களும் கண்டிக்கிறார்கள். ஏனெனில் தீனின் அடிப்படையான அம்சங்களையும் அகீதாச் சார்ந்த விஷயங்களையும் ஒருவர் ஆதாரங்களுடன் தெளிவாக விளங்கிக்கொள்ளாவிட்டால் முரண்பட்ட கருத்துக்களை அவர் கொள்ளவும் பிற்காலத்தில் ஏற்றுக்கொள்ளவும் இடமுண்டு. ஆகவே தீனின் அடிப்படையான அம்சங்களை அனைவரும் ஆதாரபூர்வமாக விளங்கி ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் சில்லறை விஷயங்களில் அப்படியல்ல. அவற்றைப் பொறுத்தவரை ஒரு செயலைச் செய்பவருக்குத் தனது செயல் சரியானது என்பதற்கு ஆதாரமிருந்தால் போதும். அந்த ஆதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றாக ஆணித்தரமானதாக அமையவேண்டும் என்பதில்லை.

2. யூகம் என்பது முரண்பாடான இரண்டு கருத்துக்களில் ஒன்றுக்கு, நியாயமான காரணங்கள் எவையுமின்றி முதன்மைத்துவம் கொடுப்பதைக் குறிக்கிறது. இவ்வாறு கொள்வது ஆதாரமின்றி ஒரு முடிவுக்கு வருவதாக அமைகிறது. எனவே இது தவிர்க்கப்பட வேண்டும்.

அல்குர்ஆனின் 53:28ம் வசனத்தில் 'மனோ இச்சைகளைப் பின்பற்றுகிறார்கள்' என்று குறிப்பிட்டுக் கூறப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. அதாவது அவர்கள் வலிதுவான ஆதாரமுமில்லாது இச்சைக்கு அடிபணிந்து நடக்கிறார்கள் என்று அதில் தெளிவாகிறது. இதனாலேயே அந்தப்போக்கு கண்டிக்கப்படுகிறது. ஆதாரங்களின் அடிப்படையில் அமையும் கருத்துக்கள் அங்கீகரிக்கப்படும். அவற்றை ஏற்பது பிழையானதல்ல; ஏனெனில் அப்போது இச்சைக்கு அடிபணிந்தார் என்று குற்றஞ்சாட்டுக்கு இடமிருக்காது. எனவே இவ்வாறான நிலையில் செய்யப்படுவதை நியாயப்படுத்த முடியும். அது அங்கீகாரமும் பெறும்.

3. யூகம் இரண்டு வகைப்படும்.

(அ) திட்டவட்டமான ஆதாரங்களின் வழியாக அமைந்த கருத்து. ஷரீஅத்தின் நோக்கில் இத்தகைய கருத்துக்களுக்கு அங்கீகாரமுண்டு. ஏனெனில் இவை வெறும் ஊகமல்ல. குறித்த கருத்துக்கு நேரடியான திட்டவட்டமான ஆதாரமில்லாவிட்டாலும் திட்டவட்டமான ஆதாரமுள்ள மற்றொரு கருத்தின் வழியாகவே இக்கருத்து பெறப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த விதமாக உருவான கருத்தும் ஆணித்தரமான ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்த கருத்தைப்போலாகிறது.

(ஆ) ஆணித்தரமில்லா ஆதாரங்களின் வழியில் எழுந்த கருத்து ஒன்றில் உறுதியான ஆதாரமின்றி உருவாகியிருக்கலாம். இப்படியான கருத்துக்களை ஏற்கக் கூடாது. இவை கண்டிப்பாக நிராகரிக்கப்பட வேண்டும்.

அல்லது அதுபோன்ற மற்றொரு கருத்தின் அடிப்படையில் இந்தக் கருத்து உருவாகியிருக்கலாம். (1) இப்படி உருவான கருத்துக்கு ஆதாரமாக அமையும் கருத்து திட்டவட்டமான வேறு சில ஆதாரங்களின் அடிப்படையில் எழுந்திருந்தால் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வதும் முறையானதே. ஏனெனில் இந்த நிலையில் தூரத்து வழியில் அதற்குப் போதிய திட்டவட்டமான ஆதாரமிருக்கிறது.

(2) குறிப்பிட்ட கருத்துக்கு போதிய ஆதாரமில்லாது வெறும் ஊகத்தின் அடிப்படையில் அமைந்த ஒரு கருத்தை ஆதாரமாகக் கொண்டு பெறப்படும் மூன்றாம் கருத்து வெறும் ஊகமாகவே அமையும். இவ்விதமான கருத்து அங்கீகரிக்கப்படமாட்டாது.

எனவே நம்பகமான ஸனத் - அறிவிப்பாளர் வரிசையில் பெறப்பட்ட 'ஸஹீஹ் ஹதீஸ்' - திட்டவட்டமாக நிறுவப்படாத (முதவாதிர் அல்லாத) ஹதீஸ்களைப் பொறுத்தவரை அவற்றுக்குத் துணையான ஷரீஅத்தின் ஆதாரபூர்வமாக நிறுவப்பட்ட அடிப்படையிருக்குமாயின் அப்படியான ஹதீஸை ஏற்பது கட்டாயமாகிறது.

## புதியன

இருக்கும் ஒரு சில ஹதீஸ்களை ஏற்றுக் கொள்ள மறுப்பதோடு அவற்றை ஆதாரமாகக் கொண்டு அமைந்த கருத்துக்களையும் பகுத்தறிவுக்குப் பொருந்தாதவை என்று கூறி மறுத்து தள்ளவும் துணிந்து விடுகின்றனர். எனினும் இவர்கள் உண்மையில் பகுத்தறிவாளர்களை ஒத்தவர்கள்.

கடந்த காலங்களில் ஹதீஸை ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள் முன்வைத்த சந்தேகங்களையும் அவர்கள் எழுப்பிய சிறிய பெரிய வினாக்கள் பலவற்றையும் இமாம் இப்னு குதைபா அவர்கள் தங்களின் 'தஃவீலு முக்தலிபில் ஹதீஸ்' என்ற நூலில் குறிப்பிட்டு அவற்றுக்கான சரியான விளக்கத்தையும் தந்திருக்கிறார்கள்.

தற்காலத்திலும் ஹதீஸ்களை ஏற்க முடியாது என்று வாதிடுவோர் இருக்கிறார்கள். இவர்கள் கீழைத்தேய மதப்போதகர்களையும் சிந்தனை அறிஞர்களையும் போன்ற காபிர்கள். இத்தகையவர்களின் கருத்துக்களால் மருண்டுபோன சிலர்களான ஒரு சில முஸ்லிம்கள் என்று இரு பிரிவினர்களாக நோக்க முடியும்.

இவ்விரு சாராரும் காலத்தால் புதியவர்கள். ஆனால் முன்வைக்கும் கருத்துக்களில் அதிகமானவை பழமையானவை. பழமையான வாதங்களை, தவிர காலத்தின் பின்னணியில் அமைந்த ஒரு சில புதிய புரளிகளும் உண்டு. இவற்றையெல்லாம் முன்வைத்து ஹதீஸ்துறை நூல்களையும் இத்துறை அறிஞர்களையும் அவர்களின் பங்களிப்புகளையும் இவர்கள் விமர்சனம் செய்கிறார்கள்! பலம் வாய்ந்த நிறுவனங்கள் பல இவர்களுக்குப் பக்கபலமாக நின்று இவர்களைத் தூக்கிப் பிடித்து வருகின்றன.

## மஹ்தோர்வி

இத்தாலியர்களின் முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்து விட்டன. மலைக் கோட்டைகள

(தொடர்ச்சி 25ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் எப்போதும் இத்தகையதொரு முடிவை எதிர்பார்த்திருந்தேன்

ஆப்கான் ஜிஹாதை வழிநடாத்தும் முன்னணித் தலைவர்களில் ஒருவராக இருந்து 20ம் நூற்றாண்டில் இஸ்லாத்தின் எழுச்சியை முழு உலகிற்கும் எடுத்துக்காட்டிய மாவீரரும் வீரர், முஜாஹித், ஷஹீத் அப்துல்லாஹ் அஸாம் சென்ற 24. 11. 89. அன்று பெஷாவர் நகரில் ஒரு பள்ளிவாசல் வெடிக்குள் சிக்கி ஷஹீதாவதற்கு ஒரு கிழமைக்கு முன் அவருக்காக ஒரு பாதுகாப்பு வட்டத்தை ஏற்பாடு செய்யுமாறு ஜிஹாத் முன்னணியைச் சேர்ந்த ஒரு முக்கியஸ்தர் அவரிடம் அனுமதி கேட்டார். அதற்கவர் சிறிதுநேர சிந்தனையின் பின் புன்முறுவலோடு கூறிய பதில் "நீங்கள் வெறுக்கின்றபோதும் மரணம் நிச்சயமாக உங்களை சந்தித்தே தீரும்; என்று நீங்கள் கூறுங்கள்" என்ற குர்ஆன் ஆயத்தை ஓதி எனக்குப் பாதுகாப்பு அவசியமில்லை என்று சொன்னார்.

"நான் ஆப்கான் மண்ணில் அல்லது பெஷாவரில், மரணிக்க விரும்புகிறேன். அல்லது விலக்கிடப்பட்ட நிலையில் நான் பாகிஸ்தானிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும். அதுவரை நான் இங்கிருந்து செல்ல மாட்டேன்" இவ்வாறு ஷஹீத் அஸாம் பலருடன்கலந்துரையாடும் போது ஆப்கானில் முதன் முதல் காலடியெடுத்து வைத்தபோது திடமாகக் கூறினார்.

"இஸ்லாம் என்ற மரம் இரத்தம் என்ற நீரிலேயே வாழ்வு பெறும். இது ஜிஹாத் எனக்குக் கற்றுத்தந்த பாடம்" என்று கூறிய பாலஸ்தீனைச் சேர்ந்த அந்த முஜாஹித், அந்த மரம் வளர இறுதியாகத் தனது இரத்தத்தையும் பாய்ச்சிவிட்டார்.

இஸ்லாமிய உலகமும் குறிப்பாக ஒவ்வொரு ஆப்கான் முஜாஹிதும் அவரது இழப்புக்காக கண்ணீர் சிந்தும் வேளை, ஆப்கான் ஜிஹாதை வழிநடாத்தும் பொறுப்புமிக்க ஸ்தானம் இனி யாரால் நிரப்பப்படும் என்று அனைவரும் எதிர்பார்க்கும் வேளை "உங்களுக்கு ஏன் அந்தக் கவலை? அவரது இழப்பு ஒரு நிரந்தர வெற்றிக்கு அடித்தளமாக அமையட்டும். உங்கள் பாதையில் முரணின்றி முன்னேறிச் செல்லுங்கள். அல்லாஹ்வின் வெற்றி கிட்டும் வரை ஓய்ந்து விடாதீர்கள்" என்று ஆர்வமூட்டுகிறார் ஷஹீதின் மனைவி. அவர் தனது கணவனை மட்டும் இழக்கவில்லை. கண்ணுயிர்ச் செல்வங்களையே முஹம்மத் (வயது 21), இப்ராஹிம் (வயது 15) ஆகிய இருவரையும் தாது தந்தையோடு சேர்த்து இறை பாதையில் நிரந்தரமாக வழியனுப்பி வைத்துவிட்டு பொறுமையின் சின்னமாகக் காட்சியளிக்கின்றார். குர்ஆனிய மனிதர்கள் அன்றுமட்டுமல்ல இன்றும் உருவாகலாம் என்பதற்கு இது நல்ல சான்று.

## 'எனது கணவரும் இரு கண்மணிகளும் இஸ்லாத்துக்காகவே ஷஹீதானார்கள். இஸ்லாம் வெற்றிபெற வேண்டும் என்பதே எனது ஆசை!'

பெஷாவரிலிருந்து வெளிவரும் ஆப்கான் ஜிஹாதின் இலட்சியக் குரலான ஷஹீத் அவர்கள் ஸ்தாபித்த "அல் ஜிஹாத்" என்ற மாத இதழ் ஷஹீதின் மனைவியைப் பேட்டி கண்டது. இஸ்லாமிய மறுமலர்ச்சிப் பணியில் பெண்கள் எத்தகைய பங்கை வகிக்க முடியும், அதன் மகிமை யாது என்பதை எமது சகோதரிகள் புரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கில் அவர் "அல் ஜிஹாத்" மாத இதழுக்கு வழங்கிய கருத்துக்களை இங்கே தருகிறோம்!

● உங்கள் கணவரும் இரு புதல்வர்களும் மரணச் செய்தியைக் கேட்டபோது உங்களது மனநிலை எப்படியிருந்தது?

நான் எப்போதும் இத்தகையதொரு முடிவை எதிர்பார்த்திருந்தேன். அதற்கேற்றவிதமாக நான் என்னைத் தயார்படுத்திக் கொண்டேன். முஜாஹிதீன்களின் முடிவுகள் இவ்வாறு எதிர்பார்க்கப்பட வேண்டியவை. புதியவர்கள் அவர்களைக் கொல்ல எதிரிகள் இரவு பகலாக சூழ்ச்சி செய்துகொண்டிருக்கின்றனர் என்பது எனக்குத் தெரியும்.

அன்று வெள்ளிக்கிழமை, சமையலறையில் பாலுணவைத் தயார் செய்து கொண்டிருந்தேன். கணவரும் பிள்ளைகளும் வீட்டிலிருந்து வெளியேறி சுமார் நிமிடங்கள் சென்றிருக்கும். ஒரு பெரும் வெடிச் சத்தம் கேட்டது. எனது உள்ளத்தில் ஏதோ ஒன்று நடந்துவிட்டது போன்ற ஓர் உணர்வு. சிறிது நேரத்தில் மகன் ஹுமாம் வீடு வந்தார். 'பிரதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியில் ஒரு விபரீதம் நடந்துவிட்டது. அனைவரும் மனம் குழம்பிய நிலையில் இருக்கின்றார்கள். வெளிக்கு விட்டும் தொழுது கொள்ளுமாறு கூறினார்கள்' என்றார். அவரும் பீதியுடன் காணப்பட்டார். அவரது பேச்சு, எனதுள்ளத்தில் ஏற்பட்ட சந்தேகத்திற்கு வலுவூட்டியது. இறுதியில் உண்மை அறியக் கிடைத்தபோது - அல்ஹம்துலில்லாஹ் - அமைதியோடும் பொறுமையோடும் அதனை ஏற்றுக்கொண்டேன் - இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன் - அத்துடன் எனது பெண் மக்களையும் பொறுமையாக இருக்குமாறு கூறி சாந்தப்படுத்தினேன். எனது ஆண் பிள்ளைகளைப் பொறுத்த மட்டில் அவர்கள் யுத்த களத்தில் ஷஹீதாக்கப்பட வேண்டும் என்பதே என் விருப்பமாக இருந்தது. என்றாலும் அல்லாஹ்வின் திட்டம் இப்படி அமைந்துவிட்டது. அல்ஹம்துலில்லாஹ்.

● ஷஹீத் அவர்களின் வீட்டு வாழ்க்கை பற்றி சுருக்கமாகக் கூறுவீர்களா?

அவர் மிகக் குறைவாகவே வீட்டில் இருப்பார். இஸ்லாமிய அழைப்புப் பணிக்காகவே அதிகமான நேரத்தைச் செலவிடுவார். அதிகாலையில் செல்பவர் நடு நிசியின் பின்னரே வீடு திரும்புவது வழக்கம். பகல் நேரத்தில் வருவதாயிருந்தாலும் நண்பர்களுடனே வருவார். அவர்களோடு உண்டு, களைப்பாறிவிட்டு அவர்களுடனேயே சென்றுவிடுவார். அவரது நடவடிக்கைகள் பற்றி நாடாக்கள், சஞ்சிகைகள், அவர் எழுதும் நூல்கள் போன்றவற்றினூடாக நாமும் அறிந்து கொள்வோம். உலக இன்பங்களை முற்றாக அவர் தேடிக்கவில்லை. எனினும் தனது தேவைக்கேற்ற அளவையே பெற்றுக்கொள்வார். பிறரைப் பற்றி அவரிடம் கதைப்பது அறவே அவருக்கு விருப்பமில்லாத ஒன்று. தனக்கு ஒருவர் தீங்கிழைத்த போதிலும் அவரைப் பற்றி நல்லவைகளைத்தானே கதைப்பார். தனது பிள்ளைகளுக்கு அன்பையும் பண்பையும் பொழிப்பதில் கிடைக்கும் நேரத்தைச் செலவிடுவதற்கு அவர் பின்னிற்பதில்லை. பிள்ளைகளில் ஒருவர் ஒரு பணி சேவம் செய்வதாக இருந்தால் அவருக்கு நூறு ரூபா தருவதாகச் சொல்வார். ''[illegible]'' என்ற நபிவார்த்தைக்கிணங்க வளர்க்கத்தில் மரங்களை நட்டு கனிகளை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள் என்று அவர் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன்.

● மறைந்த ஷஹீதின் பணிகளைத் தொடர்வது பற்றி......

பணிகளைத் தொடர்வதில் நமக்கென்ன அடுத்த வேலை அதுதான். எமது எஞ்சிய பிள்ளைகளையும் அல்லாஹ்வின் பாதையில் ஷஹீதுகளாக விரும்புகின்றேன். தனது முஜாஹிதீன் வழியில் தனையர்கள் பிச்சுப் செல்ல வேண்டும். என்னால் இயன்ற அத்துணை முயற்சிகளையும் மேற்கொண்டு ஆப்கானிய பெண்கள் மத்தியில் என் பணிகளைத் தொடர்வேன். எனது அருமைச் சகோதரர்கள் பெஷாவரில் இருக்கும்வரை நான் இங்கிருந்து நகரமாட்டேன்.

● பெஷாவரிலும் ஏனைய பகுதிகளிலும் இச்செய்தி ஏற்படுத்திய தாக்கத்தை நீங்கள் எவ்வாறு கணிக்கிறீர்கள்?

எல்லோரும் இச்செய்தி கேட்டு தடுமாறுகின்றார்கள். ஷஹீதான என் கணவர் எனக்கும் எனது பிள்ளைகளுக்கும் மட்டும் உரித்தானவராக இருக்கவில்லை. அனைவருக்கும் அன்பான தந்தையைப் போல அவர் இருந்திருக்கிறார். இவ்வுலகின் நாலா பகுதிகளிலுமிருந்து பறந்து அனுதாபச் செய்திகள், தந்தி, தொலைபேசியின் மூலமாக கிடைக்கப் பெற்றன. பல செய்திகளில் ''ஷஹாதத்'' தின் பெறுமதிமிக்க பேறுகளை நினைவுபடுத்தி நான் பெற்ற பாக்கியத்தை எனக்கு உணர்த்தியிருக்கிறார்கள். ஷஹீத் அவர்கள் தற்போது ''ஹூருல் ஈன்'' களுடன் இருப்பார்கள் என்று பல செய்திகளும் அவற்றில் காணப்படுகின்றன.

● இந்நிலையில் நீங்கள் முஸ்லிம்களுக்கு கூற விரும்புவது பற்றி சில வார்த்தைகள்?

எனது கணவரும் பிள்ளைகளும் இறைவழியில் ஒரு புதிய வெற்றிக்கு அடித்தளமாக அமைய வேண்டும் என அல்லாஹ்விடம் பிரார்த்திக்கிறேன். ஜிஹாதின் பாதையில் இத்தகைய மரணங்கள் தடைகளை ஏற்படுத்திவிடக் கூடாது. முஜாஹிதீன்கள் ஒரே அணியாக நின்று இஸ்லாமிய மண்ணின் எஞ்சிய பகுதிகளையும் மீட்டெடுக்கும் பணியில் ஈடுபடவேண்டும். அவர்கள் உறுதியோடு உணர்வுகளையும் தட்டிவிட வேண்டும். அவர்கள் புதிய வேகத்துடன் முன்னேற இந்த மரணங்கள் ஒரு உந்துசக்தியாக அமைய வேண்டும். ஆப்கான் முஜாஹிதீன்களே! அல்லாஹ்வை முன்வைத்து உங்களிடம் வினயமாகக் கேட்கிறேன். உங்களுக்கு மத்தியில் பிளவை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் இஸ்லாமிய உம்மத் ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் இஸ்லாமிய சாம்ராஜ்ஜிய உருவாக்கத்தைத் தாமதப்படுத்திவிடாதீர்கள். வெற்றி நிலையே [illegible].

உலக முஸ்லிம்கள் அனைவரும் மாயை நிறைந்த உலகின் கவர்ச்சிகளைவிட்டு அல்லாஹ்வின் பக்கமும் மறுமையின் பக்கமும் திரும்ப வேண்டும். இவ்வாழ்வில் உண்மை நிரந்தர ஜிஹாதைக் கைக்கொள்ள வேண்டும்.

(தொடர்ச்சி 23ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்க்கும் நீங்களே அழித்து விடாதீர்கள்

● ஷெய்க் நாஸிர் அந்நூரி - குவைத்

மற்றவர்களை மதியாமையும், அவர்களைப் பற்றி இழிவாக விமர்சிக்கும் கசப்பான வார்த்தைகளையும் கண்டனங்களையும் கூறுவதும் நிச்சயமாக இஸ்லாமிய தாஈகளுக்கு அழகல்ல; ஒருபுறம் இஸ்லாத்தைக் கட்டியெழுப்ப முயற்சிக்கும் இவர்கள் அதே வேளை, மேலே குறிப்பிட்டவாறு அமைந்த பிழையான செயல்களின் மூலம் அதனை உடைக்க முயன்று வது பொருத்தமற்ற நடவடிக்கையாகும். ஏதோ தவறு செய்வதாக நினைத்து மற்றவர்களை முறைகேடாக விமர்சித்து 'உயிரோடுள்ள அவர்களின் மாமிசத்தை உண்ணாது' தான் ஈடுபட்டுள்ள பணியை உரிய முறையில் தொடர்வதே தாஈகள் கைக்கொள்ள வேண்டிய காரியமாகும். இஸ்லாமிய தஃவாப் பணியில் ஈடுபட்டுள்ள தமக்கு மாற்றமான கருத்தைக் கொண்டவர்கள் தங்களின் கருத்துக்களுக்கு துணையாக வைத்துள்ள ஆதாரங்களைக் கண்டறிந்து அவற்றை மதிக்க அனைவரும் பழகிக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாது நம்முடன் கருத்து முரண்படுவோரையும் காபிர்கள் என்றும் வழிதவறியவர்கள், புரட்டர்கள் விதண்டாவாதம் புரிவோர் என்றும் வேறு பிழையான முறைகளிலும் விமர்சித்து மனவருத்தப் படுத்தக் கூடாது. தஃவாப் பணியில் ஈடுபட்டுள்ள உங்களை யாராவது இப்படி விமர்சித்தால் நீங்கள் அதைக் கண்டு அதிர்ந்து நீங்களும் அவர்களை அதே பாணியில் விமர்சிக்க ஆரம்பித்துவிடக் கூடாது.

### எங்கள் வழி

அல்லாஹ் விரும்பாத முறையில் உங்களைப் பற்றிப் பேசித் திரிவோருக்கு நீங்கள் செய்யும் கைம்மாறு அவர்கள் விஷயத்தில் நீங்கள் அல்லாஹ் விரும்பும் வழியில் நடந்து அவனது அருளைப் பெற முயற்சிப்பதாகும். ஏனெனில் யார் என்ன பேசினாலும் ''நிச்சயமாக அல்லாஹ் அவனை அஞ்சி நடந்து நல்ல காரியங்களையே செய்வோருடனேயே இருக்கிறான்'' (16:127) ''நீங்கள் பொறுமையைக் கைக்கொண்டு அல்லாஹ்வின் சட்டதிட்டங்களைப் பேணி நடந்து வந்தால் அவர்களின் பிழையான முயற்சிகளால் உங்களுக்கு எந்தவிதமான கெடுதியும் ஏற்படாது. நிச்சயமாக அவர்கள் செய்யும் அனைத்தையும் அல்லாஹ் நன்கு அறிகிறான்'' (3:120)

எப்போதும் உங்களின் கருத்துக்களும் பேச்சு, நடவடிக்கைகள் என்பு அனைத்துமே முறையாகவும் நீதியான அடிப்படையிலும் அமைய வேண்டும். ''ஒரு சாராரிடம் உங்களுக்குள்ள வெறுப்பு அவர்களுக்கு அநீதியிழைக்கத் உங்களைத் தூண்டிவிடக் கூடாது. எப்போதும் நீதியாகவே நீங்கள் நடந்து கொள்ளுங்கள், இது நடப்பதே நல்லோருக்கு மிகவும் நெருக்கமான செயலாகும்.'' (5:8)

உங்களின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றுமே மக்களுக்கு வழிகாட்டியாகவும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண பொருத்தமான வழியாகவும் அல்லாஹ் அருளிய அல்குர்ஆனில் வழிகாட்டுதலுக்கேற்றதாகவும் அமையவேண்டும். எனவே ''உங்களுக்கிடையில் ஏதாவது ஒரு விஷயத்தில் கருத்து முரண்பாடு தோன்றினால் நீங்கள் அதை அல்லாஹ்வினதும் அவனது தூதர் அவர்களதும் முடிவுடன் ஒப்பிட்டு நோக்கித் தீர்வுகாண வேண்டும்'' (4:59)

### ஒளி விளக்கு

''ஒரு சில விஷயங்களில் எம்முடன் கருத்து வேறுபாடு கொண்டுள்ளவர்களிடம் அவர்கள் கருத்துக்குப் போதிய ஆதாரம் உண்டு என்று நாம் நம்பி அவற்றை அறிந்து நியாயப்படுத்த முயற்சிப்போம். மக்கள் மத்தியில் அன்பும் நல்லெண்ணமும் பரஸ்பரம் உதவும் மனப்பான்மையும் நிலைபெறுவதற்கு இவ்வியமான சிறியளவு கருத்து வேறுபாடுகள் எந்த வகையிலும் காரணமாகக் கூடாது. அவர்களும் எங்களைப் போன்ற முஸ்லிம்களே என்று மதித்து மரியாதையாகவும், கண்ணியமாகவும் அவர்களுடன் நாம் நடந்துகொள்வதற்கு இவை ஒருபோதும் தடையாகவும் அமையக் கூடாது. ஏனெனில் அவர்களும் எங்களைப் போன்ற முஸ்லிம்கள் அன்றோ!''

'மற்றவர்கள் எங்களைத் துன்புறுத்தக் கூடாது. அவமான எங்களின் மன அமைதியைக் குலைக்கக் கூடாது' என்று நாம் எப்போதும் விரும்புகிறோம். எனவே மற்றவர்களும் நம்மிடமிருந்து இவ்விதம் எதிர்பார்ப்பதில் தவறில்லையல்லவா, எங்களுக்காக நாம் விரும்புவதையே நமது சகோதரர்களுக்காகவும் நாம் விரும்பவேண்டும் என்று இஸ்லாம் எங்களிடம் எதிர்பார்க்கின்றது. எனவே எம்மிடையே கருத்து பேதங்களுக்கு எவ்வித நியாயமுமில்லை. மற்றவர்களின் கருத்துக்களைப் பற்றி நாம் ஆராய்வது போல எங்களது கருத்துக்களைப் பற்றி அவர்களும்

ஆராதனையில் என்ன தவறிருக்க முடியும்? இணைக்கும் கலை புகுத்த அம்சங்களை புகுத்த வேண்டாம் என்று நாம் கள் ஏன் அனுமதிக்கக்கூடாது? நாமது அணுகுமுறை எப்பொழுதும் இப்படியாகவே இருக்க வேண்டும். எல்லோருக்கும் அறிவுண்டு. எல்லோரிடமும் குறைபாடுகளும் இருக்கலாம். எவரேனும் நல்லதை எடுத்து அல்லாஹ்வின் திருப்பொருத்தத்துக்கு விடவும் அவற்றில் உள்ள குற்றம் குறைகளை சுட்டிக்காட்டப்பட்டவர்களுக்கு அன்பாக உணர்த்தவும் நாங்கள் பழகிக்க வேண்டும். அப்படி செய்யும் அவர்கள் எங்களுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்ளா விட்டாலும் அவர்களை எமைப் போன்ற முஸ்லிம்களே என்று நாம் மதித்து நடந்து கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். நேர்வழியில் நிலைத்து நிற்க எமக்கும் அவர்களுக்கும் அருள் புரியுமாறு நாம் அல்லாஹ்விடம் பிரார்த்திக்க வேண்டும்.''

மறக்க வேண்டாம்

இந்த நூற்றாண்டில் இஸ்லாமிய தஃவாப் பணியில் முன்னோடியாகத் திகழ்ந்த மௌதூதியின் குருவாராய இமாம் ஹஸனுல் பன்னா (ரஹ்) அவர்கள் இப்படி வழிகாட்டுகிறார்கள். அவ்வாறே இந்த மணியான கருத்துக்களையும் நாம் பெரும்பகுதி மறந்துவிட்டோம். இவ்வாறு நாங்கள் முயற்சிப்போமே. அதனை அறிந்துவிட வழிசெய்வோமா? நிச்சயம் இது நம் கருத்தாகும்.

ஆகவே, தஃவாப் பணி போட்டா போட்டியல்ல; சச்சரவு சச்சரவுக்குரியதுமல்ல. அது கூட்டு முயற்சியோடு ஒற்றுமையாக செய்ய வேண்டிய மகத்தான புனிதமான ஒரு பணியாகும் என்பதை நாம் உணரவேண்டும். எப்போதும் புரிந்துணர்வோடு எல்லோரும் அதில் ஈடுபட்டு உழைக்கவேண்டும்.

## இஸ்லாமிய இயக்கங்கள் ஒன்றுபட...

மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு, அவர் அளித்த பதில்களும்.

கேள்வி- இஸ்லாத்தை விரும்பும் இயக்கங்கள் ஒற்றுமைப்பட முடியுமா?

பதில்- முடியும் என்பது மட்டுமல்ல, அது கண்டிப்பாகச் செய்யப்பட வேண்டிய ஒன்றுமாகும்.

கேள்வி- இது (ஒற்றுமை) சாத்தியம் என்று உங்கள் கருத்தாயின், இதன் வழிமுறை என்ன?

பதில்- உண்மையில், சம்பந்தப்பட்ட யாவருமே ஒன்றிணைந்து அமர்ந்து பேசுவதன் மூலமே சரியான வழிவகைகளைக் கண்டு இயக்குவது கஷ்டமாகத் தீர்மானிக்க முடியும். ஆனால், அதற்கான ஒரு பிரதானமான நிபந்தனை இஸ்லாத்தை விரும்புபவர்கள் யாவரும் ஒன்றுபட இணைந்து ஒன்றிணைதல் வேண்டும் என்பது அந்த நிபந்தனையாகும். அல்லாமல் தனிப்பட்ட குழு, இயக்க உணர்வுகளுக்கு இடமளித்துவிடக் கூடாது. இவற்றை இஸ்லாமின் மீது கொண்ட நம்பிக்கையின் பேரில் ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும். (ஒற்றுமைக்கு இதுவே வழி.)

ஆதாரம்; 'Guidelines in the Conflict of Ideologies' page 28

## சுவர்க்க வாசிகள்

ஒரு தினம் பெருமானார் (ஸல்) அவர்களைச் சுற்றி அவர்களின் பிரிய தோழர்கள் அமர்ந்திருந்தனர். அப்போது நபிகள் (ஸல்) அவர்கள் தம் தோழர்களை நோக்கி ''இன்று உங்களில் நோன்பு நோற்றிருப்பவர் யார்?'' என்று கேட்டார்கள். அப்போது அபூபக்கர் (ரலி) அவர்கள் எழுந்து ''பெருமானார் அவர்களே! நான் இன்று நோன்பு வைத்திருக்கின்றேன்'' என்று கூறினார்கள். மீண்டும் நபிகள் (ஸல்) அவர்கள் ''இன்று உங்களில் ஏழைகளுக்கு அன்னமிட்டவர் யார்?'' என்று கேட்டார்கள். அதற்கும் ''பெருமானார் அவர்களே நான் இன்று ஏழைகளுக்கு அன்னமளித்தேன்'' என்று அபூபக்கர் (ரலி) அவர்களிடமிருந்தே மட்டுமே பதில் வந்தது. மீண்டும் நபிகள் (ஸல்) அவர்கள் ''இன்று உங்களில் நோயாளியை யாரேனும் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் அளித்தவர் யார்?'' என்று கேட்டார்கள். அதற்கும் ''பெருமானார் அவர்களே நான் இன்று நோயாளியைச் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறினேன்'' என்று அபூபக்கர் (ரலி) அவர்களிடமிருந்து மட்டுமே விடை வந்தது. இதனைக் கேட்ட நபிகள் (ஸல்) அவர்கள் தம் தோழர்களை நோக்கி ''இவர்கள் காரியமான மிக உயர்ந்த பணிகளிடமே மேற்கூறிய நற்குணங்கள் அனைத்தும் ஒன்றுசேர்ந்திருக்கும் என்று தெரிந்து கொள்ளுங்கள்'' என்று கூறினார்கள்.

ஆகவே மேற்கூறப்பட்ட காரியங்கள் அனைத்தையும் செய்து அவர்களின் சுவர்க்கத்தையும் அடைவோம். அல்லாஹ் பெருமானாரின் வழியில் நம் அனைவருக்கும் அருள் புரிவானாக!

எம். ஜே. எம். முபாரக், கந்தளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியப் பிரச்சாரத்தில் இஸ்லாமியப் பெண்கள் (1)

மௌலானா அமீன் அஹ்ஸன் இஸ்லாஹி - தமிழில்: டாக்டர் அஜ்வாத் மரிக்கார்

## பூவையர் பூங்கா

பிழையான கல்வியும் பயிற்சியும் அளிக்கப்பட்டிருப்பதன் காரணமாகவும்; பிழையான பிரச்சாரத்தின் பரவலின் காரணமாகவும்; பெண்மணிகள் தமது உணவுக்கும் உடைக்கும் பொறுப்பானவர்களாக ஆண்களை எண்ணுவது போன்று, மார்க்கத்தின் சகல பொறுப்புக்களும் ஆண்களோடு மாத்திரம் சம்பந்தப்பட்டதென எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், முஹம்மது நபி (ஸல்) அவர்களும் ஏனைய எல்லா நபிமார்களும் தாம் கொண்டு வந்த மார்க்கத்தை ஆண்களுக்குப் போலவே பெண்களுக்கும் சேர்த்துத் தான் போதித்தார்கள் என்பதை நான் பூரண பொறுப்போடு அழுத்தமாகக் கூற விரும்புகிறேன். கடமை, விதிகளின் வரம்பில் வேறுபாடுகள் கண்டிப்பாக இருந்தன. ஆனால் மார்க்கத்தை ஏற்றுக் கொள்வதிலும் அதனை நிலை நாட்டுவதிலும் சத்தியத்தின் பாதையில் முயற்சி மேற்கொள்வதிலும் இறைவனிடத்தில் பதிலளிக்க வேண்டியதிலும் விசாரணைக்குட்படுத்தப் படுவதிலும் இரு பாலாரும் சமமானவரே. எவ்வாறான சம நிலை என்றால், ஒரு பெண் தன்மீது அல்லாஹ்வால் சாட்டப்பட்ட பொறுப்பையும், கடமையையும் சரிவர நிறைவேற்றாது விட்டால், ஓர் ஆண் தன்மீது சுமத்தப்பட்ட பொறுப்பை நிறைவேற்றாததற்கு எந்த விதத்தில் விசாரணைக்குட்படுத்தப்படுவாரோ, அதே போன்று, அந்தப் பெண்ணும் அல்லாஹ்வினால் விசாரணைக்குட்படுத்தப்படுவார். அல்லாஹ்வின் விசாரணையில் இருந்து அவர் தப்பவே முடியாது.

நீங்கள் உங்கள் சரித்திரத்தைப் புரட்டிப் பார்ப்பீர்களேயானால், இறைவனின் சத்திய சன்மார்க்கத்தை நிலை நிறுத்தும் பணியில் ஆண்களைப் போன்று சில சமயம் பெண்களும் பங்கு பற்றியவர்கள் என்பதை விளங்கிக் கொள்வீர்கள்.

நபி நாயகம் (ஸல்) அவர்கள் சத்திய இஸ்லாத்தைப் பறைசாற்றி அழைப்பு விடுத்த வேளையில் முதல் முதலாக அதனை ஏற்றுக் கொண்டோர்களுள் ஓர் உத்தமி - ஹஸ்ரத் கதீஜாத்துல் குப்ரா (றழி)யும் இடம்பெற்றார் என்பது ஒவ்வொருவரும் அறிந்த விடயம். அந்தச் சமயத்தில், இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வது அவ்வளவு இலகுவான ஒரு காரியமாக இருக்கவில்லை. மாறாக, மகத்தான தொல்லைகளை விலைக்கு வாங்குவதற்கு நிகராய் இருந்தது. அத்தகைய ஆபத்தான நேரத்தில் அந்த மாது சிரோன்மணி இஸ்லாத்தை அங்கீகரிப்பதோடு மாத்திரம் நின்று விடவில்லை. அருமை நாயகம் (ஸல்) அவர்கள் தமது தூதைப் பிரச்சாரம் செய்வதில் உற்சாகமூட்டும் உயர் பணியை மேற்கொண்டார்கள். அல்லாஹ்வின் உதவியில் நம்பிக்கையும் நாட்டமும், தேட்டமும் வைப்பதற்குரிய அறிவுரை வழங்குபவராகவும் அமைந்தார்கள்.

நபிகள் நாதர் (ஸல்) அவர்களுக்கு முதல் முதலாக ஆறுதல் கூறும் பாக்கியம் இந்த இல்லத்தரசிக்கே கிடைத்தது. அத்துடன், சத்திய இஸ்லாத்தை முதன் முதலில் ஏற்றுக்கொண்ட பெருமையும் இந்த அம்மையாருக்கே கிடைத்தது. அவர்கள் இஸ்லாத்தைத் திடசங்கற்பத்துடனும் உளப்பூர்வமாகவும் அங்கீகரித்தார்கள். இப்பெருமாட்டியின் விசுவாசத்தின், தெளிவின் தன்மை பெண்களுக்கு மாத்திரமின்றி, ஆண்களுக்கும்-ஏன் மனித இனம் அனைத்துக்குமே பெருமையளிப்பதாகும்; தனது செல்வம், திறமை, இதயம் அனைத்தையும் இஸ்லாத்தின் உயர்ச்சிக்காக அர்ப்பணித்தார்கள். அவர்களது மரணம் நபிபெருமானார் (ஸல்) அவர்களுக்கு எல்லாவற்றிலும் அதிகமான துயரத்தையும் துக்கத்தையும் அளித்தது; தனது அருமை மனைவி இறந்துவிட்டாரே என்ற கவலை நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்படவில்லை. இஸ்லாத்தின் மிகப் பெரிய தியாகி இவ்வுலகை விட்டுப் பிரிந்து விட்டாரே என்ற கவலை நாயகம் (ஸல்) அவர்களை வாட்டியது.

சத்தியத்தின் காவலர்களுக்குக் கடுமையிலும் கடுமையான சோதனைகள் ஏற்பட்டன. அவர்கள் எதிர்நோக்காத எந்த ஒரு தொல்லையும் இருக்கவில்லை. பரத்தப்பட்ட முட்களின் மீது இழுத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பட்டார்கள். அவள் கத்தும் மனைத்துணை யில் பறிக்கப்பட்டுவிட்டார்கள். தெருவில் வரும் போதிய இருப்பினால் குறிவிடப்பட்டார்கள். மிகக் கொடூரமாக அடக்கப்பட்டார்கள். உதைக்கப்பட்டார்கள். ஆண்களைப் போன்றே பெண்களும் இத்தகைய தொல்லைகளுக்கெல்லாம் இலக்கானார்கள். எனினும், கஷ்டங்களையும் கடுமையான தொல்லைகளையும் சகித்துக்கொள்வதில் பெண் (ஸஹாபாக்)கள் காட்டிய முன்மாதிரியை ஆண் (ஸஹாபாக்)களால்கூடக் காட்ட முடியவில்லை. எந்தச் சூழ்நிலையும் தொல்லையும் சத்தியத்தின் மீதான அவர்களது பற்றை வலுவிழக்கச் செய்யவில்லை. அசத்தியவாதிகளது சித்திரவதைகளினால் சத்தியச் சோதியை நிறுத்த முடியவில்லை; மறைக்கவும் முடியவில்லை.

சத்தியத்தின் சோதனைகளுக்கு மக்காவும் ஈடு கொடுக்கவில்லை என்ற சூழ்நிலை உருவாகியது. குறைஷிகள் முஸ்லிம்கள் மீது இறைவனின் பூமியைச் சுருக்கி விட்டார்கள். முஸ்லிம்கள் தம் பிறந்தகத்தைத் துறந்து அபிசீனியாவுக்கு ஹிஜ்ரத் மேற்கொண்டார்கள்.

பிற நாட்டுக்குத் தஞ்சம் தேடிச் சென்றவர் முதற் பிரயாணத்திலும் ஆண்களுடன் புறப்பட்டனர் பெண்மணிகள் பலர்.

இதன்பின், மதீனாவுக்கு ஹிஜ்ரத் புறப்பட வேண்டிய காலம் வந்தது. எவ்வாறு ஆண்கள் தமது சுற்றார் உறவினர், உறைவிடம், நாடு, சொத்து, செல்வம், தோட்டம் துரவு அனைத்தும் துறந்து வெளியேறினார்களோ, அவ்வாறே, பெண்களும் தமது உடைமைகள் யாவற்றையும் துறந்து சத்தியத்தின் பாதையில் மதீனா நோக்கிப் புறப்பட்டார்கள்.

இஸ்லாமிய வரலாற்றின் இரண்டாவது கால கட்டத்தில் பெண்கள் மேற்கொண்ட தியாகங்கள், வீரியம், பொறுமை, அறிவு போன்றவை அவர்களுக்கு இஸ்லாத்துடனான இணைப்புக்கு அழகான உதாரணங்கள் அநேகம் உண்டு. அவற்றை ஒவ்வொன்றாக விளக்க முற்பட்டால் விரிந்துகொண்டே செல்லும்.

அறியாமைக் காலப் பெண்கள் பற்றி அநேகமானோர் சரியாக உணர்ந்தார்களோ, எப்படியோ இஸ்லாத்தின் போதனையின் அடிப்படையில் ஆண் - பெண் இருபாலாருக்கும் உரியதுதான் என்ற தெளிவு இஸ்லாத்தில் பதிந்திருந்ததோ. இவ்வாறாக நிறைவுற்ற பொறுப்புகளைச் சுமப்பதில் இருபாலாரும் சமமாக இருக்கின்றனர் என்ற தெளிவு நிலைபெற்றிருந்ததோ" அதுவரை பெண்கள் தனித்தும் நிறைந்த சேவைகளைச் செய்திருக்கிறார்கள். (இஸ்லாம் இருப்பது போன்று) சத்தியப் பாதையின் முதன்மை பாதைகளாக (அவர்கள்) அமையவில்லை.

அமானிதச் சூழலில் பெண்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமாக இருந்தது. இதனால், எதிரிகள் அவர்கள் மீது பழி சுமத்தவும் அதேபோல் இழுக்கவும் எதிரான வாய்ப்பினைத் தேடினர். கொடுமை, வெறுப்பு அத்தனையையும் பெண்கள் சகித்துக் கொண்டார்கள். உதாரணத்துக்கு மேலாக, ஆயிஷா (றழி) அவர்கள் மீது அபாண்ட அவதூறு சுமத்தி அந்த நேரமும் பெண்கள் சோதனைக்குள்ளான வரலாற்றைச் செவியுறும்போது உள்ளத்தில் உணர்வும், கண்ணில் கண்ணீரும் பிறக்கின்றன.

உஹதுப் யுத்தகளத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் அவர்களது தோழர்களுக்கும் மிகவும் கஷ்டமான நிலைமையைச் சமாளிக்க வேண்டிய கட்டம் ஏற்பட்டது. இந்தப் போரில் இடம்பெற்ற ஒரு சம்பவம் நிகழ்ச்சியொன்று 'பெருமானார் (ஸல்) அவர்கள் ஷஹீதாகிவிட்டார்கள்' என்று செய்தி பரவியது. இந்தச் செய்தி மதீனா வரை எட்டியது. சத்தியத்தை விளங்கிய தனிப்பெரும் பெண்கள், பெண்மணிகளின் உள்ளங்களை உணர்ந்து வந்த மங்கையர், நாயகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நாயகம் (ஸல்) அவர்கள் நேரில் சந்திக்கும் வரை மதீனாவில் இருக்கவில்லை. யுத்த களத்தை நோக்கிப் புறப்பட்டனர். போர்க்களம் நோக்கிப் புறப்பட்டவர்களுள் அன்னையரும் பெண் மங்கையரும்.

போர்க்களத்தில் இருந்து காயப்பட்டோர் எல்லோரையும் சந்தித்தார்கள். நபிகள் (ஸல்) அவர்களது நிலை பற்றிய விசாரித்தார்கள். இவ்வாறு மதீனா நோக்கி வருகையில், "அல்லாஹ்வின் தூதரது நலமும், நலமும், சுகமும் அவரவர்களே" என்ற ஆறுதலான செய்தியை அறிந்தார்கள். இதே கடும் சோதனையும் வேதனையும் நிறைந்த வேளை, இவர்களுள் துணிவான இரு பெண்களின் இருதயங்கள் சகிப்புத் தன்மை கொண்டவை.

நன்மையைப் பெற்று வளர்த்த தந்தை, தாய், மகன், கணவன், அன்புக் குழந்தைகளின் மரணச் செய்தி சகித்துக் கொண்டார்கள். இறுதியில் அந்த மங்கையரின் இவ்வாறான இருதயங்களின் தன்மை எத்தகையது என்பதை அறிந்தவர்கள் அவர்களது வாழ்வின் மிகுந்த சோர்வடையவில்லை.

"எனது தந்தை, தாயார், கணவர் மற்றும் சகோதரர்கள் உயிரிழந்தனர் என்பது எனக்கு கவலையில்லை. இறைவனின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் நலமுடன் இருக்கிறார்கள்" என்றார் கள் அந்தப் பெண்மணி, அன்னையர் மீண்டும் பெரு

(தொடர்ச்சி 22ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1ம் பக்கத் தொடர்)

# அணையாத தீபம்..

ருந்த அவர் இந்த நவீன யுகத்தில் இஸ்லாமிய எழுச்சிக்கு ரத்த வித்திட்டுச் சென்றுவிட்டார். "ஆப்கான் முஜாஹிதுகளுக்கு ஆதரவாக ஒவ்வொரு நாட்டிலிருந்தும் குறைந்த பட்சம் ஒருநூறு வாலிபர்களையேனும் அனுப்ப வேண்டும். தங்கள் உயிரையும் உடலையும் உடைமைகளையும் தியாகஞ் செய்து உறுதியுடன் உலகத்தை நட்டி விட்ட இந்த ஆப்கான் முஜாஹிதுகளுக்கு தேவையான உணவு, உடை, மருந்துவகைகள், பயிற்சிகள் போன்றவற்றைப்பெற்றுக் கொடுப்பது இன்றைய முஸ்லிம்களின் கடமையாகும்." இவ்வாறு டாக்டர் அஸ்ஸாம் தமது பேச்சிலும் எழுத்திலும் இஸ்லாமிய ஜிஹாதுக்கு ஆதரவு திரட்ட அவர் மேற்கொண்ட பிரயாணங்களின்போது பலதரத்தவர்களுடன் ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்புகளிலும் வலியுறுத்தினார்.

இஸ்லாத்தின் எதிரிகள் பொல்லாதவர்கள். அவர்கள் நவீன பிரசார சாதனங்கள் மூலம் ஆப்கான் ஜிஹாதை ஓர் அநாகரிகமான போராட்டமாகக் காட்ட முயல்கிறார்கள். ஏமாந்துவிடாதீர்கள்! தோள்கொடுக்கும் தோழர்களென்றும் அவர்கள் பேச்சு வார்த்தை மூலம் தீர்வுகாண அழைப்பு விடுப்பது மிகப்பெரிய ஒரு சதியாகும். அமெரிக்காவும் ரஷ்யாவும் விடுக்கும் இந்த அழைப்புக்கு ஷரீஅத்தில் எவ்வித அங்கீகாரமும் கிடையாது. பாலஸ்தீனத்திலும் வேறுபல இடங்களிலும் முஸ்லிம் போராளிகள் பெற்ற அனுபவங்களும் இந்தச் சதிகாரக் கும்பல்களின் சூழ்ச்சிமிக்க முயற்சிகளை நன்கு அம்பலப்படுத்தி நின்றன. எனவே, இவர்களுடன் நேருக்கு நேர் போராடுவதுதான் ஒரே வழி. அதில்தான் முழு வெற்றியுமிருக்கிறது. இதைவிட்டு விட்டு வட்டமேசைகளிலும் ஜெனீவாவிலும் வேறு இடங்களிலும் பேசித் தீர்க்க நினைப்பது எங்களை அது வெற்றிபெறுவதைவிட்டு திசை திருப்பிவிடும்; எமது பிரச்சினைகளை மூடிமறைத்து மீண்டும் எம்மை அடிமைகளாக வாழச் செய்துவிடும் என்றும் அவர் எச்சரித்தார்.

ஆகவே எமது ஜிஹாதின் வழி எவ்வளவு தூரமானதாயினும் அதை நாம் துணிவோடு தொடர வேண்டும். எமது கொள்கைக்காக கடைசி மனிதனின் உயிரையும் இதற்காக விட நேர்ந்தாலும் நாம் தயங்கக் கூடாது. இஸ்லாமிய அரசு ஏற்படுத்தப்பட்டு உலகில் இஸ்லாமிய வாழ்க்கைமுறை மீண்டும் ஏற்படுத்தப்படும்வரை நாம் இப்பிரயாணத்தை தொடர்ந்தே ஆகவேண்டும் என்றும் அவர் விளக்கினார்.

"உலமாக்களே முஸ்லிம் நாடுகள் முன்னரைப் போன்று ஒன்றாக பறிக்கப்பட்டு விட்டன. அக்கிரமக்காரர்கள், அப்பாவிகளான எமது மக்களை மிகவும் கொடூரமான முறையில் அடிமைப்படுத்திவிட்டார்கள். இஸ்லாத்தைப்பற்றி இவர்கள் இழிவாகப் பேசுகிறார்கள், இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் இல்லாதொழிப்பதையே அவர்கள் இலட்சியமாகக் கொண்டிருக்கிறார்கள். நிலைமை இப்படியிருக்க இஸ்லாத்தின் காவலர்களான நீங்கள் எப்படி வாய்பொத்தி மௌனிகளாக இருக்க முடியும்? உலமாக்களாகிய உங்களின் மேடைப் பேச்சைக்கொண்டு உங்கள் பணியை மட்டுப்படுத்த விரும்பாதீர்கள். அதற்கு அப்பாலும் களத்தில் உங்கள் பங்களிப்பை மக்கள் காணவிரும்புகிறார்கள்" இவ்வாறு டாக்டர் அஸ்ஸாம் ஆலிம்களையும் அறிஞர்களையும் தூண்டுவார்.

அவர் விரும்பியிருந்தால் அறபு நாடொன்றில் உள்ள ஏதாவதொரு பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகக் கடமைபார்த்து மாணவர்களின் மூளைகளில் இஸ்லாமிய கருத்துக்களைத் திணித்திருக்கலாம். செல்வத்தையும் பணமும் சேர்த்திருக்கலாம். இப்படிச் செய்வது பிழையல்ல. ஆனால் இப்போது அதற்கான தருணமல்ல என்று அவர் தீர்மானித்தார்.

அவரது இந்த முடிவு முழு உலகிலும் முஸ்லிம்கள் மத்தியில் ஏகாதிபத்தியத்துக்கெதிரான ஜிஹாத் முயற்சிகளைத் தூண்டிவிட்டது. இன்னொரு முஸ்லிம் மனிதனும் அவர் வாழும் பகுதியிலும் இஸ்லாமிய ஜிஹாதுக்கான சரியான தருணம் இது என்ற எண்ணம் உறுதியாக பதியச்செய்தது.

ஆப்கான் மக்களோடு சேர்ந்து இவர் மேற்கொண்ட ஜிஹாதின் காரணமாக ரஷ்யா என்ற வல்லரசு அதற்கு அந்தப் பெயரைக் கொடுத்த கம்யூனிஸ சித்தாந்தத்தையே தக்கி எறிந்துவிட்டு ஓடி ஒளிந்துகொள்ள மறைவிடம் தேடும் நிர்ப்பந்த நிலைக்கு ஆளாகி விட்டது. பொல்லாத சர்வாதிகாரிகளான கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட் தலைவர்களையும் அவர்களுக்கு அரணாக அமைந்த நாடுகளையும் மாற்றுவழி என்ன என்று கேட்டுக்கொண்டு தேடித் திரியச் செய்துவிட்டது. இஸ்லாமிய ஜிஹாதுக்கு மீண்டும் உயிரூட்டப்பட்டதைக் கண்டு ரஷ்யாவும் சீனாவும் மட்டும் பயப்படவில்லை; ஜனநாயகத்தின் பாதுகாவலன் என்று தம்பட்டம் அடிக்கும் பெரிய வஞ்சகத்தமைப்பான அமெரிக்காவுக்கு வயிற்றைக்கலக்க ஆரம்பித்து விட்டது!! அதையும் போறும் வினைக்கு எழுந்து வழிந்துபின்னர் தானே அழைப்பும்! இதோ மக்கள் விரோதிகளான இவர்கள் எல்லாம் கைகோர்த்து ஆப்கான் முஜாஹிதுகளையும் அவர்களால் சமூகத்துக்கு வழங்கப்பட்ட முஸ்லிம் தலைவர்களையும் கொன்றொழிக்கத் திட்டமிட்டுள்ளார்கள். பலர் இந்த வழியில் படுகொலை செய்யப்பட்டார்கள். வேறுபலருக்கு இழிவும் அவமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏன், ஆப்கான் ஜிஹாதின் அச்சாணிகளில் ஒன்றாக விளங்கிய அப்துல்லாஹ் அஸ்ஸாம் அவர்களையும் அவர்களின் இரு ஆண்மக்களையும் 24.11.89 அன்று கொன்றுவிட்டார்கள் இந்தக் கொலையாளிகளின் கையாட்கள்.

அப்துல்லாஹ் அஸ்ஸாம் ஷஹீதானாலும் அவர் ஆற்றிய ஜிஹாத் என்ற இஸ்லாமியப் பெருந்தீபம் அணையவே மாட்டாது! அவரை மனிதர்கள் எவரும் இவ்வுலகில் இனிக் காணமுடியாது. ஆனால் "முஸ்லிம்களே, உங்கள் வாழ்க்கை ஜிஹாதாக வேண்டும். உங்கள் கல்வியும் ஜிஹாதில்தான் உள்ளது. உங்கள் ஜிஹாதின் தரத்துக்கு ஏற்றதாகவே உங்களின் வாழ்க்கைத் தரமும் அமையும். இதை மறந்துவிடாதீர்கள். ஆகவே உங்கள் வாழ்க்கைகளை ஜிஹாத் வழியாக ஜிஹாத் மூலம் கிடைக்கும் வெற்றியை நோக்கி நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்ற அவர் மூட்டிய தீபம் இஸ்லாமிய உணர்வுள்ள ஒவ்வொரு முஸ்லிமின் உள்ளத்திலும் என்றும் அணையாது எரிந்துகொண்டிருக்கும்.

ஜிஹாதின் வழியில் உயிர் துறப்போர் மரணிப்பதில்லை என்பது அல்குர்ஆனின் உறுதிமொழி. ஆகவே அப்துல்லாஹ் அஸ்ஸாம் வாழுகிறார். அவரைக்கொண்டு இஸ்லாத்தின் எதிரிகளையும், அவர்களை இந்நிலைக்கு இட்டுச்சென்ற தவறான கொள்கைகளையும் முறியடித்து அல்லாஹ்வின் தீனை மேலோங்கச் செய்ய அவரைப் போல நாமும் இஸ்லாமிய ஜிஹாதைத் துணிவோடு தொடர்வோமாக.

அல்லாஹ்வின் உதவி எப்போது கிடைக்கப் போகிறது என்று கேட்கிறார்கள். நிச்சயமாக அல்லாஹ்வின் உதவி மிகச் சமீபத்திலிருக்கிறது. (அல்குர்ஆன் 2:214)

## தஃப்ஸீருல் குர்ஆன் நிகழ்ச்சிகள்

1. சுவரொட்டி, விடுகதைப் போட்டி
2. தப்ஸீர் [illegible]
3. போட்டிப் பரீட்சை
4. தஜ்வீத், ஹிப்ழுல் குர்ஆன் போட்டிகள்
5. விசேட குத்பாக்களும் பயான்களும்
6. கருத்தரங்குகள்
7. குர்ஆன், குர்ஆனியக் கலை கண்காட்சி
8. குர்ஆன் பற்றிய நூல்கள் மலிவு விற்பனை
9. சொற்பொழிவு, கிராஅத், தர்ஜுமா கெஸட் விற்பனை
10. அல்ஹஸனாத் [illegible] விசேட மலர் வெளியீடு

குர்ஆனுடன் தொடர்புள்ள இவை புனிதமான நிகழ்ச்சிகள். எனவே நீங்களும் அவசியம் இவற்றில் பங்குபற்ற வேண்டும்

ஒரு ரூபா முத்திரை ஒட்டி, உங்கள் விலாசம் எழுதிய நீண்ட என்வலப் அனுப்புங்கள்.

முந்திக்கொள்ளுங்கள்

இலங்கை ஜமாஅதே இஸ்லாமி
தஃப்ஸீருல் குர்ஆன் பகுதி
137, தேவானம்பியதிஸ்ஸ மாவத்தை,
கொழும்பு-10.

### தஃப்ஸீருல் குர்ஆன் சிறப்பிதழ்

அல்ஹஸனாத் ஏப்ரல் - ரமழான் இதழ் தஃப்ஸீருல் குர்ஆன் சிறப்பிதழாக வெளிவரும் இன்ஷா அல்லாஹ். அல்குர்ஆனை ஓதி, விளங்கி, அதன்படி வாழ்வதன் அவசியத்தை விளக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தாங்கி வரும் அந்த அரிய இதழில்:

முஸ்லிம் நாடுகளில் ஜமாஅதே இஸ்லாமியின் தஃப்ஸீருல் குர்ஆன் நிகழ்ச்சிகளைப் பற்றிய விளக்கம்

குர்ஆனிய சேவை செய்துவரும் [illegible] விசேட பேட்டிகள்

குர்ஆனிய பொருளாதாரத் திட்டத்தின் முக்கியமான கொள்கை கூட்டாகச் சேர்த்து திட்டமிட்டு விநியோகிக்க உதவும் வழிகாட்டல்கள்

உலமாக்களின் வாழ்த்துக்களும் கருத்துரைகளும்

இன்னும் பல.

உங்கள் பிரதிக்கு பதிவுசெய்து கொள்ளுங்கள். நண்பர்களுக்கு கொடுக்க மேலதிக பிரதிகள் தேவைப்படுவோர் ஒரு பிரதிக்கு 7/50 வீதம் 15.3.90க்கு முன் பணம் செலுத்தி முன்கூட்டி பதிவுசெய்து கொள்ளவும். கடைசிவரை காத்திராதீர்கள்.

● ஆசிரியர்

ஜமாஅத்திடமிருந்து உங்களுக்கு

ரமழான் மாதம் குர்ஆனின் மாதம். அந்தப் புனித மாதத்தில் அல்குர்ஆனை -

● அதிகமாக ஓதி-நன்கு விளங்கி-அதன்படி வாழ்ந்து அதன்பால் மற்றவர்களையும் அழைத்து வாழ்க்கையில் வெற்றிபெற ஜமாஅதே இஸ்லாமி உங்களை அழைக்கிறது.

● அல்குர்ஆனின் [illegible] [illegible] மத்தியில் சிறப்பாக நடத்த உங்கள் ஒத்துழைப்பை ஜமாஅதே இஸ்லாமி எதிர்பார்க்கிறது

● "அல்குர்ஆனைக் கற்றவர்களும் அதனைக் கற்றுக் கொடுப்பவர்களுமே உங்களில் சிறந்தவர்கள்" என்ற நபிமொழியை ஜமாஅதே இஸ்லாமி உங்களுக்கு நினைவூட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மான உணர்ச்சி வேண்டும்

முஸ்லிம்கள் மான உணர்வுடன் திகழவேண்டும் என்று இஸ்லாம் விரும்புகிறது. ஆனால் நம்மில் பலர் தேவைப்படும் இடத்தில் மான உணர்ச்சி கொள்வதாகத் தெரியவில்லை. வீணில் கொதித்தெழுந்து யாது பயன்?

பெண்களை ஆண்கள் மத்தியில் நடமாட விடுவதும், கடைத் தெருக்களில் அலைய அனுமதிப்பதும் மானங்கெட்ட செயல் என்று இமாம் கஸ்ஸாலி (ரஹ்) இயம்புகிறார்கள். ஆனால், இன்று முஸ்லிம்களில் சிலர் தம் மனைவிமாரையும், புத்திரிகளையும் பிற ஆடவர்களுடன் கை குலுக்க விடுவதையும், சினிமா, டிராமாக்களுக்குச் சிங்காரித்து அழைத்துச் செல்வதையும் 'பேஷன்' எனக் கருதுகிறார்கள். பர்தா வழக்கம் அநாகரிகம் என்கிறார்கள். இது எத்துணை மானங்கெட்ட செயல் என்பதை இவர்கள் கவனிப்பதில்லை. பெண்களின் சீலம் சிதைந்து சீரழிவது பற்றியும் இவர்களுக்கு அக்கறை இல்லை. ''உங்களின் பெண்களைக் கடைத்தெரு நெருக்கில் கூட்டிச் செல்கிறீர்களா? தீர்க்கமாக மானமில்லாதவர்களை அல்லாஹ் பரிகசிக்கக் கூறுகிறான்'' என்று ஒரு சமயம் இமாம் ஹஸன் (ரழி) சாற்றியிருக்கிறார்கள்.

## வெட்கப்பட வேண்டும்

பாமர முஸ்லிம்களில் பலர், தமது பெண்களை தர்கா சியாரங்களுக்கும், சந்தனக்கூடு, கொடியேற்றம் போன்றவைகளுக்கும் தாராளமாக அழைத்துச் செல்வதை புண்ணியமாம் என்று கருதுகிறார்கள். ரயில்களிலும், பஸ்களிலும், தியேட்டர்களிலும் பிற ஆடவர்களுடன் போட்டியிட்டுச் செல்வதைக் கண்டுறுவது எத்துணை இழிசெயல் என்பதை இவர்கள் கவனிப்பதாகத் தெரியவில்லை. ''மிகக் கேடுகெட்ட துர்க்குணம் ஒருவன் ரோஷமில்லாதிருப்பதே. தனது தாயும், தனது மனைவியும் கடைத்தெருக்களிலும் மக்கள் கூட்டங்களிலும் இடித்துச் செல்வதைக் கண்டு வெட்கப்பட வேண்டாமா?'' என்று இப்னு மஸ்ஊத் (ரழி) இடித்துரைக்கிறார்கள். என்றைய தினம் முஸ்லிம் தங்கள் பெண்களை கட்டவிழ்த்து விட்டவர்களாக நடமாடத் துவங்கினார்களோ அன்றிலிருந்து சமுதாயத்தின் வீழ்ச்சிப் படலம் ஆரம்பமாகியது என்பதை மனதிலிருத்த வேண்டும். இஸ்லாம் வெறும் வேஷமான முன்னேற்றத்தை விரும்பவில்லை. அது விரும்புவதெல்லாம் ஒழுக்க சீலத்தையும், மனிதப் பண்பாடுகளையும் தான் என்பதனை நிலைநாட்டி வாழ்வை சிறப்பாக்கும்.



# மாணவர் மன்றம்

## சிறப்பு

''பாத்திமா! பெண்களுக்குச் சிறப்பளிப்பது எது?' அவர்கள் பிற ஆடவர்களைக் காணாதிருப்பதும், அவர்களைப் பிற ஆடவர்கள் காணாதிருப்பதும் தான் தந்தையே!'' இவ்வாறு நம் பெருமானாருக்கும் பாத்திமா நாயகிக்குமிடையில் உரையாடல் நிகழ்ந்தது. மகள் கூறிய பதிலைக் கேட்டு பெருமானார் மனம் பூரித்தவர்களாய் தம் திருமகளாரைப் பாராட்டி முத்தமிட்டார்கள். இந்த அடிப்படையிலேயே ஸஹாபாக்கள் தம் இல்லங்களைத் தக்க பந்தோபஸ்து செய்பவர்களாயிருந்தனர் என்று வரலாறு கூறுகிறது.

பர்தா அணியாதிருப்பதால் பல தொல்லைகள் விளைகின்றன; வாழ்க்கையில் சீர்குலைவுகள் நிகழ்ந்து விடுகின்றன. ஆகையால் பர்தா அணிவதைப் பூரணமாய் கடைப்பிடிக்கும் படியும், சினிமா, நாடகம், சர்க்கஸ், போன்ற கூத்துகளுக்கு செல்லாதிருக்குமாறும் தம் பெண்களைக் கட்டாயப்படுத்தி வைப்பது ஒவ்வொரு முஸ்லிமினதும் பிரதான கடமையாகும்.

ஆதாரம்: 'இல்லற வாழ்க்கையில் முஸ்லிம்கள்'
தொகுப்பு: எம். ஜே. எம். மாலிக், மடவத்த

தமிழ் நாட்டிலிருந்து மாதமிருமுறை வெளிவருகிறது

'சமரசம்'

தனிப்பிரதி 10.00 தபால் செலவு 1.00
(ஆண்டு சந்தா 264.00 (தபால் செலவு உட்பட)
ஏக விநியோகஸ்தர்கள்
இலங்கை ஜமாஅதே இஸ்லாமி (புத்தக நிலையம்)
137, தேவாநம்பியதிஸ்ஸ மாவத்தை, கொழும்பு-10

# இந்தியாவின் இரட்டை வேடம்!

1948 முதல் காஷ்மீர் மக்கள் தமது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வருகின்றனர். இப்போராட்டம் நியாயமானது என்பதைப் பல நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன; ஐ. நா. சபையே அங்கீகரித்து விட்டது.

ஆனால், இந்தியா அசைந்து கொடுக்கவில்லை. காஷ்மீர் மக்களை கசக்கிப் பிழிந்து வதைத்து வருகிறது. இது தொடர்பாக பாகிஸ்தானுடன் இரண்டு யுத்தங்களையும் செய்துவிட்டது!

இன்று அழகிய காஷ்மீரை அழுகிய பிணக்காடாக மாற்றும் கொடூரத்தை இந்தியா செய்து வருகிறது. அவர்களது உரிமைக் குரலை ஒடுக்கவும், போராட்டத்தைத் தடுக்கவும் தமது அடிவருடிகளின் ஒத்தாசையுடன் கூலிப் பட்டாளத்தை ஏவி காடைத்தனம் புரிகிறது 'ஜனநாயக' இந்தியா!

'இது நியாயமில்லை' என பாகிஸ்தான் பேசியதுதான் தாமதம், ''காஷ்மீர் விஷயத்தில் பாகிஸ்தான் தலையிடக் கூடாது!'' என இந்தியா எச்சரிக்க ஆரம்பித்து விட்டது. இந்து இனவெறியைத் தூண்டி இந்தியாவிலிருக்கின்ற முஸ்லிம்களை ஆயிரக் கணக்கில் கொலை செய்து வரும் பாரதீய ஜனதா கட்சி, புதுடில்லியில் பாகிஸ்தானுக்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்றையே நடத்திவிட்டது!

இத்தனையும், காஷ்மீர் விஷயத்தில் பாகிஸ்தான் வெறும் குரலெழுப்பியதன் விளைவுகள்!

இந்தியாவின் இந்த அநாகரீக கூச்சலை 'சரி' என ஏற்றுக்கொண்டால்...

- பங்களாதேஷ் உள்விவகாரங்களில் தலையிட்டு, யுத்தமொன்றையே மூட்டி விட்டதன் மூலம் பாகிஸ்தானிலிருந்து அதைப் பிரித்தமை.
- நேபாளத்தின் உள் விவகாரங்களில் தலையிட்டு அதற்குப் பொருளாதார நெருக்கடிகளைக் கொடுத்தமை.
- ஆப்கான் பிரச்சினையில் அநாவசியமாகத் தலையிட்டு, ரஷ்ய ஆக்கிரமிப்பாளருக்கு உதவியதோடு இந்திய யுத்த ஆலோசகர்களை அனுப்பியமை.
- பிஜி தீவுகளில் புரட்சி தோன்றிய பொழுது அங்குள்ள இந்தியர்களைப் பாதுகாக்கும் போர்வையில் செயல்பட்டமை.
- இலங்கை உள்விவகாரங்களில் தலையிட்டு, இலங்கை மக்களின் இறைமையை துச்சமாக மதித்து வட மாகாண மக்களுக்கு உணவுப் பொதிகளைத் தமது விமானங்களின் மூலம் கொண்டுவந்து கொடுத்து, இந்திய உதவிகளை பெறும் நிர்ப்பந்தத்திற்கு இலங்கையை உள்ளாக்கியமை.
- இலங்கையின் வட, கிழக்குப் பகுதிகளில் வரைமுறையின்றி மக்களைக் கொன்று, பெண்களைக் கற்பழித்து, இந்திய கூலிப் பட்டாளத்தின் வியாபார சந்தையாக அப்பகுதியை மாற்றியமை.

என்பன எந்த வகைத் தர்மத்தின் பெயரில், எத்தகைய நியாயத்தின் அடிப்படையில் செய்யப்பட்டதோ!

ஆனால் இந்தியா இப்படியெல்லாம் கொடுமை புரியும் பொழுது அதற்குப் பெயர், 'மனிதாபிமான-உதவிகள்', 'அண்டை நாடுகளுக்கான பாதுகாப்பு' என்பனவாம்! அடுத்தவொரு நாடு 'மக்களைக் கொல்லாதே' 'அவர்களின் நியாயபூர்வமான உரிமைகளை வழங்கு' எனக் கூறினால் அது இந்தியாவின் உள்விவகாரங்களில் தலையீடாம்!

இது தந்திர இந்தியாவின் நியாயம்!

'அபூ ரம்ஸி'

வாராந்த குர்ஆன் விளக்க பயான் நிகழ்ச்சி
137, தேவானம்பியதிஸ்ஸ மாவத்தை

ஜமாஅதே இஸ்லாமி
தலைமையகத்தில்

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை பின்னேரம்
மஃரிப் தொழுகை முதல் இஷா வரை

தகுதிவாய்ந்த உலமாக்களால்
உரைகள் நிகழ்த்தப்படுகின்றன.

அல்குர்ஆனின் அருட் கருத்துக்களை அறிந்துசெயற்பட
அனைவரும் வாருங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தௌஹீதின் முழு உருவம்
# இஸ்லாத்தில் மட்டுமே உண்டு!

அல்ஹஸனாத் ஜூலை ஆகஸ்ட் மாத இதழில் 'முஹம்மதைப் பற்றி நான் கொண்டுள்ளவை' என்ற கட்டுரையில் ஜனாப் எஸ். எம். மன்சூர், மௌலவி அப்துல் ஹமீத் அவர்களின் கட்டுரையில் கூறியிருப்பதை இலக்கண அடிப்படையில் ஆராய்ந்திருந்தார். அதனை பொதுவான அடிப்படையில் நான் ஆராய விரும்புகின்றேன். "முஸ்லிம்கள் அல்லாஹ் என்றும் ஆங்கிலேயர் கோட் (God) என்றும், சிங்களவர்கள் தெய்யோ என்றும், தமிழர்கள் கடவுள் என்றும், பாரசீகர்கள் ஹுதா என்றும் அழைக்கின்ற ஒன்று தான் மெய்ப்பொருள் எனப்படுகிறது" (மௌலவி ஹமீத்)

இவைகளை ஒவ்வொன்றாகக் கவனிப்போம்.

காட் (God): கிறிஸ்தவர்கள் பிதா ஒரு கடவுள், மகன் (யேசு) ஒரு கடவுள், பரிசுத்த ஆவி ஒரு கடவுள். மூன்றும் சேர்ந்து ஒரு கடவுள். இது விளக்க முடியாத ஒரு புதிர் (Mystery) என்று ஏற்றுக்கொள்கிறார்கள். இது அல்லாஹ்வைக் குறிக்கும் அல்லாஹ் என்ற அல்லாஹ்வாக இருக்க முடியாது.

தெய்யோ: சிங்களவர்களுக்கு பௌத்தர்களுக்கு வணக்கத்துக்குரிய கடவுள் இல்லை. அவர்கள் வணங்குபவர் புத்தர். பரிநிர்வாணத்திலிருந்து வருவதில்லை.

தமிழர்கள்: இந்துக்களுக்கு பல தெய்வங்கள் உண்டு. உதாரணமாக, சிவன், விஷ்ணு, பிரம்மா. இந்தக் கடவுள்களுக்கு மனைவியரும் பிள்ளைகளும் உண்டு. இவர்களும் வணக்கத்துக்குரியவர்களே.

எனவே தமிழ், பௌத்த கடவுள்கள் அல்லாஹ்வாக இருக்க முடியாது.

ஹுதா: பாரசீகர்கள் முஸ்லிம்கள். அவர்கள் ஹுதா என்று கூறுவது அதே ஒரு இறைவனான அல்லாஹ்வையே. இஸ்லாத்துக்கு முன் அவர்கள் சத்தியத்துக்கு ஒரு கடவுள், தீமைக்கு ஒரு கடவுள் என்று இரு கடவுள்களை வணங்கினார்கள். ஆகவே இந்த வேற்றுமை மொழியைப் பொறுத்ததல்ல.

தொடர்ந்து மௌலவி எழுதுகிறார்:

"எந்த இடத்தில் யார் வணங்கினாலும் பரம்பொருள் ஒருவன் அவன் தான்... இதற்கு தமிழில் பிரமம் என்றும் உள்ளமை என்றும் சொல்லப்படுகின்றது."

மௌலானா அபுல் கலாம் ஆஸாத் அவர்கள் இந்தக் கருத்துக்கு தக்க பதில் கொடுத்திருக்கிறார்கள். 'இப்பரத் தப்ஸீர்' என்பதற்கு விளக்கம் எழுதும் போது இவ்வாறு கூறுகின்றார்கள்: "பல மதங்களிலும் காணப்படும் இறைவனின் ஒருமை (Unity) பற்றிய கருத்துக்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. (Unity of Being) கடவுள் ஒருவன். தனித்துவம் கொண்டவன்.

2. (Unity of Worship) மேற்கூறியவற்றுடன் அவனே வணக்கத்துக்குரியவன். அவனையே வணங்க வேண்டும்.

3. (Unity of attributes) மேற்கூறியவைகளுடன் அவனை வணக்கத்துக்குரியதாக இருக்கும் குணங்கள் (ஸிஃபத்துகள்) அவனுக்கே சொந்தமானவையும் வேறு எந்தப் பொருளுக்கும் இவைகளில் பங்கில்லை என்றும் அவனுடைய ஒருமையை தகர்க்கும் எந்த இணை வைத்தலுக்கும் இடமளிக்காதிருப்பதும்."

மௌலானா தொடர்கிறார்: "முதல் இரண்டும் எல்லா மதங்களிலும் உண்டு. இஸ்லாம், மூன்றிலும் ஒருமையை வற்புறுத்தி இறைவனின் ஒருமையை பூரணப்படுத்தியது. இது இஸ்லாத்திற்கே சொந்தமான தனிச் சிறப்பு.

மற்ற மதங்களிலுள்ளோர் பல கடவுள்களை வணங்கினாலும் எல்லாவற்றுக்கும் மேலான பிரம்மம் எனும் ஒரு தனிக் கடவுளுக்கும் விசுவாசம் (Allegiance) செலுத்துகிறார்கள். (பிரம்மம் எனும் இந்தச் சொல்லை மௌலவியும் பாவித்திருக்கிறார்.) ஆனால் அவர்களும் இந்த ஒரே கடவுள் ஒருவரை இருக்கும் போது எப்படி வேறு கடவுள்களையும் வணங்க முடியும்? என்ற கேள்விக்கு ஆராய அவர்கள் தவறிவிட்டார்கள்." என்று மௌலானா ஆஸாத் கேள்வி எழுப்புகின்றார்கள்.

மௌலானா மேலும் தொடர்கிறார்: "குர்ஆனுக்கு முன் அரேபியர்களும் இந்த நிலையில் இருந்தார்கள். வானம், பூமி யாவற்றையும் படைத்தவன் யார் என்று கேட்டால் அல்லாஹ் என்று

அல்லாஹ் ஒன்று கூறினார்கள். எனினும் பல கட வுள்களை வணங்கினார்கள், அத்துடன் இறைவனு டன் நமக்கு தொடர்பு கொடுக்கும் ஆத்மீக உயர்வு பெற்ற இடை மனிதர்களையும் வணங்கினார்கள். (Semitics) செமிட்டிக் மக்கள் இவர்களை angels (வானவர்கள்) என்றும் ஆரியர் இம்மனிதர்களை 'கடவுள்' என்றும் வணங்கினர்.'

பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த இரண்டை கெதிராகவே போர் தொடுத்தார்கள். இரண்டொரு கடவுள்களை மட்டும் வணங்கினாலும் அனுமதி மறுத்தார்கள் என்பது தெரிகிறதே.

இப்போது பிரம்மம் என்ற பதத்தைக் கவனிப் போம். இது ஆரியர்கள் இந்தியாவில் பின்பற்றிய வேதாந்தத்திற்குரிய பதம். பிரம்மம் சம்பந்தமாகப் பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் பொது வாக "ஆதி முதற்பொருள் பிரம்மம்" என்று கூறப்படு கின்றது. குணங்கள் (ஸிபத்துகள்) இருப்பதாகத் தெரியவில்லை. எனவே குணங்கள் யாவும் பொருந்திய அல்லாஹ்வும் பிரம்மமும் ஒன்றாக இருக்க முடி யாது. அனால் யதார்த்தத்தில் கடவுள் எனும் பதம் பொதுவாக பாவிக்கப்படும் என்று சிந்தித்தா லும் அதிலும் ஒரு சங்கடம் ஏற்படுகின்றது. ஏனெ னில் தன்மைகளும் திறமைகளும் மனிதருடன் தொடர் புடைய பிரார்த்தனைக்குரிய பொருள் தேவையான படியால் இந்தத் தொடர்பு தவிர்க்கப்பட்ட மத்தியில் கடவுளுக்கே இருக்கின்றது. பிரம்மம் என்பதற்கல்ல.

பிரம்மம் என்பதற்கும் அப்பால் கடவுள் ஒன்று உண்டு என்றும், ஒரு மனிதன் பிரம்மமாக வர முடியும் என்றும், கடவுளாக வர முடியாது என் றும் பலவித் கருத்து கூறுகின்றது. இராமானுஜர் பரி பூரணமான மனிதன் ஆன்மாக (Self) ஆகிறான் என்று கூறுகிறார். சங்கரர் 'பரிபூரணமான மனிதன் பிரம்மம் ஆகிறான்.' என்கிறார். இன்னும் பல கருத்துக்கள் இந்து மதப்பெரியார்களால் கூறப் பட்டிருக்கின்றன.

எனினும் பொதுவாகக் கூறப்படுவது, ஆக உயர் பொருள் பிரம்மம் என்றும், பிரம்மன் படைப்பதற் கும், விஷ்ணு பராமரிப்பதற்கும் சிவன் அழிப்பதற் கும் கடவுள்களாக மக்கள் மத்தியில் வணங்கப்படு கின்றார்கள். மனிதன் கடவுளை வணங்குவதற்கு உருவங்களும் சிலைகளும் உதவுகின்றன. எனவே அது வரவேற்கத் தக்கது என்றும், ஒவ்வொரு மனி தனும் கடவுளாக மாறும் தகைமை உள்ளவன் என்றும், அவன் கடவுளை நோக்கி முன்னேறுவ தற்கு ஒரு சற்குரு தேவை என்றும், அந்த சற்குரு ஒரு கடவுளாகும் என்றும், மனிதன் ஆத்மீக முன் னேற்றம் காரணமாக ஜீவாத்மாவாக ஆகின் றான் என்றும் ஜீவாத்மா கடவுளைப்போன்று வணக்கத்துக்குரியவர் என்றும், எனவே தியானம் செய்யும்போது ஜீவாத்மாவை முன்வைத்து தியா னிக்க வேண்டும் என்றும், மேலும் உயர்வு பெறும் போது ஜீவாத்மா பரமாத்மாவாக வருகின்றார் என்றும், கிருஷ்ணா, இராமர், இராமானுஜர், இராமகிருஷ்ணர், காந்தி போன்றவர்கள் கடவுளாக கணிக்கப்படுவார்கள் என்றும், இவர்கள் இறந்த பின் அவதாரங்களாகப் பிறப்பார்கள் என் றும் சொல்லப்படுகிறது. ஜீவாத்மாக்களும், பரமாத் மாக்களும் கடவுளை வணங்க வேண்டுமாஎன்பது தெளிவாகத் தெரியவில்லை. உபநிஷதத்தில் மனித ஆத்மாவுக்கும் கடவுளுக்கும் வேறுபாடில்லை என்றும் தன்னை அறிந்தால் கடவுளை அடைந்ததாகி விடு வான் என்பதிலிருந்தும் சில ஐயங்களுக்கு இட முண்டு.

வேதாந்தம் கர்மாவில் நம்பிக்கை வைத்திருப் பதால் பல பிறவிகளில் நம்பிக்கையுள்ள ஒரு மதம். எனவே ஒரு பிறவியில் ஒரு மனிதன் செய்யும் செயல்களிலிருந்து மறு பிறவி எடுப்பான் என்றும் இப்படியே முக்தி அடையும் வரை நூற்றுக்கணக் கான பிறப்புகள் எடுக்க வேண்டும் என்றும். வேதாந்தம் கூறுகின்றது. இதில் மௌனமான ஆனாத கூறும் சிக்ர வணக்கமும், மனித நடுவா ன வணக்கமும் இருப்பதைக் கவனிப்பீர்கள்.

இவையெல்லாம் இஸ்லாத்திற்கும், இஸ்லாம் கூறும் இறைவனான அல்லாஹ்வுக்கும் முற்றிலும் வேறுபட்டவை என்பது புலனாகும். எனவே பிரம் மம் என்பதை, இஸ்லாத்தின் 'ஹக்' என அழைக் கப்படும் 'உண்மை' என்று கூறுவது சரியாகத் தெரியவில்லை. மேலும் இந்த இரண்டு பதங்களும் குணங்களிலேயே வேறுபட்டவை. ஆதியில் ஒரு நபி வேதத்தைக் கொண்டுவந்திருந்தால், இந்த வேறுபாடுகள் இருக்க முடியாது. ஏனெனில் நபி மார்கள் எல்லோரும் ஒரே கொள்கையையே போதித் தார்கள். நாயகம் (ஸல்) அவர்கள் எதனைப் போதித்தார்களோ அதனையே அவர்களும் போதித் தார்கள். காலப்போக்கில் இவை மனித கைவரிசை யால் திசை திருப்பப்பட்டதால் இறுதி இஸ்லாம் மீண்டும் உலகுக்கு இறக்கப்பட்டது. எனவே நாம் புனிதமாக்கப்பட்ட ஆதி தெளிவை நாயகமு ஸ்தபா (ஸல்) மூலம் பெற்றிருக்கிறோம். இதை நாம் கண்ணெனப் பாதுகாப்பதுடன் பகிலாக முன்னுள்ள மனித வழிகளைகளால் மதிமயங்கி விடலாகாது. 'ஸிராதுல் முஸ்தகீம் என் அந்த நேர்வழியில் எங்களை மேலும் நிலைநிறுத்துவாயாக' - நீ எவர்களுக்கு அருள் புரிந்தாயோ அவர்கள்; உன் கோபத்துக்கு ஆளானோர் வழியுமல்ல; நெறி தவறியோர் வழி யும் அல்ல. அந்த வழியில் நடத்திவைப்பாயாக.

அ. கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ப்பாட்டத்துடன் வந்து அமைதியாக சென்று விட்டது!

அன்று, 1957ஆம் ஆண்டு சிங்கள மொழியுணர்வு மிக்கவர்களால் பெரும்பான்மைப் பலம் ஆட்டிப் படைத்தது. '24 மணி நேரத்தில் சிங்களமே அரசகரும மொழி' என்ற கோஷம் எங்கும் காணப்பட்டது. அதற்கான காரியங்களும் நடந்தேறின.

1957ல் நாடெங்கும் இனக் கலவரங்கள் உருவாகி, குழப்பங்கள் தலைதூக்கி, எண்ணற்றோர் பாதிப் படைந்து, நாடு வன்செயல் விட்டுவிடமுடியாமல் பெரும்பாதிக் கப்பட்டு, இலங்கையின் அதிகாரம் கைமாறு அதனுடனேயே என்ற பீதி எங்கும் நிலவச்செய்து கொண்டு அரங்கேறியது, வாகனங்களில் 'ஸ்ரீ' எழுத்து பொறிக்கும் நாடகம்!

ஒரு சாராருக்கு நியாயமான, மறு சாராருக்குக் காட்டமான இந்த 'ஸ்ரீ' நாடகம் கடந்த 33 ஆண்டு காலமாக அரங்கேற்றப்பட்டது.

இன்று, பல கொடுமைகளுக்கு வித்திட்ட 'ஸ்ரீ' எவரிடமும் சொல் லாமலே விடைபெற்றுச் சென்று விட்டது; போக்குவரத்து அமைச் சரின் ஓர் அறிவித்தல் மூலம் ஏதோ ஒன்றாகத் தூக்கி எறியப் பட்டுவிட்டது.

இதை அன்று 'வேண்டும்' எனக் கொண்டு வந்தவர்களும் சிங்கள மொழியை பேசும் ஆட்சியாளர்கள். இன்று 'வேண்டாம்' என ஒதுக்கித் தள்ளியவர்களும் சிங்கள மொழியைப் பேசும் ஆட்சியாளர்களே! எனவே 'வேண்டாம்' என இதுக்கின்று தள்ளியிட்ட பின்ன விஷயத்துக்குத் தாரே. 'வேண்டும்' எனக்கூறி பல கொடுமைகள் நடைபெற வழி வகுக்கப் பட்டது. இன்று போல் அன்றும் உணர்வுகள் சிலரா இருந்தால் அந்தக் கசப்பான சம்பவங்கள் நடந்திருக்குமா?

இதுதான் மனிதனின் அறிவு மட்டம். இந்த அறிவு மட்டத்தை வைத்துக்கொண்டு சாதாரண உணர்வுகளுக்கும், வெறிகளுக் கும் அடிமையாகி ஏற்படுத்திய சட்டங்கள், வேதங்கள், கட் டளைகளால் விளைந்த அவர்த் தங்களுக்கு அளவில்லை. சான்று கள் ஏராளம்.

எனவேதான், 'அல்லாஹ்வின் சட் டங்களுக்கு அடிபணிந்து வாழு வாருங்கள்!' என்று இஸ்லாம் மனிதவர்க்கத்துக்கும் அழைப்பு விடுக்கின்றது!

அல்லாஹ் பரிபூரண ஞானமு டையவன்; அண்ட சராசரத்தைப் படைத்து, பரிபாலித்து, மேய்த்து, பாதுகாத்து வருப வன்; அவனுக்கு இன, மொழி, தேச, வர்க்க, நிற வேற்றுமை உணர்வுகள் இல்லை. எனவே, அவனது சட்டத்தில், இஸ்லாமிய நெறிமுறைகளில்கூட அந்த வேறு பாடுகளை காணவே முடியாது.

அவன் அளித்த சட்டங்கள் முழு மனித சமுதாயத்துக்கும் உரியதாக இருப்பதால், அவை எல் லோருக்கும், எல்லாக் காலத் திற்கும், எல்லாச் சூழல்களுக்கும் பொருத்தமான பதில் அளிக்கின் றன.

இஸ்லாமிய நெறிமுறையை வாழும் இன்றைய முஸ்லிம்கூட இன, மொழி, வர்க்க, தேச, நிற வேற் றுமைகளைக் கடந்த ஒருமைப் பாட்டுணர்வை வெளிப்படையாகத் தெரிந்து எவரும் காணலாம்.

அந்த இஸ்லாமிய முத்திரை பட்டி ருந்தால் இலங்கையில் இனப் பிரச்சினை தோன்றி இருக்காது; மொழி உணர்வு தலைதூக்கி வெறியாட்டம் ஆடி இருக்காது; மாறாக, அனைத்து இனத்தவரை யும் 'சகோதரர்கள்' என்ற பாச வலைக்குள் ஒன்றாக பிணைத்தி ருக்கும்.

இஸ்லாமைத் தழுவிக்கொள்ள முடியாதவர்கள் மேற்கூறியவற்றின் உண்மையையும் புரிந்துகொள்ள முடி யும். அதன்பின் ஏற்பது அவரவர் பொறுப்பு.

ஆர்ப்பாட்டத்துடன் வந்து விட்டு அமைதியாகச் சென்றுள்ள 'ஸ்ரீ' இலங்கை மக்களின் அறிவுக் கண்களைத் திறக்கச் செய்யுமா?

'அபூ மனி'

### இருளும் ஒளியும்

நிச்சயமாக அல்லாஹ்விடமிருந்து பேரொளியும் தெளி வாக்கும் ஒரு வேதமும் (குர்ஆன்) உங்களுக்கு வந்திருக்கிறது. எங்களில் அல்லாஹ்வின் பொருத்தத்தைப் பின்பற்றுபவர்களை அல்லாஹ் அருள்புரியும் சமாதானத்துக்குரிய வழியில் செலுத் துகிறான். மேலும் அவன் அவர்களை இருள்களிலிருந்து வெளியேற்றித் தன் அருளைக் கொண்டு பிரகாசத்தின்பால் கொண்டு வருகிறான்; தவிர அவர்களுக்கு நேரான வழியில் செல்லவும் வழிகாட்டுகிறான். (5:16)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் பெண்களின் வரலாறு மிகப் பிரகாசமானது

(14ம் பக்கத் தொடர்)

மானார் (ஸல்) அவர்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை. பாதுகாப்பாக இருக்கிறார்கள் எனக் கூறினார்கள். இவர்களது கூற்றில் தேற்றம் காணாத அம்மாதரசி மாஸ்பூது மாநபியின் திருமுகத்தை என் கண்களினால் காணாதவரை உங்கள் கூற்றை நம்பமாட்டேன் எனக் கூறிவிட்டுத் தொடர்ந்து சென்றார் களம் நோக்கி. அங்கு பெருமானார் (ஸல்) அவர்களைத் தனது கண்களினால் கண்டார், 'தாயகமே! தாங்கள் உயிரோடிருக்கும்போது ஏனைய துயரங்கள் ஒரு பொருட்டல்லவே' என முழங்கினார்.

இச்சம்பவம் உதாரணத்திற்காக நான் எடுத்துக் காட்டிய ஒரு நிகழ்ச்சியாகும். முஸ்லிம் பெண்களின் வரலாறு மிகப் பிரகாசமானது. இஸ்லாத்தின் முன்னேற்ற காலகட்டமும் இத்தகைய நிகழ்ச்சிகளால் நிறையப்பெற்றது.

ஆண்மையின் சிகரம் பலவிலும் அடைந்துள்ள இஸ்லாமிய வரலாற்றின் இவ்வுயர் கட்டங்களிலும் முஸ்லிம் உலகம் பெருமை அடையக்கூடிய அநேக பெண்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இஸ்லாம் தனது ஆரம்ப காலத்தில் ஈடுபட்ட புனித யுத்தங்களின் போதெல்லாம் இஸ்லாமிய வீரர்கள் மீது ஈட்டி எறிந்த நேரத்திலும், அவர்கள் வெட்டுண்டு வீழ்ந்த வேளையிலும் அம்மாதர்கள் பாய்ந்து சென்று அவர்களுக்குத் தண்ணீர் புகட்டினார்கள், காயங்களுக்குக் கட்டுப் போட்டார்கள். அவர்களுக்கு உறுதியளித்து உற்சாகமூட்டிக் கொண்டிருந்தார்கள். தமது சொத்திலும் பொருளிலும் நகைகளிலும் இருந்து சத்திய சன்மார்க்கத்திற்கு உதவினார்கள்.

பெருமானாரைப் பின்பற்றும் மக்கள் குறைவாக இருந்த அந்த வேளையில் பெண்பிள்ளைகள் அவர்களை வரவேற்றார்கள். அவர்களைப் புகழ்ந்து கீதம் பாடினார்கள். அந்தச் சிறு குழந்தைகளிடத்தில், ''நீங்கள் என்னை நேசிக்கிறீர்களா'' என வினவியதற்கு "ஆம்" என விடையளித்தார்கள். உடனே பெருமானார் அவர்கள், ''நானும் உங்களை நேசிக்கிறேன்'' என அருளினார்கள். ஆசியாவில் எந்தக் கோஷ்டிக்குத்தான் இத்தகைய சிறப்பு பெற முடிந்தது?

இது, ஆண்களும் பெண்களும் பரிசுத்த இஸ்லாத்தின் ஏவல்களை ஏற்று நடப்பதிலும் அதனைப் பாதுகாப்பதிலும் சம அந்தஸ்தும் பொறுப்பும் உடையவர்களே என்பதைப் பெண்கள் அறிந்திருந்த அந்தக் காலத்து நிலைமையாகும்.

சத்தியத்தின் பாதையில் தடையாகவிருந்து கொண்டிருந்த இடையூறுகளை - அது எவ்வளவு கசப்பும் கஷ்டமும் உள்ளதாயிருப்பினும் சகித்து - அவர்கள் அவற்றைத் தகர்த்தெறிந்தார்கள்!

தனது அன்புக்குப் பாத்திரமான கணவன் சத்திய மார்க்கத்தில் உறுதியாயில்லாவிட்டால் அவரது பார்வையில் அக்கணவன் கோபத்திற்குரியவராய்த் தோற்றமளிப்பார். கணவன் சகல இருக்கும் வழியற்ற பரம ஏழையாயினும் அவர் சத்தியத்தை ஏற்ற காரணத்தினால் அவரை அன்புக்குரியவராகவே இன்பம் கண்டார்கள். இந்த விடயத்தில் பெண்கள் எப்பொழுதேனும் மனம் சோர்ந்து விடவோ தயங்கவோ குன்றவோ இல்லை. கணவன் சத்திய நெறியில் இருந்து பிறழ்ந்துவிட்டால் மனைவி அவனுடன் தொடர்பைத் துண்டித்து விடுவார். மார்க்கத்தின் காரணத்தினால் தமது சொந்தப் பிள்ளைகளது உறவைக் கூடத் தாய்மார்கள் உதறி விட்டார்கள்.

இஸ்லாத்தின்மீது பற்று அவர்களது உள்ளங்களில் எவ்வாறு உறைந்திருந்தது என்றால், அவர்களது சகல வெறுப்பும் விருப்பும் இறைவனுக்காகவும் இறைவனிலும் நம்பியிருந்தன. தம் குழந்தைகள் இறைவனுக்கு வழிபட்டு ஒழுகுவதில் திளைத்திரா விட்டால் அவர்களைப் பெற்றிருப்பது பெருமை தரும் செயலாக அந்தத் தாய்மார்களுக்குத் தென்படவில்லை.

ஒரு கணவன் விசுவாசியாய் இருந்து முஹம்மது (ஸல்) அவர்களுடன் இணைந்து இருக்கவில்லையானால், அவர் எவ்வளவு பெரிய அந்தஸ்தும் அழகும் உடையவராய் இருப்பினும் இவர்களிடத்தில் அவருக்கு எள்ளளவு மதிப்பும் இருக்கவில்லை. இது சத்திய சன்மார்க்கத்தை நிலை நிறுத்தும் பொறுப்பில் தமக்கும் பங்குண்டு என்று பெண்கள் உணர்ந்திருந்த பிரகாசமான காலத்தின் நிகழ்ச்சியாகும்.

இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டதென்ன என்பதைப் பாருங்கள். உணவுக்கும் உடைக்கும் எவ்வாறு ஆண்கள் பொறுப்பாளிகளோ, அது போலவே, மதத்திற்காகப் போராட வேண்டிய முயற்சிக்க வேண்டிய பொறுப்பும் ஆண்கள் மீது மாத்திரமே விதிக்கப்பட்ட கடமை என்று கணிக்கப்படுகின்றது. இங்கு இழைக்கப்படும் முதலாவது

( தொடர்ச்சி 24ம் பக்கம் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(19ம் பக்கத் தொடர்)

பெண் சந்தாதாரிகள் இறையச்சத்தோடு தமது பிள்ளைகளை இளம் பராயத்தில் பயிற்றுவித்து வளர்த்துவிட வேண்டும். இளம் வயதில் மேலோங்கி விட அவர்கள் தமது மக்களை இளம் பராயத்தில் அர்ப்பணித்துவிட வேண்டும். மேலும் உலகின் ஆசைகளைத் துறந்து, ஆண்கள் மேற்கொள்ளும் இறை பணியில் அவர்களை உற்சாகமூட்ட பெண்கள் முன் வந்து கொள்ள வேண்டும். இஸ்லாமிய சமூகத்தின் எழுச்சியில் மாதர்களாகிய எமது பங்கு மகத்தானது!

# என் தந்தைக்கு வெற்றி!

## அவர் கனவும் நனவாகும்

24. 11. 89 அன்று தனது தந்தையையும் உடன் பிறந்த இரு சகோதரர்களையும் இழந்து விட்ட அம்மார (டாக்டர் அஸாமின் மற்றொரு மகள்) ஆறுதல்களின் சிதறிய வார்த்தைகளுக்கு முன் கண்களில் நீர் வழிய நின்றுகொண்டு துணிவோடும் பொறுமையோடும் அளித்த பேட்டி:

● இரு சகோதரர்களினதும் தந்தையினதும் மரணச் செய்தியை எவ்வாறு அறிந்து கொண்டீர்கள்?

எனது தாயாரோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட ஒருவர் இச்செய்தியை அவருக்கு அறிவித்தபோது தாயார் ''அல்ஹம்துலில்லாஹ்'' என்று கூறினார். தந்தை பாதுகாப்பாக இருப்பார் என்று நினைத்த நான், தந்தை எங்கிருக்கிறார் என்று தாயாரிடம் கேட்டேன். ''அவர் இறைவனிடத்தில் இருக்கிறார்'' எனப் பதில் கூறினார் அன்னை.

பின்னர் தந்தையின் மரணச் செய்தி பற்றி பல வேறுவிதமான தகவல்கள் வந்துகொண்டிருந்தன. நடந்ததை நேரில் அறிவதற்காக [illegible] மருத்துவ மனைக்குச் சென்றோம். அங்கு எவரும் இருக்கவில்லை. நேராக அங்கிருந்து தலைவர் 'ஸய்யாப்' அவர்களது கிராமத்திற்குச் சென்றோம். தலைவர் ஸய்யாப் அவர்களின் வீட்டுக்கருகில் மக்கள் கூடியிருந்தனர். அங்கு போர்த்தப்பட்ட நிலையில் எனது இரு சகோதரர்களினதும் தந்தையினதும் சிதைந்த உடல்கள் வைக்கப்பட்டிருந்தன. அல்லாஹ் அவர்களுக்கு அருள் பாலிப்பானாக!

● அவர்கள் ஷஹீதானதன் பின் உங்களது மனோநிலை எப்படியிருந்தது?

முதலில் சிறிது நேரம் அழுதேன். எனது ஏனைய சகோதரர்கள் என்னைத் தேற்றினார்கள். பின் தலைவர் ஸய்யாப் அவர்களுக்கருகில் அமர்ந்து கொண்டேன். அவர் ஷஹாதத்தின் மகிமைகளைப் பற்றி எனக்குச் சொன்னார்.

● நீங்கள் வீடு திரும்பியதன் பின் தாயார் உங்களுக்கு விசேடமாக எதுவும் கூறினாரா?

ஆம். 'கல்வியில் நீ ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும். உங்களது தந்தையைப் போல் நீங்களும் உருவாக வேண்டும்' என்று எனக்கு உபதேசித்தார். அவர் அழுது கொண்டிருக்கவில்லை. மூத்த சகோதரர் ஹுதைஃபாவை விளித்து ''மகனே உனது தந்தையின் காரியங்களை அறிவாய் மகனே. உனது தந்தையின் பணிகள் என்னவாயிருந்தன என்பதை நன்கு ஆராய்ந்து பார். உனது பொறுப்பு மகத்தானது'' என்றும் கூறினார்.

● ஷஹீதாவதற்கு முன் தந்தை உங்களுக்கு ஏதும் கூறியிருக்கிறாரா?

ஆம். ''தீய நண்பர்களுடன் உறவு கொள்ள வேண்டாம்'' என்பது அவர் அடிக்கடி கூறும் உபதேசமாகும். இரவுத் தொழுகையின் பின் என்னுடன் அமர்ந்து 'தஜ்வீத்', 'இலக்கணம்' போன்ற பாடங்களைக் கற்றுத் தருவதோடு படிப்பில் ஆழ்ந்த கவனம் செலுத்துமாறும் கூறுவார்.

● அவரிடம் செவிமடுத்த இறுதி வார்த்தை?

'ளுஹர்' தொழுகையின் பின் ஷஹாதத்தின் மகிமை பற்றி உரைத்துக் கொண்டிருந்தார். நண்பர்களுடன் மலக்குகள் சந்தித்துக் கொள்ளும் உறவு பற்றியும் அவரது பேச்சில் குறிப்பிட்டார்.

● தந்தை உங்களுக்களித்த பயிற்சிகள் எவ்வாறிருந்தன? அவருக்கும் உங்களுக்குமிடையில் உறவு எப்படியிருந்தது?

தந்தை அதிகம் பிரயாணம் செய்பவராக இருந்தார். அபூர்வமாகவே நாம் அவரை சந்திப்போம். 'புறம் பேச வேண்டாம், தாயாரோடு அதிகம் தர்க்கிக்க வேண்டாம், இஸ்லாமிய ஷரீஅத்தை நன்கு படிக்க வேண்டும். அதிமுக்கியமான ஜிஹாதினாலேயே இஸ்லாமிய ஆட்சி உருவாக முடியும்' என்பன போன்ற விடயங்களை எமக்குப் போதனை செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● முஸ்லிம் உம்மத்திற்கு நீங்கள் கூறவிரும்புவது என்ன?

எனது தந்தை ஷஹாதத்தில் தனக்கிருந்த விருப்பத்தை நிறைவு செய்துவிட்டார். எனினும் அவர் கண்ட கனவு இன்னும் நனவாகவில்லை. ஆப்கான் மண்ணில் இஸ்லாத்தின் கொடி பறக்கவிட வேண்டும். இஸ்லாமிய ஆட்சியைக் கண்டு மகிழ வேண்டும் என்பதே அவரது கனவாக இருந்தது.

அந்த அவரது இலட்சியத்தின்பால் அனைவரும் ஒன்று திரள வேண்டும். அந்த இலட்சியம் நிறைவு பெற எனது தந்தை தனது உடலையும் பொருளையும் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துவிட்டார். ''இறைவன் மீது ஆணையாக மனிதர்கள் அனைவரும் இந்த ஜிஹாதைக் கைவிட்ட போதிலும் நான் தனியாக இதன் வழி செல்வேன்'' என்று என் தந்தை அடிக்கடி கூறக் கேட்டிருக்கிறேன்.

## 'நானும் ஷஹீதாகி தந்தையைக் காண வேண்டும்'

ஆப்கான் முஜாஹிதீன்களது இடைக்கால அரசுத் தலைவர் ஸய்யாபி அவர்களது வீட்டு முன்றலில், துக்கம் நிறைந்த கண்களோடு கண்ணீர் வடியும் முகங்களை ஒரு பக்கமும், கவலை நிறைந்த நடமாட்டங்களை மறு பக்கமுமாகத் திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணம் நடப்பதை அறிய முயன்று கொண்டிருந்தான் ஒரு சிறுவன்.

தனது தந்தையும் இரு சகோதரர்களும் ஷஹீதான செய்தி அவனுக்குத் தெரிந்திருந்தது. எனினும் குழந்தைப் பருவம் அதன் தாக்கத்தை உணரவில்லை போலும். வாழ்வு, மரணம் என்பவற்றின் கருத்துக்களை விளங்காத பருவமல்லவா அவனுக்கு. வயது ஒன்பதே வருடங்கள். வருடங்கள் ஒன்பதாயினும் அவன் ஒரு வீரச் சிறுவன். ஒரு மனிதர் அவனிடம் வந்து ''மகனே உனது தந்தை காலமாகிவிட்டாரல்லவா?'' என்று கேட்ட மாத்திரத்தில் சிறுவனின் பதில் சட்டென வந்தது. ''இல்லை எனது தந்தை ஷஹாதத்தை எதிர்பார்த்திருந்தவராயிருந்தார். இதோ இன்று ஷஹீதாகிவிட்டார்.''

'அல் ஹஸனாத்' சஞ்சிகைக்கு ஷஹீதின் ஒன்பது வயது மகன் தந்த சிறு பேட்டியை இங்கு தருகிறோம்:

● மகனே! உங்கள் வயது...?
ஒன்பது
● பிறந்த இடம்?
இஸ்லாமாபாத்
● சொந்த நாடு?
பலஸ்தீன்
● உங்களது தந்தை எங்கிருக்கிறார்?
சுவர்க்கத்தில்
● அவரைக் கொலை செய்தது யார்?
காபிர்கள்
● எவ்வாறு கொலை செய்தார்கள்?
பாதை இருக்கையின் கீழ் குண்டு வைத்தார்கள்.
● அவரோடு இருந்தவர்கள் யார்?
முஹம்மதும் இப்றாஹீமும். அவர்கள் இருவரும் தந்தையுடன் சுவர்க்கத்தில் இருப்பார்கள்.
● அவர்களிடம் செல்ல விருப்பமா?
ஆம். நான் ஷஹீதாகி என்னைக் கப்றில் வைத்ததுடன் மலக்குகளும் ஜிப்ரீல் (அலை) வந்து என்னை அவர்களிடம் எடுத்துச் செல்வார்.
● நீங்கள் ஷஹீதாகும்வரை என்ன செய்வீர்கள்?
எனது தந்தையைக் கொன்றவர்களைத் தேடிக் கொலை செய்வேன்.
● உங்களது தந்தை ஷஹீதானபோது தாய் என்ன கூறினார்?
''வெற்றி'' என்றார்.
● ஆப்கானிஸ்தானுக்குள் சென்றுள்ளீரா?
ஆம். மூன்று முறை.
● யாருடன்?
தந்தையுடன்.
● தந்தைக்கு ஏதும் கேட்பீர்களா?
ஆம். இறைவா எனது தந்தையை சுவர்க்கத்தில் சேர்த்துவிடு.

---

## சத்தியப்..

(21ம் பக்கத் தொடர்)

பிழை எதுவென்றால் இறைவனிட்டவைகளுக்கு ஆண்களுக்கும் உரியன என்பதைப் பெண்கள் உணரத் தவறுவதாகும். இந்தத் தவறான கருத்து எமது இஸ்லாமிய வாழ்வைப் பாழ்படுத்தி விட்டது. இன்று நிலைமை எவ்வாறுள்ளதென்றால் சமுதாயத்தில் சகல இழிவையும் வெறுப்பூட்டும் செய்கைகளையும் தம்மிலும் தமது குழந்தைகள், புருஷர்கள் மீதிலும் பரப்புவதற்கான கருவியாகப் பெண்கள் மாறிவிட்டார்கள். நீங்கள் காப்பாகக் கருதப்பட்டவர்களல்லர், இன்றைய சொல்லாடலிய காலத்தில் பெண்கள் செய்திதாளின் ஏதேனுமொன்றாகக் காணப்படுகிறார்கள் எனத் தெளிவான வார்த்தையில் கூறிவிடலாம். சமுதாயத்தில் பரவிக் கிடக்கும் சகல வகைத் தீமைகளும் பெண்களிடத்தில் தங்கியிடவில்லை. அது அவர்களோடு நின்றுவிடப் போவதில்லை. அவர்களது குடும்பத்திலும் குழந்தைகளிடத்திலும் பரவுகின்றன. கிராமப் புறங்களில் நிலைமை சிறிது மாறுபட்டிருக்கலாம். ஆனால், நகரப் புறங்களைப் பொறுத்தவரை நிலைமை பெரும்பாலும் இவ்வாறாகத்தான் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொப்பிசைப் பாடகர் மைக்கல் ஜெக்ஸன்

# முஸ்லிமானார்!

உலகப் புகழ் பாடகர் மைக்கல் ஜெக்ஸன் இஸ்லாத்தைத் தழுவி விட்டார் என்ற தகவலை அவ ரது மைத்துனர் ஜெக் கோர்டன் வெளியிட்டுள்ளார். "மைக்கல் இஸ்லாத்தைத் தழுவியது உண்மை" என அவரது முன்னாள் முகாமை யாளரும் லடோயா ஜெக்ஸனின் கணவருமான கோர்டன் 'இன்று யாசர்' சஞ்சிகைக்குத் தெரிவித் துள்ளார்.

தனது நம்பிக்கை சார்ந்த மதத் திற்கு – இஸ்லாத்திற்கு – பொருளை அள்ளி வழங்கும் ஜெக்ஸன், கொகோனியில் வைத்து ஷஹாதா மொழிந்து முஸ்லிமா னார். தன் வாழ்வில் இழந்து விட்ட அமைதியையும், தெய்வீ கத் தொடர்பையும் பிடித்துக் கொள்ள வேண்டும் என்ற உணர் வும் நம்பிக்கையுமே அவரை இஸ் லாத்தைத் தழுவத் தூண்டியுள்ள காரணிகளாகும்.

உலகப் புகழ் பாடகரான ஜெக் ஸன், 20 மில்லியன் டொலர் செலவில் ஒரு பள்ளிவாயலை அமைக்கத் திட்டமிட்டுள்ளார். ஐவேளை தொழுகைகளை ஒழுங்காக நிறைவேற்றி வரும் அவர், உலக சமாதானத்திற்கு அவரது பாடு படப் போவதாகவும், அதற்காக தன்னை அர்ப்பணிக்கப் போவ தாகவும் கூறுவதாக அவரது குடும்ப வட்டாரங்கள் கூறுகின் றன.

'ஜெஹோவா விட்னஸ்' என்ற மதத்தில் இருந்தபோது, இவரது உல்லாச வாழ்க்கையை அம்மத போதகர்கள் இகழ்ந்து விமர்சித்துள்ளனர். எனி னும், இழுக்கான வாழ்வு முறை யைக் காட்டிக் கொடுக்கத் தவறி விட்டனர். இத்தருணத்தில் முஸ் லிமாளான இவரது சகோதரர் ஜர்மெய்ன், முன்னாள் குத்துச் சண்டை செம்பியன் முஹம்மத் அலி கிளே, கூடைப் பந்தாட்டச் செம்பியன் கரீம் அப்துல் ஜப்பார் ஆகியோரது உறவு இவருக்குக் கிடைத்தது. அவர்கள் மூலம் இஸ் லாமிய வழிகாட்டல் கிடைக்கவே ஜெக்ஸன் முஸ்லிமானார்.

தனக்கு சத்தியத்தின் வழிகாட் டலை அருளிய அல்லாஹ்வை நன்கு உணரவும், அதைத் தெளி வாக விளங்கவும் குர்ஆனில் ஆழ்ந்த பாண்டித்தியம் உள்ள ஒருவரை இப்பொழுது தனது வீட் டிற்கு வந்து தனக்குக் குர்ஆனைக் கற்றுத்தர ஏற்பாடு செய்துள்ளார் என்று அவரது நெருங்கிய குடும்ப வட்டாரங்களில் இருந்து தகவல் கள் கிடைத்துள்ளன.

எனினும், ஜெக்ஸனின் செய்தி யாளருள் ஒருவரான லீ சோல் டரில் என்பவர், 'மைக்கல் மதம் மாறினார்' என்ற செய்தியை மறுத்துள்ளார்.

ஆனால், ஹொலிவுட்டிலிருந்து கிடைக்கும் செய்திகள் யாவுமே 'அவர் ஒரு முஸ்லிம்' என்ற செய் தியை ஊர்ஜிதப் படுத்துகின்றன. அவர் முன்னரைவிட தற்போது சந்தோஷமாகவும் அமைதியாக வும் இருப்பதாகவும் அவை கூறு கின்றன.

''நான் இப்போதுதான் வாழ்வின் உண்மையான சந்தோசத்தையும், நோக்கத்தையும் தெரிந்துகொண் டேன், எனது மக்களுக்கும் ஏனை யோருக்கும் உதவ என்னிடம் சிறந்த திட்டங்கள் உண்டு. எனது தூய உலக சமாதானத்திற்கே'' என ஜெக்ஸன் கூறுவதாகவும் ஒரு ஹொலிவுட் செய்தியாளர் கூறி னார்.

● தகவல்- 'ஜெருசலம் இன்று யாசர்' பக். 50.

தமிழில்:
எஸ். எம். மன்சூர்

## போலி...

(8ம் பக்கத் தொடர்)

யாவும் தவிடுபொடியாகிவிட்டன. குர்ஆனுக்கு விளக் கமளிக்கும் நபி (ஸல்) அவர்களின் ஸுன்னாவைக் காக் கும் பணிக்காக உழைக்கும் மகான்கள் பலரை அல் லாஹ் இந்தக்காலத்திலும் தோன்றச் செய்தான். அவர்கள் தவறான வாதங்களை ஏற்று அறிவுரீதியாக மறுத்து விளக்கம் தந்திருக்கிறார்கள். ஆகவே அசத் தியம் அழிந்து சத்தியம் தொடர்ந்தும் நிலைத்து நிற்கிறது. இந்த வரிசையில் அல்லாமா டாக்டர் முஸ்தபா அஸ்ஸிபாயீ (ரஹ்) அவர்கள் குறிப்பிடத் தக்க ஒருவர். இவர் இயற்றிய 'அஸ்ஸுன்னா வ மகானதுஹா பித்தஷ்ரீஇல் இஸ்லாமிய்யி' என்ற ஆராய்ச்சி நூல் மிகவும் அபாரமானது.

எனவே தனக்குப் போதிய அறிவோ தகுதியோ இல்லாத துறையில் தலையிட்டு விஷமத்தனம் புரிந்து கொண்டும் தகுதியில்லாததால் பிழையான முடிவு களுக்கு வந்து அவற்றின் அடிப்படையில் ஸஹீ ஹான ஹதீஸ்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று விவாதிக்கும் குறை மதியுடைய குழுக்களைப் பற்றி நாம் இக்காலத்திலும் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். குனிப்புறம் மேயும் இவர்களின் கருத்துக்களைக் கண்டு மருண்டுவிடக் கூடாது. ஆதாரபூர்வமானவை என்று அறிவும் நம்பகத்தன்மை யும் உள்ள அறிஞர்களால் பல நூற்றாண்டுகளாக நிரூபிக்கப்பட்ட ஹதீஸ்களை நாமும் அங்கீகரித்து ஏற்கவேண்டும். அவற்றை முறைப்படி நன்கு புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். ஹதீஸ் என்ற பெயரில் புகுத்தப்பட்டுள்ள போலி ஹதீஸ்களை இனங்கண்டு ஒதுக்கிவிடத் துணிவுகொள்ள வேண் டும். ஏனெனில் தீய நோக்கங்களுக்காக இட்டுக்கட்டிப் போலி ஹதீஸ்களை ஏற்பது ஈருலக இன்பங்களைச் சிதைக்கப் படுத்துவதாக அமையும்.

# ''இஸ்லாம் எழுச்சிபெறும் வேளையில் கம்யூனிஸம் தன்னை மாஸ்கோவிலேயே பாதுகாத்துக்கொள்ள முடியாது நடுநடுங்கும்!''

மௌலானா மௌதூதி (ரஹ்)

(6ம் பக்கத் தொடர்ச்சி)

மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வித்தியாசமான இந்த நிலைமை ரஷ்ய ஆக்கிரமிப்புக்குப் பெரு வெற்றியை அளித்திருக்க வேண்டும்; [illegible] ஆப்கான் மண்ணைத் தன் இரும்புக் கரங்களில் கொண்டிருக்க வேண்டும்!

இங்குதான் அதிசயம் நிகழ்ந்தது; யாருமே எதிர்பாராத அற்புதம் நடந்தது!

## அல்லாஹு அக்பர்

ஆப்கான் மக்கள் 'அல்லாஹு அக்பர்' எனக் குரல் எழுப்பி ஆக்கிய சிறு ஆயுதங்கள் மூலம், உலகின் முன் பார்வையாளராகக் காட்சியளித்த ரஷ்ய இராணுவத்தைப் பஞ்சாய்ப் பறக்கச் செய்துவிட்டனர். 'அடித்தது போதும் ஆளைவிடு' என்பதுபோல் ரஷ்ய இராணுவம் எடுத்த ஓட்டம் வரலாற்றில் மற்றொரு இராணுவத்திற்கு ஏற்பட்டிராது!

உண்மையில் ஆப்கானில் நடந்தது ஒரு கொள்கைப் போர், உலகை வழிநடத்தும் தகுதி கம்யூனிஸத்திற்கா? அல்லது இஸ்லாத்திற்கா? என்பதைத் தீர்மானிக்கும் ஒரு பயங்கரப் போர். இந்தப் போரில் கம்யூனிஸத்திற்கு மரண அடி கொடுத்ததன் மூலம் உலகின் வழிகாட்டல் தனக்குரியது என இஸ்லாம் நிரூபித்துவிட்டது.

இஸ்லாமிய ஆப்கானின் பரம அடி ரஷ்யாவின் செம்படை ராணுவத்திற்கு மட்டுமல்ல; அதன் கம்யூனிஸத்திற்கும்தான் என்பதை மாஸ்கோவிலிருந்தும் மற்றைய நாடுகளிலிருந்தும் கம்யூனிஸம் வெருண்டோடுவதிலிருந்து தெளிவாகி விட்டது.

## தீர்க்கதரிசனம்!

கம்யூனிஸத்தின் இந்த வீழ்ச்சி பற்றி மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்கள் 1956 டிசம்பர் 30ம் திகதி கராச்சி [illegible] உரை நிகழ்த்தும்போது, ''இஸ்லாம் எழுச்சிபெறும் வேளையில் கம்யூனிஸம் தன்னை மாஸ்கோவிலேயே பாதுகாத்துக்கொள்ள முடியாது நடுநடுங்கும்!''* என்று தீர்க்கதரிசனமாகக் கூறிவிட்டார். அது இன்று நடக்கிறது. அல்ஹம்துலில்லாஹ்.

உலகில் பல நாகரிகங்கள், கொள்கை கோட்பாடுகள் தோன்றி சில காலம் நிலைத்து பின்னர் மறைந்தன என்பது உண்மைதான். ஆனால், உலகின் பெரும் பாகத்தைத் தன் ஆதிக்கத்தில் வைத்திருந்த கம்யூனிஸம் சரிந்து விழுந்த வேகத்தில் வேறு எதுவும் விழுந்ததில்லை என்பதை வரலாறு சான்றாகத் தருகின்றது.

## மற்றொரு காரணம்

இவ்வாறு கம்யூனிஸம் வீழ்வதற்கு மற்றொரு காரணம் அதன் கொள்கை சார்ந்த குறைபாடேயாகும். அது மனிதனைப் பற்றிக் கொண்ட தவறான கருத்தாகும்.

இறைவனின் படைப்பில் மனிதன் மற்றெல்லாப் படைப்பினங்களை விடவும் சிறப்பானவன்; சிந்திக்கத் தெரிந்தவன்; நல்லது கெட்டதை பகுத்தும் பார்க்கத் தெரிந்தவன்; தன் வாழ்வை தானே தீர்மானித்துக்கொள்ளும் உரிமைப் பெற்றவன்.

கம்யூனிஸம் மனிதனின் இந்த உயரிய நிலையை அங்கீகரிக்க மறுத்துவிட்டது; அவனது சுதந்திரமான முடிவெடுக்கும் தன்மைக்குத் தடை இட்டது. முதலாளித்துவ அமைப்பை இல்லாமலாக்குவதாகக் கூறிக்கொண்டு, ஆட்சியதிகாரமுடைய அரசு முதலாளித்துவத்தை உருவாக்கி விட்டது.

## அரசு முதலாளித்துவம்!

இதைப் பற்றிக் குறிப்பிடுவோர், ''கம்யூனிஸம் என்பது அரசுடைமை முதலாளித்துவ அமைப்பு'' (Communism is a State Capitalism) என்று கூறுவர். உண்மையில், கம்யூனிஸம் ஆயிரக்கணக்கான முதலாளிகளை அழித்துவிட்டு, முழுமையான அரசியல் அதிகாரமும், ஏகபோக உரிமையும்கொண்ட அரசு என்னும் பெயரில் முதலாளியை உருவாக்கி, அவனுக்கு மக்களை அடிமையாக்கியது.

இன்று அடிமைத்தள சங்கிலி அறுத்தெறியப் படுகிறது; கம்யூனிஸத்தின் வெறுமையை உலகம் அனைத்தும் வெற்றுக் கண்களாலேயே பார்க்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

(தொடர்ச்சி 32ம் பக்கம்)

* 'Witnesses unto Mankind', Islamic Foundation, U.K. (1986) Page-42.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைமை

மௌலானா மௌதூதி (ரஹ்)

மனிதன் பின்பற்றி நடக்கவேண்டிய சட்டங்களை இயற்றும் உரிமை அல்லாஹ்வுக்கு மட்டுமே உண்டு என்பது அல்குர்ஆனின் கருத்து. எனவே அவனது வழிகாட்டுதலின்றி மனிதர்கள் பின்பற்ற வேண்டிய சட்டங்களை ஆக்கவும், அவற்றைப் பிரகடனஞ் செய்யவும் அதிகாரம் மனிதனுக்கோ வேறு எப் பொருள்களுக்குமோ கிடையாது. இது அல்லாஹ்வுக்கு மட்டுமே சொந்தமான உரிமையாகும். பொதுவாக இப் பிரபஞ்சத்தின் இயக்கத்துக்கான சட்டங்களை அல்லாஹ்வே வகுத்திருக்கிறான். இதில் வேறு எவரது தலையீடும் இல்லை. இப்பிரபஞ்சத்தில் உள்ள சின்னஞ்சிறிய அணுக்கள் முதல் பெரிய கோள்கள் வரையுள்ள அனைத்துமே அல்லாஹ்வின் சட்டதிட்டங்களுக்கும் அவன் வகுத்துள்ள நியதிகளுக்கும் கட்டுப்பட்டு நடக்கின்றன. இதே போல மனிதனும் அவனது சக்திக்கு அப்பாற்பட்ட விஷயங்களில் அல்லாஹ்வின் நியதிகளையே பின்பற்றி நடக்கிறான். இதில் மனிதனின் விருப்பு வெறுப்புக்கு இடமில்லை. மனித வாழ்க்கையில் அவனது விருப்பு வெறுப்புக்கு ஏற்ப நடக்கும் ஓரளவு சுதந்திரமுள்ள துறைகளிலும் அவன் அல்லாஹ்வின் சட்ட திட்டங்களையே ஏற்றுக்கொண்டு நடக்கவேண்டும் என்று நபிமார்களுக்கு அல்லாஹ் அருளிய வேதங்கள் மூலமாகவும் - அவற்றில் இறுதியான அல்குர்ஆனின் வாயிலாகவும் அவன் மனித இனத்துக்கு உபதேசம் புரிந்திருக்கிறான். இந்த அம்சம் அல்குர்ஆனில் பல்வேறு கோணங்களிலிருந்தும் மிகவும் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. இத்துறையில் பின்வரும் கருத்துக்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

1 இப்பிரபஞ்சத்தின் சிருஷ்டிகர்த்தாவான அல்லாஹ்வே மனிதனின் சிருஷ்டிகர்த்தாவாகவும் இரட்சகனாகவும் இருக்கிறான். ஆகவே பிரபஞ்சத்தில் உள்ள ஏனைய பொருட்களைப் போல மனிதனும் அல்லாஹ்வின் இறைமையை மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

''நிச்சயமாக எனது தொழுகையும் எனது ஏனைய வணக்கங்களும், எனது வாழ்வும், எனது மரணமும் உலகங்களின் இரட்சகனான அல்லாஹ்வுக்காகவே உரியன என்று (நபியே நீங்கள்) கூறுங்கள்.., அல்லாஹ் எல்லாப் பொருட்களுக்கும் ரப்பாக இருக்கையில் அவனல்லாத மற்றொருவனையும் எனக்கு ரப்பாக நான் எடுத்துக் கொள்வதா என்று (நபியே நீங்கள்) கூறுங்கள்...'' (7:163,164)

''நிச்சயமாக உங்கள் ரப்பாகிய அல்லாஹ்தான் வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான்...'' (7:54)

''மனிதர்களின் ரப்பும் மனிதர்களின் அரசனும் மனிதர்களின் கடவுளுமான அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன் என்று (நபியே நீங்கள்) கூறுங்கள்'' (114:1-3)

''வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் உங்களுக்கு ஆகாரமளிப்பவன் யார்? செவிகளையும் பார்வைகளையும் கட்டுப்படுத்துபவன் யார்? இறந்தவற்றிலிருந்து உயிருள்ளவற்றையும் உயிருள்ளவற்றிலிருந்து இறந்தவற்றையும் வெளிப்படுத்துபவன் யார்? சகல காரியங்களையும் திட்டமிட்டு நிகழ்த்துபவன் யார் என்று (நபியே) நீங்கள் கேளுங்கள். அவர்கள் அல்லாஹ்தான் என்று கூறுவார்கள். அப்படியானால் நீங்கள் (அவனுக்குப்) பயப்பட வேண்டாமா என்று கேளுங்கள். மெய்யாகவே அவன்தான் உங்களின் உண்மையான ரப்பு. இந்த உண்மைக்கு அப்பால் வழிகேடன்றி வேறு என்ன இருக்க முடியும்? அப்படியிருக்க நீங்கள் அனைவரும் எங்கு திருப்பப்படுகிறீர்கள். (10:31,32)

2 சட்டமியற்றுதல், நீதி எது என்று நிர்ணயித்தல் என்பன அல்லாஹ்வுக்கு மட்டும் உரிய அதிகாரங்களாகும். அவனது சட்டதிட்டங்களை ஏற்று அவற்றுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியது மனிதனது கடமையாகும். இதுவே மனிதன் மேற்கொள்ள வேண்டிய சரியான வழிமுறை.

''உங்களுக்கிடையில் கருத்து வேறுபாடு ஏற்படும் விஷயங்களுக்கான தீர்ப்பு அல்லாஹ்விடமே உண்டு. எனது ரப்பாகிய அல்லாஹ் அத்தகையவன்; நான் அவனிடமே நம்பிக்கை வைத்திருக்கிறேன். மேலும் நான் அவனிடமே மீளுகிறேன்.'' (42:10)

தீர்ப்பளிக்கும் அதிகாரம் அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியது. நீங்கள் அவனையன்றி வேறு எவருக்கும் வழிபடக் கூடாது என்று அவன் கட்டளையிட்டிருக்கிறான். இதுவே சீரான தீனாகும். ஆனால் மக்களில் பெரும்பாலோர் இதை அறிவதில்லை. (12:40)

''...... இந்த விஷயத்தில் எங்களுக்கும் பங்குண்டா என்று அவர்கள் கேட்கிறார்கள்; அனைத்து

அதிகாரமும் அல்லாஹ்வுக்கே உரியது என்று (நபியே நீங்கள்) கூறுங்கள்.............'' (3:154)

3. சிருஷ்டிகள் அனைத்தையும் படைப்பவன் அல்லாஹ் ஒருவனே. ஆதலால் அவற்றுக்கான சட்டங்களை ஆக்கி அவற்றைப் பிரகடனஞ் செய்யும் அதிகாரமும் அவனுக்கு மட்டுமே உண்டு.

''நிச்சயமாகப் படைத்தலும் சட்டமியற்றலும் அவனுக்கே உரியன'' (7:54)

4. அல்லாஹ் ஒருவனே அனைத்தினதும் உரிமையாளனாகவிருக்கிறான். ஆகவே சட்டங்களை பிரகடனஞ் செய்யும் அதிகாரமும் அவனுக்கு மட்டுமே உண்டு.

''வானங்களினதும் பூமியினதும் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது என்று (நபியே) நீங்கள் அறியவில்லையா......'' (5:40)

5. அல்லாஹ்வின் தீர்ப்பே மிகவும் பொருத்தமானது. ஏனெனில் அனைத்து பொருட்களையும் பற்றிய உண்மையான நிலையை அவனே அறிகிறான். நேர்வழியையும் சரியான நடைமுறையையும் தீர்மானிப்பவனாகவும் அவனே இருக்கிறான்.

''.....ஒரு பொருள் உங்களுக்கு நன்மையானதாயிருந்தும் நீங்கள் அதை வெறுக்கக் கூடும்; வேறும் ஒரு பொருள் உங்களுக்கு தீயதாகவிருந்தும் நீங்கள் அதை விரும்பக்கூடும். (எது எத்தன்மையது என்பதை) அல்லாஹ்வே நன்கறிகிறான். நீங்கள் அறியமாட்டீர்கள்'' (2:217)

''தீயவர், நல்லவர் பற்றி அல்லாஹ் நன்கறிகிறான்'' (2:220)

''அவர்களுக்கு முன்னிருப்பவைகளையும் அவர்களுக்குப் புறம்பாக இருப்பவைகளையும் அவன் அறிகிறான். அவன் நாடியவற்றையன்றி அவனுக்குத் தெரிந்தவற்றில் எதையும் அவர்கள் தெரிந்து கொள்ள முடியாது.'' (2:255)

''நீங்கள் பெண்களைத் தலாக் கூறி அவர்கள் அவர்களுக்குரிய தவணையை அடைந்தால் அவர்கள் தங்கள் துணைவர்களைத் திருமணஞ் செய்துகொள்வதை நீங்கள் தடுக்க வேண்டாம்......அதுவே உங்களுக்கு மிகவும் நன்மையும் மிகவும் தூய்மையானதுமாகும். (இவற்றின் நன்மைகளை) அல்லாஹ் அறிவான். நீங்களோ அதை அறியமாட்டீர்கள்.'' (2:232)

''......உங்கள் பெற்றோர் உங்கள் மக்கள் ஆகிய இவர்களில் உங்களுக்கு மிக்க பயன்படுவோர் யார் என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள். (இந்தப் பங்கீட்டு முறை உங்களுக்கு) அல்லாஹ்வினால் விதிக்கப்பட்ட கடமையாகும். நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிந்தவனாகவும் மிக்க ஞானமுள்ளவனாகவும் இருக்கிறான். (4:11)

(''......தகப்பன், பாட்டன், பிள்ளை, பேரன் ஆகிய வாரிசுகளில்லாத சொத்துக்களைப் பற்றிய சட்டங்களை) நீங்கள் தவறிவிடாதிருக்க அல்லாஹ் உங்களுக்கு தெளிவாக விளக்கியருள்கிறான். நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கறிந்தவன்'' (4:176)

''......வேதகட்டளைப்படி, நெருங்கிய உறவினரில் ஒருவர் மற்றவருக்கு நெருங்கியவர்கள். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவன்'' (8:75)

''(ஸகாத் விநியோகம் பற்றிய இந்த ஏற்பாடு) அல்லாஹ்வினால் விதிக்கப்பட்ட ஏற்பாடாகும். அல்லாஹ் நன்கறிந்தவனும் ஞானமிக்கவனாகவுமிருக்கிறான்.'' (9:60)

''(அனுமதி பெறுவது பற்றிய ஒழுங்கு முறை) விதிகளை இவ்வாறு அல்லாஹ் உங்களுக்கு விளக்குகிறான். அல்லாஹ் நன்கறிந்தவனும் ஞானமுள்ளவனாகவுமிருக்கிறான்.'' (24:59)

''விசுவாசிகளே, (காபிர்களில் உள்ள) ஈமான் கொண்ட பெண்கள் ஹிஜ்ரத் மேற்கொண்டு உங்களிடம் வந்தால் நீங்கள் அவர்களைச் சோதித்துப் பாருங்கள்..... இது அல்லாஹ்வின் விதியாகும். உங்களுக்கு மத்தியில் அவன் இவ்வாறு தீர்ப்பளிக்கின்றான். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவனும் ஞானமிக்கவனாகவுமிருக்கிறான்'' (60:10)

மௌலவி ஏ. எல். எம். இப்றாஹீம்

## மாணவர்களுக்கு விசேட வாய்ப்பு

ஜமாஅத்தின் இந்த வருட தஃவத்துல் குர்ஆன் நிகழ்ச்சியான அறபுக் கல்லூரிகள், பாடசாலைகள், கல்லூரிகள், உயர் கல்விப் பீடங்கள், ஏனையவற்றில் கற்கும் மாண மாணவிகளுக்கென்று தனியாக நடைபெறும்.

விபரங்களைப் பெற தபால் செலவான 1/- ரூபா முத்திரை ஒட்டி, உங்கள் முகவரியை எழுதிய நீண்ட என்வலப்பை உடனடியாக அனுப்புங்கள்.

- தஃவத்துல் குர்ஆன் பகுதி

முடிவு திகதி மார்ச் 10

தஃவத்துல் குர்ஆன் கட்டுரைப் போட்டி, ஸ்டிக்கர்ஸ் போட்டி முடிவு திகதி 10. 3. 90. போட்டி பற்றிய விபரங்களுக்கு அல்ஹஸனாத் 90 ஜனவரி 56ம் பக்கம் பார்க்க.

# இஸ்லாமிய இலக்கியம் என்றால் என்ன?

● இலங்கையிலுள்ள 'ஈமான்' வாசகர்களிடையே சிறுகதைகள் மற்றும் ஆக்கங்கள் மூலம் நன்கு பரிச்சயமுள்ள தாங்கள் நம்மவர் அவர்களுக்கு அறிமுகம் செய்கிறீர்களா?

என் மூதாதையர்கள் சேரனாட்டைச் சார்ந்தவர்கள். ஆனால் நான் வளர்ந்ததும் படித்ததும் எல்லாம் தமிழகத்தில்தான்! திருநெல்வேலி மாவட்டத்தின் உள்ள ஒரு கல்லூரியில் நான் புகுமுக வகுப்பு பயின்று கொண்டிருந்த நேரம் - வாழ்வின் மறக்க முடியாத பருவங்களில் ஒன்றல்லவா கல்லூரிப் பருவம்! சொந்தங்களில் கூடுபட்டு, மேகங்களை நலம் விசாரிக்கும் 'துறு துறு' வயது! அந்த வயதில் தான் - எனக்கு 'இஸ்லாம்' எனும் நேர்வழி கிடைத்தது.

ஷேக் நாகூர் ஹனீப் நண்பர் என்னுடன் ஒரே அறையில் தங்கியிருந்தார். அவரை எல்லோரும் 'முத்து' என்று செல்லமாக அழைப்பார்கள். உண்மையில் எனக்கு அவர் ஒரு 'முத்து' தான்! அந்த முத்திலிருந்துதான் நான் இஸ்லாமியப் பாதையை பெற்றேன்.

ஒரு நாள்... இரவு இரண்டு அல்லது மூன்று மணி இருக்கும். விளக்கு வெளிச்சம் கண்களை உறுத்தவே என் உறக்கம் கலைந்தது. படுக்கையை விட்டு எழுந்தவன் சிறிது நேரம் அப்படியே திகைத்துப் போய் உட்கார்ந்து விட்டேன்.

உலகமே உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் வேளையில், இருளின் கனத்த திரைகள் உலகை அரவணைத்திருக்கும் நேரத்தில், நண்பர் முத்து மட்டும் தன்னை மறந்து, தன் சூழலை மறந்து தொழுகையில் ஈடுபட்டிருந்தார்!

நான் வியப்புடன் அவர் தொழுது முடிக்கும் வரை காத்திருந்தேன். என் மனதில் ஆயிரமாயிரம் எண்ணங்கள்!

'இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் இப்படியும் ஒரு தொடர்பு இருக்க முடியுமா?'

'இதமான இரவு நேர உறக்கத்தையும் உதறித் தள்ளிவிட்டு இந்தப் பின்னிரவில் எழுந்து இறைவனை வணங்குகிறார் எனில் அவருக்கு ஆண்டவன் மீது எத்தனை அன்பு இருக்க வேண்டும்? இந்த அன்பு எப்படி ஏற்பட்டது? எதனால் ஏற்பட்டது? ஏன் ஏற்பட வேண்டும்?

நான் இவ்வாறாக நெகிழ்ந்து கொண்டிருக்கும் போதே நண்பர் தொழுகையை முடித்துவிட்டு இரு கரங்களையும் விரித்து இறைவனிடம் ஏதோ வேண்டுகிறார். உதடுகள் அசைவது தெரிகிறது. கன்னங்களில் கண்ணீர் ஆறாக ஓடுகிறது!

எத்தனை உருக்கம்! எத்தனை நெகிழ்ச்சி! இப்படியும் ஒரு மனிதன் இறைவனை வணங்கி அவனுடைய அருளைப் பெற முடியும் என்பதை அறிந்த போது திகைத்துப் போனேன். அவரிடம் மேலும் நெருங்கிப் பழகி இஸ்லாத்தைப் பற்றி ஓரளவு அறிந்து கொண்டேன். பிறகு வாணியம்பாடியில் முஸ்லிமானேன்.

இது நடந்து ஏறத்தாழ 15 ஆண்டுகள் ஆகிவிட்ட பின்பும்கூட அந்தச் சிலிர்ப்பு என்னுள் அடங்கவில்லை. அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே!

---

**சிறுகதைச் செல்வர் சிராஜுல் ஹஸன் அவர்களுடனான பேட்டி.**

**பேட்டி கண்டவர் ஏ. எல். எம். மன்சூர்**

---

"வானங்களையும் பூமியையும் படைத்தவனே! நீதான் இம்மையிலும் மறுமையிலும் என் பாதுகாவலன். நான் இஸ்லாத்தில் இருக்கும் நிலையிலேயே - முஸ்லிமாகவே என்னை மரணிக்கச் செய்வாயாக! மேலும் என்னை ஒழுக்க சீலர்களுடன் சேர்ப்பாயாக!" (12:101) - இதுதான் என் பிரார்த்தனை.

● எழுத்துத் துறையில் தங்களது ஆர்வம் வளர்ச்சி அடைந்த முறையைச் சொல்கிறீர்களா?

படிக்கும் - எழுதும் ஆர்வம் பள்ளி நாட்களில் தும்பித் தொட்டு. நோட்டுப் புத்தகங்களில் கவிதைகளாக கிறுக்கிக் கொண்டிருப்பேன். என் சிறிய அண்ணன் ஒரு புத்தகப் பிரியர். புகழ்பெற்ற எழுத்தாளர்களது நாவல்களை நிறைய வாங்கி வருவார். ஜெயகாந்தன், அகிலன், நா. பா., சாண்டில்யன் போன்றோரின் எழுத்துக்கள் எனக்கு அப்பொழுதே அறிமுகமாகிவிட்டன. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடல் தொகுதி நூல் ஒன்று எங்கள் வீட்டில் இருந்தது. அதை எடுத்து அடிக்கடி படிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேன். இப்படித்தான் என் ஆர்வம் வளர்ந்தது. இஸ்லாமிய இயக்கத்துடன் என்னை இணைத்துக் கொண்ட பிறகு இயல்பாகவே என்னுள் இருந்த எழுத்தார்வம் இஸ்லாமிய நாடகங்களையும், இஸ்லாமியப்பாடல்களையும் பெற்றது. தொடர்ந்து இத்துறையில் எனக்கு ஊக்கமூட்டி ஆர்வமும் அளித்து வருபவர்களில் 'சமரசம்' நிர்வாக ஆசிரியர் மௌலானா ஜமீல் அஹ்மத் அவர்களுக்குப் பெரும் பங்குண்டு.

● சிறுகதை ஆக்கங்களுக்கான 'கரு'வை எவ்வாறு பெறுகிறீர்கள்?

குர்ஆன் - ஹதீஸ் வெளிச்சத்தில் வாழ்க்கையைச் சற்று கூர்ந்து நோக்கக் கற்றுக்கொண்டால் போதும்-'கரு' கிடைத்துவிடும்..! நம்மைச் சுற்றிலும் ஒவ்வொரு நாளும் எத்தனையோ சம்பவங்கள் நடக்கின்றன. ஒரே சம்பவத்தில் - பல கோணங்களில் - பல 'கரு'க்கள் பொதிந்து கிடப்பதும் உண்டு. சற்று அனுபவமும் பயிற்சியும் வந்துவிட்டால் அவற்றை எழுத்தில் கொண்டுவந்துவிடலாம்.

● ஒரு கருவை அடியாகக் கொண்டு கதை ஆக்கும்போது எத்தகைய உத்திகளைக் கையாளுகிறீர்கள்?

நான் எந்த உத்தியையும் கையாளுவதில்லை. எப்படிச் சொன்னால் அழகாக இருக்கும் என்று நான் நினைக்கிறேனோ அப்படிச் சொல்லிவிடுகிறேன். அதில் ஏதேனும் உத்திகள் இருக்கின்றனவா என்பதை மற்றவர்கள்தாம் சொல்ல வேண்டும்.

● ஒரு சிறுகதை எழுதும்போது தாங்கள் எதிர்பார்ப்பதென்ன?

சிறுகதை என்று மட்டுமல்ல - ஒரு கட்டுரையை எழுதும்போதுகூட அது எத்தகைய தாக்கங்களை எனக்குள் ஏற்படுத்துகிறதோ அந்த தாக்கங்களை வாசகர்களிடம் ஏற்படுத்த வேண்டும் என விரும்புவேன்.

● இஸ்லாமிய இலக்கியம் என ஒன்றுண்டா...? உண்டெனக் கருதினால் அதன் விளக்கம் என்ன?

ஒரு புத்தகம் அளவுக்குப் பதில் சொல்ல வேண்டிய கேள்வி இது. ஆயினும் சுருக்கமாகச் சொல்ல முயல்கிறேன். எது இஸ்லாமிய இலக்கியம், எது இஸ்லாமிய இலக்கியம் அல்ல என்பதற்குச் சில அளவுகோல்கள் உண்டு என்றே நான் கருதுகிறேன்.

தொழிற் புரட்சிக்குப் பிறகு மனித வாழ்வின் வளத்திற்கும் முன்னேற்றத்திற்கும் சார்வாகவாதிகளின் - மேற்கத்தியவாதிகளின் சிந்தனைப் போக்கும் நடைமுறையும்தான் சரி என்ற கருத்து மேலோங்கியது. 'உலகாயத ரீதியில் முன்னேறுவது மட்டுமே வாழ்க்கை, எனும் மாயை உருவாக்கப்பட்டது ! மதமும், ஆன்மீகமும், தார்மீகச் சிந்தனைகளும் பின்னுக்குத் தள்ளப்பட்டு 'பிற்போக்குத்தனமானவை' என்று பறைசாற்றப்பட்டன. 'எல்லாமே இந்த உலகந்தான்; இந்த உலகில் பிறந்தோம்; வாழுகிறோம்; இறந்து விடுகின்றோம்; இதற்குப் பிறகு ஒரு வாழ்க்கை இல்லை. ஆகவே எப்பாடுபட்டாவது - எந்த வழிமுறையைக் கையாண்டாவது - எல்லா இன்பங்களையும் இங்கேயே அனுபவித்துவிட வேண்டும்' என்ற எண்ணம் மேலோங்கியது. இந்தச் சிந்தனைப் பாங்கின் அடிப்படையில் எழுந்த படைப்புகள் அனைத்துமே இஸ்லாத்திற்குப் புறம்பான இலக்கியங்கள் எனலாம்.

இறைவன் ஒருவன் உண்டு; அவனே நம் அனைவரையும் படைத்தவன்; நமக்கு நேர்வழி காட்டுவதற்காகத் தூதர்களையும்வேதங்களையும்அளித்தான். அந்த வழி காட்டுதலுக்கு ஏற்ப வாழ்வது நமது கடமை. மரணத்திற்குப் பிறகு வாழ்க்கை உண்டு; அந்த மறுமை வாழ்வில் நாம் இன்று செய்த ஒவ்வொரு செயலுக்கும் இறைவனிடம் பதில் சொல்லியே ஆக வேண்டும். இந்தக் கொள்கையை ஒரு மனிதன் பின்பற்றி வாழும்போதுதான் இம்மையிலும் மறுமையிலும் வெற்றிபெற முடியும் என்று இஸ்லாம் கூறுகிறது. இந்த அடிப்படையில் உருவான படைப்புகளை இஸ்லாமிய இலக்கியங்கள் எனலாம். நான் இப்படிச் சொல்வதால் ஒவ்வொரு படைப்பிலும் ஏகத்துவத்தையும், மறுமையையும் வலிந்து திணித்து 'தஃவா' செய்ய வேண்டும் என்பதல்ல, மாறாக, இக்கொள்கை அடிப்படையாகக் கொண்டு நுண்மையாகவும், அழகியல் உணர்வோடும் வாழ்வியல் போக்குகளை கவிதையாக, கதையாக, நாவலாகச் சித்தரிக்க முடியும். அவற்றில் வெளிப்படையாக இஸ்லாம், மறுமை என்றில்லாவிட்டாலும் அவையெல்லாம் இஸ்லாமிய இலக்கியங்கள் தாம்!

ஆனால் நம்மில் பலர் இஸ்லாமியக் கொள்கைக்கு முரணாக எழுதப்பட்ட சில புராணங்களையும், பாடல்களையும் - அவையெல்லாம் முஸ்லிம்களால் எழுதப்பட்டுள்ளன எனும் ஒரே காரணத்திற்காக - இஸ்லாமிய இலக்கியங்கள் என்று போற்றுகின்றார்கள். என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை.

● தங்களது எழுத்தின் இலட்சியம்?

இறைநெறியின் போதனைகளை, உயர்வுகளை, அதன் அறிவுரைகளை எளிமையான முறையில் மக்களுக்கு எட்டச் செய்ய வேண்டும். கொள்கை ரீதியான படைப்புகளை உருவாக்க வேண்டும் என்று நிறைய ஆர்வம் இருக்கிறது. இறைவன் அருள் புரிய வேண்டும்.

(தொடர்ச்சி 33ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் அறிமுகம்

# ஐந்து நூல்கள்

காத்தநகர் புஹாரி எம். இப்றாஹீம் M.B.B.S. (M.H) எழுதியவை

"ஸாலிஹ் (ஸல்) அவர்கள் புத்தகம் எழுதித்தான் இஸ்லாமியப் பணி புரிந்தார்களா?" எனக் கேள்வி கேட்கும் சில முஸ்லிம்களுக்கு பதில் தருவதுபோலும், குறுகிய காலத்தில் பல நூல்களைப் படைத்துள்ளார் காத்தநகர் புஹாரி எம். இப்றாஹீம் அவர்கள், அல்ஹம்துலில்லாஹ்.

அருமையான ஐந்து தலைப்புகளில் அவர் வெளியிட்டுள்ள நூல்களுள் 'ஹைமேவாலத் அது ஒரு கேள்வி' என்ற நூல் காத்தான்குடி ரஹுமி மௌலவியின் நூலொன்றுக்கு பதில் அளிப்பதாக அமைந்துள்ளது. 'அல்லாஹ்வுக்கு உருவம் உண்டு!' என்ற ரஹுமி மௌலவியின் கருத்துக்களுக்கு தர்க்கரீதியாக மறுப்பு வழங்கும் வகையில் அதன் கருத்துக்கள் அமைந்து செல்கின்றன.

'மௌலானா மௌதூதி (றஹ்), மௌலானா இல்யாஸ் (றஹ்) இவர்கள் யார்?' என்ற நூல் மற்றொரு நல்ல முயற்சியாக அமைந்துள்ளது. இப் பெரியார்களது பெரு முயற்சிகளையும், அவர்கள் தோற்றுவித்த இயக்கங்களது பணிகளையும் புரிந்து கொள்ளாது சிலர், தாமும் தவறாய் மற்றோரையும் தவறாகச் செயற்பட முனைந்து செயல்படும்போது இத்தகைய நூலொன்று வாசகர்களுக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் சிறந்த பயனுடைய வெளியீடு.

ஆலிமா அவர்கள் இரு பெரியார்களைப் பற்றியும் விரிவாக எழுதாவிட்டாலும் ஒரு சாதாரண வாசகன் எந்த அளவு இவர்களைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டுமோ அந்த அளவு விஷயங்களைத் திரட்டி எழுதியுள்ளார் என்பதை அதைப் படிக்கும் ஒருவர் காண்பார்.

மௌலானா மௌதூதி (றஹ்) அவர்களை, மார்க்கத்தை ஆழமாக ஆராய்ந்து, நல்ல முறையில் கற்றுத் தேர்ந்து அதன் அடிப்படையில் ஒரு சமுதாயச் சமைக்க முஸ்லிம் சமுதாயத்தை காண விரும்பியுள்ளார். அதற்காக அவர் எடுத்த முயற்சிகள், பட்ட கஷ்டங்கள், அனுபவித்த வேதனைகள், கண்ட எதிர்ப்புகள் ஒவ்வொன்றையும்.

அதேபோல மௌலானா இல்யாஸ் (றஹ்) அவர்களும் தமது இறைப் பணியில் கொண்ட முயற்சிகள் சாமான்யமானவையல்ல. இவற்றையெல்லாம் தலைக்கேற்ற தனி நடையில் விளக்கிச் சொல்கிறார் ஆசிரியர் அவர்கள். அமைதியான, பொறுமை, சகிப்புணர்ச்சி என்பவற்றுக்கு இறையாசி பெற்ற பல பத்திரிகைகள் வழங்கியவர்களின் தன்மைகளை மக்கள் மத்தியில் காண்பிக்கும் ஆசிரியர், இவைகள் வெற்றி காரணமாக தனக்கு நேர்ந்த கஷ்டங்களை அனுபவித்தமையும் கூறுகின்றார்.

பொதுவாக இந்நூல் பலரும் வாசிக்கப்பட வேண்டியதாகக் குறிப்பிடலாம். அவரது ஏனைய நூல்களை பார்க்க உண்மைகளை விட்டும் நல்ல கருத்துக்களை வழங்குகின்றன.

இன்று மார்க்கத்தின் பெயரால் கற்பனைகளையும், கட்டுக்கதைகளையும் கொண்ட புத்தகங்கள் ஏராளமாக வெளிவருகின்றன. மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு வழிகாட்டுபவையாக வருபவை மிகவும் சொற்பம். இந்நிலையில் காத்தநகர் புஹாரி எம். இப்றாஹீம் அவர்களது முயற்சி பாராட்டுக்குரியது. பலரும் வரவேற்கத் தக்கது.

மேலும், இக்காலத்தில் எதைப் பிடித்துக்கொண்டாலும் ஏன்? எதற்கு? எப்படி? என்ன ஆதாரம்? என வினா விடுக்கும் காலக்கட்டமாக உள்ளது. இது நியாயமும்தான். வளர்ந்து வரும் அறிவியல் அவ்வாறு வினா விடுக்க அந்தரங்கங்களைத் தூண்டுகிறது.

எனவே, காத்தநகர் புஹாரி எம். இப்றாஹீம் அவர்கள் தமது நூல்களை எழுதும்போது இது பற்றி அதிகக் கவனம் செலுத்தி இருக்க வேண்டும். இவர் தனது நூல்களில் தந்துள்ள கருத்துக்களுக்கு ஆதாரம் வழங்கத் தவறியமையும் ஆதாரமாகக் குறிப்பிட்டுள்ள சில ஹதீஸ்களின் தரம் பற்றிக் குறிப்பிடாமையும் பெருங் குறையாகவே உள்ளது. இனி எழுதும் நூல்களில் இக்குறையை அவர் விட்டுவைக்கமாட்டார் என நம்புகிறோம்.

அவரது முயற்சிகள் பயனுள்ளதாக அமைய வேண்டும் என்பது எம் பிரார்த்தனை.

ஹைமேவாலத் அது ஒரு கேள்வி 30.00
சுன்னா செய்வது எப்படி? 19.50
பெண்களுக்கு மஹர் அவசியமா? 20.50
தாடி முஸ்லிம்களுக்கு அவசியமா? 13.50
மௌலானா மௌதூதி (றஹ்) மௌலானா இல்யாஸ் (றஹ்) இவர்கள் யார்? 25.00

கிடைக்குமிடம்:-
அஜந்தா புத்தகசாலை,
நிந்தவூர் - E.P.

ஏம். ஏ. எம்.

மறந்துவிடாதீர்கள்!
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக்
கொள்ளுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் கடிதங்கள்

ஜனவரி மாதத்தின் 'அல்ஹஸனாத்' சிறந்த தரமான ஆக்கங்களுடன் எங்கள் கரம் கிட்டியது. அதில் பக்கங்கள் அதிகரிக்கப்பட்டிருப்பதால் விலை அதிகரிப்பை லட்சியம் செய்ய முடியவில்லை.

— தஸ்பீக், வலஹபுரை.

சென்ற 'அல்ஹஸனாத்' இதழில் 'குர்ஆனை புறக்கணிக்கலாமா' என்ற கட்டுரையை வாசித்தேன். குர்ஆனை புறக்கணிக்காது அதை அனைவரும் அழைப்புக்கு இணங்கி அதனைப் படிக்கவும் விளங்கவும் அதன்படி செயல்படவும் ஓர் ஆர்வத்தை ஊட்டியது.

— ப. ஜெஸீலா பேகம், தெஹிவளை

சென்ற அல்ஹஸனாத் இதழைப் படித்தேன். அதில் 'முஸ்லிம் சமுதாயத்துக்கு அவசியமான இறுதி எச்சரிக்கை' என்ற கட்டுரை இன்றைய ஆட்சியாளர்களின் முஸ்லிம்கள் பற்றிய பிரச்சினையை தெளிவுபடுத்திச் செய்தது. இதற்கு எனது பாராட்டுக்கள்.

— எஸ். எம். மஹ்ரூப், பொத்துவில்-1.

சென்ற இதழில் 'குர்ஆனிலும் தலைமுடி' என்ற கட்டுரையைப் பார்த்தேன். சகோதரர்களின் இட்டத்திலிருந்து சாதாரணமானவர்களுக்கு ஏற்படக்கூடிய சந்தேகங்களுக்கு பெரும் உதவியாக இருக்கும்.

— தன்ஸா மொய்னுதீன், அக்குறணை

சென்ற இதழைப் படித்து பெரியதொரு சந்தேகத்தைத் தீர்த்துக்கொண்டேன். அதுவே 'குர்-ஆனிலும் தலைமுடி' என்ற விவகாரமாகும். அதில் எழுதப்பட்டிருந்த கருத்துக்கள் என் தோழிகளின் மூட நம்பிக்கைகளை விரட்டியடிக்க உதவியது. நன்றி.

— நிஸாஉனா மக்கீனா, மாவனல்லை

டிசம்பர் இதழில் வெளிவந்த திக்குவல்லை கமாலின் 'நம்பிக்கை' என்னும் சிறுகதை தரமாக இருந்தது. இவ்வாறான சிறுகதைகளை தொடர்ந்தும் எதிர்பார்க்கிறேன்.

— அப்துல் றவூப், மூன்னேருவம்.

நான் ஜமாஅதே இஸ்லாமியைப் பற்றி சரியான முறையில் தெரிந்து கொண்டது கடந்த சில மாதங்களாகத்தான்; அல்ஹஸனாத்தைப் படிக்கும் வாய்ப்பும் இந்த குறுகிய காலத்தில்தான் ஏற்பட்டது.

சென்ற மாத அல்ஹஸனாத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த விடயங்கள் யாவும் வரவேற்கத்தக்கவையாக சிறப்பாக அமைந்திருந்தன. இவற்றை வெளிப்படுத்தக் கூடிய ஆற்றலும் தகுதியும் ஜமாஅதே இஸ்லாமிக்குத்தான் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. வாசக சகோதர சகோதரிகள் அல்ஹஸனாத்தை ரசிப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல் கூடவே ஜமாஅத்துடன் தொடர்பு கொண்டு இஸ்லாமியப் பணியில் ஈடுபாடுடையவர்களாக ஆக வேண்டும்.

— சுஹைனா சஹீத், கொச்சிக்கடை.

உலக முஸ்லிம் வாலிபர்கள் தற்போது இருக்கின்ற நிலைமையின் நிஜத்தைப் பற்றி விளக்குகின்ற அல்ஹஸனாத் பல்லாண்டு வாழ்க.

— எம். எம். நௌஷாத், மன்னார், விடத்தல்தீவு.

## மீளுவியாம்..

(26ம் பக்கத் தொடர்)

ஒரு நாஸ்திகட்டம்!

கம்யூனிஸத்தில் இருந்து விடுபடும் மக்கள் தங்களுக்குக் கை கொடுக்கும் சரியான வழிமுறையைக் காணாததால் மற்றொரு படுபயங்கர வழிமுறையான மேற்கத்திய நாகரீகத்திடம் மீண்டும் சரணடையும் அபாயத்தின் அறிகுறி தென்படுகிறது. இந்த வாய்ப்பிடத்தை போக்க முஸ்லிம்கள் முன்வர வேண்டும்.

### முஸ்லிம்களது கடமை

முஸ்லிம் உலகம் அடிமைகளுக்குரிய விடுதலை நாதமான இஸ்லாத்தை முன்வைக்க வேண்டும். இஸ்லாத்தை பள்ளிக்குள் முடக்கிவிடப்பட்ட மதமாக அல்லாமல், மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து, நீதியாக உலகை ஆளவந்த 'தீன்' வாழ்க்கை நெறி - என்ற ரீதியில் அதனை அறிமுகப்படுத்த வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

அவ்வாறே உங்களை (எந்த, தாழ்வுமற்ற) ஒரு நடு நிலையான சமுதாயத்தினராக நாம் ஆக்கினோம். (ஏனெனில்) நீங்கள் (மனிதர்) மக்களுக்குச் சான்று பகர்பவர்களாக ஆகுவதற்கும், (நபி) தூதர் உங்களுக்குச் சான்று பகர்பவராக ஆகுவதற்கும்."

(அல்குர்ஆன் 2:143)

## பேட்டி...

(30ம் பக்கத் தொடர்)

● உங்களுக்கு ஆர்வம் உள்ள வேறுதுறைகள்?

ஆரம்பத்தில் இசையிலும் ஓவியத்திலும் ஆர்வம் இருந்தது. என் மூத்த அண்ணன் அருமையாக புல்லாங்குழல் வாசிப்பார். சிறு வயதில் அதனைக் கேட்டு வளர்ந்ததால் இசையில் ஒரு நாட்டம் இருந்தது. ஆனால் இஸ்லாத்துடன் என்னை இணைத்துக் கொண்ட பிறகு அந்த ஆர்வத்தைப் புறக்கணித்து விட்டேன். இப்பொழுது படிப்பதிலும் எழுதுவதிலுமே முழு கவனமும் செலுத்துகிறேன்.

● இலங்கை 'சமரசம்' வாசகர்களுக்கு தங்களது செய்தி..

'சமரசம்' இதழை பரவலாக அறிமுகப்படுத்துங்கள். ஒவ்வொரு வாசகரும் ஒரு 'நடமாடும் சமரசமாக' இருக்க வேண்டும்; இதழின் சிறப்பியல்புகளைத் தாமும் பின்பற்றி பிறருக்கும் அதனைத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும்; 'சமரசம்' வாசகர்களுக்கு மட்டுமல்ல, இலங்கை வாழ் முஸ்லிம்கள் அனைவருக்குமே என் அன்பான வேண்டுகோள் இதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. Q B 8907 / 78

# அகில இலங்கை இஹ்ஸானுல் முஸ்லிமீன் அறிமுகம்

## வெளிவந்துவிட்டது! விற்பனையாகிறது!

காத்தநகர் புஹாரி எம். இப்றாஹிம் M.B.B.S. (MH) அவர்களால் எழுதப்பட்டுள்ள

| | |
|---|---|
| மௌலானா மௌதூதி (ரஹ்) மௌலானா இல்யாஸ் (ரஹ்) இவர்கள் யார்? | 25.00 |
| தாடி முஸ்லிம்களுக்கு அவசியமா? | 15.00 |
| உம்றா செய்வது எப்படி? | 20.00 |
| பெண்களுக்கு பர்தா அவசியமா? | 20.00 |
| நோய் தீர்க்கும் மாமருந்து பிஸ்மில்லாஹ் | 25.00 |
| ஹமவோஸ்த் அது ஒரு வேஸ்ட் (எல்லாம் அவனா?) | 32.50 |

**புரட்சி! எழுச்சி! சிந்தனை! எழுத்தின் மூலம் சாதனை!**

காத்தநகர் புஹாரி எம். இப்ராஹிம் அவர்கள் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா இரண்டின் துணையுடன் மட்டும் தனது இஸ்லாமிய நூல்களை எழுதுகிறார்.

**படியுங்கள்! சிந்தியுங்கள்! அல்குர்ஆனையும் அஸ்ஸுன்னாவையும் கடைப்பிடியுங்கள்!**

(வி.பி.பி. கிடையாது. புத்தக விலையுடன் தபால் செலவையும் 3/-ரூபா சேர்த்து போஸ்டல் ஓர்டர் அல்லது மணி ஓர்டர் அனுப்பவும்)

ஏக விநியோகஸ்தர்கள்:

**அஜந்தா புத்தகசாலை**
நிந்தவூர்-5 இலங்கை

கொழும்பு நகரில் விற்பனை இடங்கள்

இலங்கை ஜமா அதே இஸ்லாமி (போபஸ் ரோட், மருதானை), ஹாதி புக் டிப்போ (தெமடகொட ரோட், மருதானை), மௌலானா ஹோட்டல் (2ம் குறுக்குத் தெரு), பாம் லீப் ஹோட்டல் (ஒல்கட் மாவத்தை), குணசேன லிமிடெட் (ஒல்கட் மாவத்தை). பர்வீன் டிரேடர்ஸ், ரகுமதுல்லாஹ் ஸ்டோர்ஸ் (பிரின்ஸ் வீதி, புறக்கோட்டை), ஆயிஷா புக் செண்டர் (மாளிகாவத்தை), சிடி புக் செண்டர் (குணசேன மாவத்தை) ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு தரப்படும். அஜந்தா புத்தகசாலை, நிந்தவூர். E-P

Published by Sri Lanka Jama'ath-e Islami 137, Dewanampiyatissa Mawatha, Colombo-10
Printed at I. P. C. Printing Press, 320, Damatageda Road, Colombo-9 T'phon: 698771

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org